
கல்கி
KALKI 25-10-1959
30 காசு


ரோஜா
மலர்
போன்ற
வதனம்
பட்டுப் போன்ற மென்மையான
விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப்
பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும்.
இணைபிரியாத அதன் ரோஜா மணம் கமகமவென்று
மணிக்கணக்காக உங்கள் மீது கமழ்ந்திருக்கும்.
விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்
வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்
லண்டனிலுள்ள விநோலியா கம்பெனி சார்பாக, இந்துஸ்தான்
லீவர் லிமிடெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.
VRTP.3-50 TM

கல்கி

பொருளடக்கம்

அக்டோபர் 25, 1959

"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



உங்கள் குழந்தைக்கு

இந்நிலை ஏற்பட்டால்

மானேர்ஸ்
கிரைப் மிக்சர்
கொடுத்து,



அது சிரித்து மகிழ்வதைக்கண்டு அனுபவியுங்கள்

உள்ள தரத்தின் இச்சின்னத்தைக் கவனியுங்கள். இது ஒரு மானேர்ஸ் தயாரிப்பு

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. BOMBAY • DELHI • CALCUTTA • MADRAS

ASP/GM-9

தீபாவளியை குதூகலமாகக் கொண்டாட தயாராகிவிட்டீர்களா?



உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை

வெங்கடேஷ் வஸ்திராலயா விலிருந்து

வாங்குங்கள்

பாங்க் ஆப் மைசூர் கட்டிடத்தில் (ஹைகோர்ட்டுக்கு எதிரில்)

ஷோரூம் நெ. 1 இங்கு பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் துணிகள் விற்கப்படும்.

ஷோரூம் நெ. 2 இங்கு பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில் துணிகள் விற்கப்படும்.

சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில்
(நெ. 2, தம்புச்செட்டி தெருவிலிருந்து மாற்றப்பட்டது.)

ஷோரூம் நெ. 3 இங்கு பின்னி மில் துணிகளும் மற்ற துணிகளும் கிடைக்கும்.

தீபாவளிக்கென்று எடுக்கும் துணிமணிகள் அதிக நாட்கள் உழைக்க வேண்டுமல்லவா? நீங்கள் கொடுக்கும் பணத்திற்குத் தகுதியான உயர்ந்த பின்னித் துணிகளை பணிவுடன் சேவை செய்யும் எங்கள் மூன்று ஷோரூம்களிலிருந்து வாங்குங்கள்.

கீழ்கண்ட ரகங்களிலிருந்து உங்களுக்கும், உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தேவையானவற்றை வாங்குங்கள்: ஹேனுவா, சின்னா, மற்றும் ஆன்டிகிரீஸ் சூட்டிங்குகள்; ஷர்ட்டிங்; டஸ்ஸோர், ட்வில்; லண்டலின்; காட்ஸ்வூல்; ஜார்ஜெட், கிரேப் மற்றும் மிருதுவான பட்டுப்புடவைகள்; கேஸ்மெண்ட் துணி; கம்பளிகள், போர்வைகள்; டெர்கியல் டவல்கள்; பின்டெக்ஸ் கைத்தறி வேஷ்டிகளும் படுக்கை விரிப்புகளும்.

எமது வாடிக்கையாளர்களின் நலனைக் கருதி எமது ஷோரூம்கள் அனைத்தும்
25-10-59 ஞாயிறு அன்றும் திறந்து வைக்கப்படும்



மலர் 19	தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற	விகாரி ௵
இதழ் 13	தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்	ஐப்பசி 8உ.

தொழில் பெருக்கமே ஏழைக்கு உதவும்!

உங்கள் வலையில் ஏழைகளைப் பிடிக்கும் கண்ணி இருந்தால் நானும் ஒரு மூலை பிடிக்கத் தயார் என்கிறார்கள் சிலர். சுதந்திரக் கட்சியானது எந்த மீனையும் பிடிப்பதற்கு விரிய வலையல்ல. ஏழைகளை ஆசை காட்டிப் பிடித்து இழுப்பது அரசியல் தொழில் அல்ல. ஏழைகளுக்கு உதவுவது அரசியல் தொழில். ஏமாற்றும் கட்சிகளோடு நாமும் போட்டியிடுவது அரசியல் நேர்மையல்ல.

ஏழைகளுக்கு உதவும் வழி என்னவென்றால், தொழில்கள் உற்பத்தியாவதற்குச் சாதனங்கள் உண்டாக்குவதுதான். வரம்பு கடந்த வரிப்பளுவால் தொழிற்சாலைகள் விருத்தியாவது தடைப்படுகிறது.

புதுத்தொழில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய மூலதனம் வெளியே தலை காட்டுவதில்லை. இப்போது நடைபெறும் சர்க்காரின் போக்குகள்தான் இதற்குக் காரணம். எல்லாப் பணமும், வரிகளுக்கும் சர்க்கார் கடன் பத்திரங்களுக்கும் இரையாகிறது. பல தொழில்களைத் தோற்றுவிப்பதும் பெருகச் செய்வதுமே ஏழைகளைக் கைதூக்கும் வழி. சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் தனிப்பட்டவர்கள் தொழிலில் பணம் போட்டு ஏழைகளுக்கு நிறைய வேலை கொடுக்கச் செய்யும். சர்க்காருக்கும் தனிப்பட்டவர்களுக்கும் இருவருக்குமே தொழில்கள் ஆரம்பிக்கும் சக்தி உண்டு. ஆனால் சர்க்கார் சில இடங்களில்தான் பெருந் தொழிலை ஆரம்பிப்பார்கள். தனிப்பட்டவர்கள் நாடு முழுதும் சிறு சிறு தொழிலை ஆரம்பிப்பார்கள். மூலதனம் இன்றி எந்தத் தொழிலும் ஆரம்பிக்க இயலாது. மூலதனம் திரட்டுவதற்கு வரம்புமீறிய வரிகளும் சர்க்காருடைய பட்சபாதங்களும் கட்டுப்பாடுகளும் கச்சேரிச் சிக்கல்களுமே பெருந் தடைகள். இவற்றை நீக்குவது சுதந்திரக் கட்சியின் கொள்கை. உங்களுக்கு இதைச் செய்வோம் அதைச் செய்வோம் என்பதெல்லாம் லஞ்சமும் மோசமுமே ஒழிய வேறல்ல. நேர்மையான நிர்வாகமே அவர்களுக்கு வசதியும் நியாயமும் கிட்டும்படி செய்யும்.

விவசாயத்தில் தனக்குத்தானே எஜமானனாகவும் தனக்குத்தானே பண்ணையாளாகவும் இருப்பதே உயர்ந்த நிலை. மற்றதெல்லாம் அடிமை நிலைமை. விவசாயத்திலும் வியாபாரத்திலும் தனி மனிதன் சுதந்திரமாகத் தன் தொழிலை நடத்தும்படியான சூழ்நிலை கலைந்து போகாமலிருக்க வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் நோக்கம். பாடுபடுகிறவன் அடிமையாக வேண்டியதில்லை. சுதந்திரத்துடன் பாடுபடுவதே வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும்.

ஏழைகள் கூலி வேலை செய்யலாம். ஆனால் இன்ன கூலி தரவேண்டும் என்று சுதந்திரமாகக் கேட்டுப் பெறும் உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும். அரசாங்கத்தின் கடமை இந்தச் சுதந்திரத்துக்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படுத்தித் தருவது. அரசாங்கமே எஜமான ஸ்தானம் பெற்று மக்கள் அதன் கீழ் கூலி வேலை செய்வது என்பது அரக்க ஆட்சியாகும்.

அரசாங்கம் வரவர மக்களை அடிமைப்படுத்தும் போக்கில் செல்லவிடக் கூடாது. இதற்குத்தான் காங்கிரஸைச் சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

பம்பாயில் சுதந்திரக் கட்சி

பம்பாயில் சுதந்திரக் கட்சியின் ஆதரவில் ஒரு சிறந்த கூட்டம் நடைபெற்றிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் திரு ஏ. டி. ஷராப்பும், உத்தரப் பிரதேசக் கவர்னராக இருந்த திரு எச். பி. மோடி அவர்களும் பேசியதை மக்கள் கவனிக்க வேண்டும்.

நமது நாட்டில் கபிட்சரூஸ்டாக்கப் பெருந் திட்டங்கள்தான் போட வேண்டும் என்பதில்லை. சிறிய சிறிய திட்டங்கள் மூலமாகவே நாம் கோரும் லட்சியத்தை அடைந்து விடலாம். பெரிய திட்டங்கள் காரணமாக வெளிநாடுகளில் ஏராளமாகக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. அடுத்தாற்போல் ஏராளமான காகித நோட்டுக்களை அச்சடித்து வழங்க வேண்டியிருக்கிறது. இவையிரண்டும் சமுதாயத்துக்குப் பெருந் தீங்கு விளைவிக்கும்.

இப்பொழுதே நாட்டில் இரண்டு திட்டங்களின் காரணமாக உண்மையான பொருள் உற்பத்தி ஏற்படவில்லை. ஆனால் வெளியில் விட்ட காகிதப் பணம் பொருள்களின் விலை வாசிகளை நாள்தோறும் உயர்த்திக்கொண்டே போகின்றது. வரிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. இன்று நாட்டில் பாமர மக்கள் ஏழு எட்டு வருஷங்களுக்கு முன் செலுத்தி வந்ததைவிட ஐந்து அல்லது ஆறு மடங்கு அதிகமாக வரி செலுத்துகிறார்கள் என்று ஏ. டி. ஷராப் விளக்கினார்.

சுதந்திரக் கட்சியானது, திட்டம் போடுவதையே ஆட்சேபிக்கவில்லை. இப்பொழுது நாட்டில் நிறைவேற்றி வரும் திட்டங்களையும் முறைகளையும் தான் சுதந்திரக் கட்சி ஆட்சேபிக்கிறது என்று எடுத்துக் காட்டினார்.


திரு மோடி அவர்கள் சுதந்திரக் கட்சியின் மீது ஆளும் கட்சியார் கூறும் குறைகளுக்கெல்லாம் ஆணித்தரமான பதில் அளித்தார்.

சுதந்திரக் கட்சி முதியவர் கட்சி என்று சொல்லப்படுகிறது. ராஜாஜியை இந்தக் கட்சியின் ஸ்தாபகர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறோம். முதியவரான அவருக்கு இருக்கும் சுறுசுறுப்பும் உற்சாகமும் உணர்ச்சியும் அவருடைய வயதில் பாதி வயது அடைந்த பலருக்கு இருப்பதில்லை!

இக்கட்சியிலுள்ள மற்றத் தலைவர்கள் வயதுகளைக் கூட்டிச் சராசரி பார்த்தால் காங்கிரஸ் கட்சியில் அதிகாரம் வகிப்பவர்கள் சராசரி வயதுக்குமேலிராது; குறைந்ததாகவே இருக்கும்.

பெருந் தொழிலதிபர்கள் காங்கிரஸுக்கும் பயந்து கொண்டு நடுங்குவதைக் குறிப்பிட்டார். காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்கள்தான் —மந்திரிகள், உதவி மந்திரிகள், எம்.பி.க்கள், எம். எல். ஏ. க்கள் இவர்கள்தான் - தங்கள் பதவியை விடாமல் இருப்பதற்கு என்ன வெல்லாமோ செய்கிறார்கள். சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள், அவரவர்களுக்குரிய வேலைகளை யோக்கியமாகச் செய்துகொண்டு வாழ்பவர்கள் என்று பதில் அளித்தார்.

யாருடைய வழி சரியல்ல?



என்ன சேதி?

ஸ்ரீ பிரகாசாவின் எச்சரிக்கை

பம்பாய் கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்கள் சமீபத்தில் அகமதாபாத்தில் பின்வருமாறு பேசியிருக்கிறார்:

"வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் சர்வசக்தி வாய்ந்த அரசாங்கத் தலையீட்டை வலியுறுத்துவது கம்யூனிஸ சித்தாந்தம். இந்தியாவிலும் இதற்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். எனவே மக்கள், குறிப்பாக மத்தியதர வகுப்பினர் பெருகி வரும் அரசாங்கக் குறுக்கீடுகள் குறித்து உஷாராக இருக்க வேண்டும்" என்று திரு ஸ்ரீபிரகாசா கூறினார்.

இந்தியாவின் செல்வவரி விதிப்பை அப்படிப்பட்டதொரு நடவடிக்கையென அவர் வர்ணித்தார். தங்களிடம் உள்ள நகைகளைப் பற்றிக் கணவன்மார்களிடம் சொல்லாத நமது பெண்மணிகள் இப்பொழுது அதிகாரிகளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதுமட்டுமன்றி இத்தகைய போக்கை எதிர்த்து நின்று ஜனநாயகத்தை நம் நாட்டில் நிலைநாட்ட மத்தியதர வகுப்பினர் முன் வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பம்பாய் கவர்னர் ஸ்ரீபிரகாசா அவர்களின் பேச்சு, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லும் குறையையே எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது!

காங்கிரஸின் போக்கைக் கண்டு உண்மையைச் சொன்னார். இப்படி உண்மையைச் சொல்ல விரும்பும் பழம் பெரு காங்கிரஸ்காரர்களைத்தான், புது காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமதி இந்திரா காந்தி 'கட்சியை விட்டு வெளியேறுங்கள்' என்று சொல்லுகிறார்.

மனுபாய் போட்டபோடு!

ஸ்ரீ பிரகாசாதான் இப்படிப் பேசுகிறார் என்றால் நேருஜியின் கீழ் தொழில் மந்திரியாக இருக்கும் ஸ்ரீ மனுபாய்ஷாவும் மத்திய சர்க்காரிடம் ஏராளமாக அதிகாரங்கள் குவிந்து சர்வசக்தி வாய்ந்ததாகி விட்டதென்றும், இந்நிலையில் ராஜ்ய சர்க்கார்கள் மத்திய சர்க்காரிடம் கையேந்தி நிற்கும் காட்சியைக் காணப் பரிதாபமாக இருக்கிறதென்றும் கூறி ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விட்டிருக்கிறார்!

நமது அரசியல் நிர்ணயச் சட்டம் மாகாணங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்றுதான் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் ராஜ்யங்கள் எப்பொழுதும் மத்திய சர்க்காரையே நம்பி வாழும் நிலை ஏற்பட்டு விட்டது. இதற்குக் காரணம், மத்திய சர்க்காரிடம் பணம் குவிவதும், அதனை ராஜ்ய சர்க்கார்கள் மான்யங்களாகப் பெற்று வருவதுமே என்று கூறுகிறார். ராஜ்ய சர்க்கார் வசமிருக்கும் விற்பனை வரிபோடும் உரிமையையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளத் தீவிரமாக யோசித்து வரும்போது, மாகாணங்கள் இன்னும் அதிகமாக மத்திய சர்க்காரைச் சார்ந்து வாழ வேண்டியதாகத்தான் இருக்கும்! எனினும் மத்திய சர்க்காரின் இந்தப் போக்கை, மத்திய சர்க்கார் மந்திரியாக இருந்துகொண்டே துணிச்சலாக எடுத்துக் கூறியதற்கு அசாத்தியத் தைரியம் வேண்டும். ஸ்ரீமதி இந்திரா காந்தி மனுபாய் ஷா மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

திருப்பதியில் நேருஜி

நேருஜி சமீபத்தில் திருப்பதி–திருமலைக்குச் சென்றார். கோவில் அதிகாரிகள் அவருக்கு உபசாரம் செய்து சுவாமி தரிசனம் செய்வித்தனர். ஸ்ரீ நேருஜிக்கு நம்முடைய தெய்வ பக்தி முறைகளும் வழிகளும் அதிகமாகப் பிடிக்காது. ஆயினும் நேருஜியின் தரிசனம் வேங்கடாசலபதிக்குக் கிடைத்தது! சமீபத்தில் கூடக் கிரகண காலத்தைப் பூஜைக்குரிய காலமாக அனுஷ்டிப்பதை நேருஜி கண்டித்

SWARAJYA... Edited by KHASA SUBBA RAU

The well known English Political Weekly of India - Published Every Saturday

Read in the Issue dated 24-10-59

CENTRAL PLANNING	— *Leader*
CEILINGS AND INFLATION	— *C. Rajagopalachari*
COLLECTIVE FARMING IN HUNGARY	— *Dora Scarlett*
TENTACLES OF DOCTRINAIRE ECONOMICS	— *Phiroze J. Shroff*

Single Copy 15 nP. — Annual Subscription Rs. 7.50; Half Yearly Rs. 4/-

Ensure your copy of Swarajya with the local distributors of the Swarajya and the Kalki

Copies can also be had from all Railway Book Stalls

Manager, Swarajya Office, Kalki Buildings, Madras-10

தார். சந்திர மண்டலத்துக்கு ராக்கெட் விடும் இந்தக் காலத்தில் இவையெல்லாம் பொருந்தாது என்று சொன்னார். இருந்தாலும் திருப்பதி மலையும் அதனைச் சுற்றியிருக்கும் மலைகளும் இயற்கைக் காட்சிகளும் அவர் உள்ளத்தைப் பரவசப் படுத்தியதாகக் கூறினார்.

மலையையும் மரத்தையும் கண்டு உள்ளத்தைப் பறி கொடுக்கும் திறம் படைத்தவன் இறைவனுக்கு நெருங்கியவனாவான் என்பது நமது முன்னோர் வாக்கு.

ஒருவர் மலையையும் மேகத்தையும் வான் முகட்டையும் நட்சத்திர மண்டலங்களையும் பார்த்தால் பராசக்தி மனத்தில் பதியும். அத்துடன் ஒப்பிடும்போது, மனித சக்தியும், ராக்கெட் கண்டுபிடித்த மனிதனின் அறிவும் சாமர்த்தியமும் எவ்வளவு அற்பமானவை என்று தோன்றும். ஆணவம் அடங்கிவிடும். இதனாலேயே நம் முன்னோர்கள் குன்றுகளின் மீதும் நதிக்கரைகளிலும் சமுத்திரக் கரைகளிலும் தேவாலயங்களை நிர்மாணித்தார்கள்.

திட்டக்கமிஷன் உத்தரவு

நில உடைமைக்கு வரம்பு கட்டும் விஷயம் ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்பு. மத்திய அரசாங்கமோ, திட்டக்கமிஷனோ ஆலோசனை சொல்லக் கூடுமே தவிர நிர்ப்பந்தம் செய்யக் கூடாது. ஆனால் நடைமுறையில் நிலைமை வேறு என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

ஆந்திர ராஜ்யம் நில உடைமைக்கு உச்ச வரம்பு 5400 ரூபாய் ஆண்டுக்கு வருமானம் கிடைக்கும் அளவில் நிர்ணயித்து மசோதாவும் நிறைவேற்றியுள்ளது. இதை அங்கீகரிக்கும்படி மேலிடத்துக்கு எடுத்துச் சென்றபோது "3600 ரூபாய் வருமானம் வரக் கூடிய அளவில் வரம்புகட்டினால் போதும்; இதர ராஜ்யங்களிலும் இருப்பது போல் ஒரே சமமாக ஆந்திராவிலும் இருக்க வேண்டும்; வரம்பைக் குறைக்கவும்" என்று திட்டக் கமிஷன் உத்தரவிட்டிருக்கிறது.

நிலத்தின் தரம் ராஜ்யத்துக்கு ராஜ்யம் மாறும், வருமானமும் இடத்துக்கு இடம் மாறுபடும், சமத்துவம் இவ்விஷயத்தில் கடைப்பிடிக்க முடியாது என்றெல்லாம் ஆந்திரப் பிரதமர் எவ்வளவுதான் எடுத்துக் காட்டியும் திட்டக்கமிஷன் காதில் ஏறவில்லை. ராஜ்ய அரசாங்கத்தின் உரிமை, பொறுப்பு, அதிகாரம் முதலியவை பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று அரசியலார் செய்யும் அட்டகாசம் எந்த வரம்புக்கும் கட்டுப் பட்டதாகத் தெரியவில்லை. விவசாயக் குடும்பங்களைத் தங்கள் இஷ்டப்படி யெல்லாம் சின்னாபின்னப்படுத்த நமது காங்கிரஸ் அரசாங்கமும், திட்டக் கமிஷனும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்களென்று சொன்னால் மிகையாகாது. இன்றைக்கு 3600 ரூபாய் வருமானம் கிடைக்கக் கூடிய அளவு நிலம் ஒரு குடும்பத்துக்குப் போதும் என்பார்கள். நாளை 2000, அல்லது 1000 ரூபாய் வருமானம் கிடைக்கும் நிலம் போதும் என்று சொல்ல மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

நாளுக்கு நாள் பண வீக்கத்தின் காரணமாக விலைவாசிகள் உயர்ந்து கொண்டே செல்லுகின்றன. எவ்வளவு வருமானம் கிடைத்தாலும் வாழ்க்கைச் செலவைச் சரிக்கட்ட முடியாமலிருக்கும் நிலைமையில் விலைவாசிகளைக் குறைக்கவும் வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்கவும் சர்க்காரால் முடியவில்லை. உழைத்துப் பாடுபடும் விவசாயி மக்களின் வருமானத்துக்கு மட்டும் வரம்புகட்டுவதில் அவர்கள் காட்டும் உற்சாகம் தலைகால் தெரியவில்லை!

வேலூரில் மகாநாடு

சுதந்திரக் கட்சியின் வடஆற்காடு மகாநாடு அக்டோபர் 25ந் தேதி வேலூரில் நடைபெறும். அதில் ராஜாஜி கலந்து கொள்வார்.

சென்னை மகாநாடு

சென்னை ஜில்லா சுதந்திரக் கட்சியின் மகாநாடு சென்னை கார்ப்பரேஷன் கட்டடத்துக்கு அருகிலுள்ள எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் அக்டோபர் 31ந் தேதி நடத்த ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இந்த மகாநாட்டைச் சுதந்திரக் கட்சியின் தலைவர் ஆசார்ய ரங்கா அவர்கள் துவக்கி வைப்பார். இந்த மகாநாட்டுக்குப் பம்பாய் தலைவர் எம். ஆர். மஸானி அவர்கள் தலைமை வகிப்பார்.

ராஜாஜியும் வி. பி. மேனன் முதலிய பல தலைவர்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைத் தற்போது ஏறத்தாழச் சென்னை நகர மக்கள் நன்கு அறிவார்கள். இக்கட்சி நாட்டுக்கு நலம் புரியும் என்ற நம்பிக்கை சென்னை நகர மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த மகாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டியும் ஏற்பாடாகியிருக்கிறது. ரூ. 25 செலுத்தி வரவேற்புக் கமிட்டி அங்கத்தினராகலாம்.

சுதந்திரக் கட்சியின் அங்கத்தினராகச் சேர்ந்தவர்கள் யாதொரு கட்டணமுமின்றி இந்த மகாநாட்டுக்கு வரலாம்.

பார்வையாளர்களுக்கும் தனி வசதி செய்யப்படும்; எட்டு அணா செலுத்தி மகாநாட்டுக்கு வந்திருந்து முழு நடவடிக்கைகளையும் காணலாம்.

மகாநாடு முடிந்தபின் அவ்விடத்திலேயே மாலை 5-30 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெறும். அதற்கு யாதொரு கட்டணமும் இன்றிப் பொதுமக்கள் விஜயம் செய்யலாம்.

தஞ்சையிலும் மகாநாடு

சுதந்திரக் கட்சி மகாநாடு நவம்பர் 1ந் தேதி தஞ்சையில் நடைபெறும். ராஜாஜியும், மஸானி அவர்களும், ஆசார்ய ரங்கா அவர்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

இப்படி தமிழ்நாட்டில் மகாநாடுகள் நடைபெறுவது சுதந்திரக் கட்சிக்கு நல்ல ஆதரவு பெருகி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

ஆயுர்வேதக் குழு

மத்திய அரசாங்கத்தார் "மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சிக் கமிட்டி" என்ற ஒரு குழுவை நிறுவியுள்ளனர். பல்வேறு ராஜ்யங்களிலும் ஆயுர்வேத முறைகளின் தராதரத்தை அறிந்து தெளிய நடந்து வரும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு மத்திய அரசாங்கம் எவ்வகையில் எம்மட்டும் உதவி புரிதல் தகுதியாகும், அந்நிலையங்கள் எவ்வகையில் தமது செயலினை ஆற்ற வேண்டும் என்பன போன்ற விஷயங்களில் மத்திய அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்வதும் மேற்கண்ட நிலையங்களில் நடக்கும் ஆராய்ச்சிகளின் தராதரத்தைச் சீர்தூக்கிப் பார்த்துத் தக்கவற்றையெல்லாம் ஒன்று திரட்டவும் - அந் நிலையங்களிடையில் ஒன்றேடொன்று ஒரு தொடர்பை ஏற்படுத்தவும் இந்தக் குழு பணியாற்றும்.

நாட்டு வைத்திய முறைகளின் தரத்தை மேநாட்டு வைத்திய விஞ்ஞானிகளும் ஏற்கும் வண்ணம் ஆராய்ச்சி பூர்வமாகத் தெளிந்த அறிவைத் தெரிவித்தல் நாட்டு வைத்திய முறைகளின் முன்னேற்றத்துக்குரிய ஒரு சீரிய முயற்சியாகும். இந்தத் துறையில் பணியாற்ற இக்குழுவை மத்திய அரசாங்கம் நிறுவியது ஒரு நற்பணியாகும்.

இக் குழுவில் ஒரு அங்கத்தினராகச் சென்னை ராஜ்யத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் ஸ்ரீ எம். வி. வேங்கடராகவன் அவர்கள்!

அவர்கள் சென்னை இணைப்பு வைத்தியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிச் சமீபத்தில் ஓய்வு பெற்றவர்.


அவர் வைத்திய அனுபவமும், வைத்திய சாஸ்திர ஞானமும், தற்கால மேனாட்டு முறைகளும் நன்கு அறிந்தவர். அத்தகையவரை இக் குழுவில் சேர்த்தது நல்ல பயன் விளையலாம் என்ற நம்பிக்கையை யூட்டுகிறது.

ஸ்ரீமான் எம். வி. வேங்கடராகவன் அவர்களை தொண்டுகளைக் கல்கி வாசகர்கள் நன்கு அறிவார்கள். அவர்தான் கல்கியில் வாரந்தோறும் ஸ்ரீஹரி என்ற புனை பெயரில் அருமையான நாட்டு வைத்தியக் கட்டுரைகள் எழுதிப் பல்லாயிரக்கணக்கான மக்களின் நோய் நொடிகளைத் தீர்த்து வருகிறார்.

இத்தகையவரை மத்திய சர்க்காரின் குழுவில் சேர்த்திருப்பது பற்றிக் கல்கி வாசகர்களுடன் நாமும் பெருமைப் படுகிறோம்.

இத்தகைய அறிஞரின் அறிவையும் ஆற்றலையும் சென்னை சர்க்கார் முழுதும் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டது பற்றி வருந்துகிறோம். சென்னை சர்க்காரின் நஷ்டம் மத்திய சர்க்காருக்கு லாபகரமாக முடிந்திருக்கிறது.

உள்ளும் புறமும்!



அரசாங்கத்து அரிசிக் கடை

குடியானவன் உழுது நெல் விதைத்து நீர்பாய்ச்சிக் களை எடுத்து நெல்லை அறுவடை செய்கிறான். மொத்த வியாபாரி அவனிடம் நெல்லை விலைக்கு வாங்கி நகரங்களுக்கு எடுத்துச் செல்லுகிறான். இடையே மில் வைத்திருப்பவர் வியாபாரிக்காகவோ, அல்லது தானுக வாங்கிய நெல்லையோ அரிசியாக்குகிறான். விளையும் இடத்திலிருந்து ரயிலிலோ, லாரியிலோ சரக்கு வெளியிடங்களுக்குப் போகிறது. அங்கு மண்டியில் மொத்த வியாபாரி சில்லறை வியாபாரிக்கு விற்கிறான். சில்லறை வியாபாரி பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறான். குடியானவன் அரைப்படி, கால்படி என்று விற்பனை செய்வதில்லை. அரசாங்க வியாபாரத்திலும் மொத்தமாக வாங்கி, மில்லில் நெல்லை அரிசியாக்கி ரயிலேற்றி மண்டியில் வைத்துச் சில்லறைக் கடைகளுக்கு அனுப்பித்தான் வியாபாரம் செய்தாக வேண்டும். இந்த வெவ்வேறு அலுவல்களைச் செய்யச் சிப்பந்திகள் தேவை. அவர்கள் ஒருவரும் கௌரவப் பணி ஆற்ற முன்வரப் போவதில்லை. இப்பொழுது தனித் தொழில் முறையில் இந்த வேலைகளைச் செய்யும் ஆட்களை அகற்றிவிட்டு அவர்களுக்குப் பதிலாகப் பல அரசியல் சிப்பந்திகளை வைத்து வியாபாரம் செய்வதால் யாருக்குப் பயன்?

பத்துப் பேருக்கு வேலை போய், பத்துப் பேருக்கு வேலை கிடைத்தால் சமூகத்துக்கு என்ன சௌகரியம்? விற்பனையில் பயிற்சி பெற்றவரைத் தள்ளிவிட்டு ஆபீசில் வேலை செய்யும் ஆட்களை அரிசி விற்பனை செய்யும்படி ஏவினால் அந்த வியாபாரம் எப்படி நடக்கும்?

யாராவது அரிசியை மூட்டை மூட்டையாக அடுக்கி வைப்பார்களா? மழையும் வெய்யிலும் அதிகமான நாட்களில் நெல்லைத்தான் சேமித்து வைக்க முடியும். அதுவும் சிறிய குவியலாகத்தான் வைக்க வேண்டும். காற்று செல்லுமாறு வசதி இருக்க வேண்டும். இதையெல்லாம் அறிந்துதான் நம் நாட்டில் நெல் குதிர்களை வைக்கோலினால் செய்து சாணி வைத்து மெழுகி வருகின்றனர்; இல்லையேல் மரத்தில் பத்தாயங்கள் செய்து அவைகளில் சேமித்து வைக்கின்றனர். மரப் பத்தாயங்களுக்குச் சிறிய கண்கள் உண்டு. அவை வழியாகக் காற்று செல்லும். இதை விட்டுவிட்டு, நகரங்களில் தகரக் கொட்டகைகளில் ஆயிரக்கணக்கான அரிசி மூட்டைகளை அடுக்கி வைத்தால் இரண்டே மாதங்களில் வெந்து மாவாக மாறி உண்பதற்கு உபயோகமில்லாது வீணுகின்றன. இந்த அனுபவம் இதற்கு முன்பே அரசாங்கத்துக்கு உண்டு. ஆனால் பட்டும் தெரியாதவர்களுக்கு என்ன சொல்லியும் பயன் இல்லை.

சில்லறை வியாபாரிகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர். அவர்களுக்கு அலுவல் நேரம் கிடையாது. எப்பொழுதும் கேட்பவர்களுக்கு விற்கச் சித்தமாக இருப்பார்கள். தங்களுடைய வீட்டின் முன்புறத்திலேயே கடை வைத்திருப்பார்கள். அக்கம் பக்கத்தில் குடியிருப்பவரை நன்கு அறிவார்கள். அவரவர்களுடைய நாணயத்துக்குத் தகுந்தவாறு கடன் கொடுப்பார்கள். சில்லறை வியாபாரிக்கு நாற்காலி, மேஜை, சிப்பந்தி, கணக்குப் புத்தகம், பில் புத்தகம் ஒன்றும் கிடையாது. (சில ஆண்டுகளாகத்தான் வர்த்தக வரி அதிகாரிக்குக் காண்பிக்க ஒன்றிரண்டு கணக்குகளை வைத்திருக்கின்றனர்) அவர்களுக்கு ஒரு சாமான் மாத்திரம் அல்ல விற்பனை. பல சாமான்களை விற்பதால் ஒன்றில் வரும் நஷ்டத்தை மற்றொன்றில் ஈடு செய்து கொள்வார்கள். மொத்தத்தில் அவர்கள் தொழில் குறைந்த வருமானத்துக்குப் பெரும் முயற்சி என்றே சொல்ல வேண்டும்.

இவர்களை ஒழித்துவிட்டு அரிசிக்கு மட்டும் ஒரு விலை போட்டுக் குறித்த நேரத்தில் மட்டும் செய்யும் கூட்டுறவு வியாபாரம் விலையை ஏற்றுமே அன்றிக் குறைக்காது. இதென்ன கூட்டுறவு? இது அரசாங்க அரிசிக் கடையேயன்றி வேறில்லை. இதனால் பொதுமக்களுக்கு அனேகம் கஷ்டங்கள் உண்டு. விலை ஏறும். வரி போட வசதியும் அரசாங்கத்துக்குக் கிடைக்கும்.

இந்த வேண்டாத மாறுதலை மறுக்க வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை.

தீபாவளிக்குரிய அலங்காரம்



ஹாண்ட்லூம் ஹவுஸ் 9, ரட்டன் பஜார், சென்னை-3

இன்றைய மோஸ்தர் இதுவே

221, தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய்-1 - 2 லிண்ட்ஸே ஸ்ட்ரீட், கல்கத்தா-16

அயல்நாட்டு விற்பனையாலயங்கள்

ஏடன் ★ கொழும்பு ★ கோலாலம்பூர் ★ சிங்கப்பூர் ★ பாங்காக்

தலைமை ஆபீஸ்: ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பாப்ரிக்ஸ் மார்க்கெடிங் கோ-ஆபரேடிவ் சொஸைடி லிமிடெட், ஜென்மபூமி சேம்பர்ஸ், போர்ட் ஸ்ட்ரீட், பம்பாய்-1

சுந்தரியின் சாகசம்

சுந்தரிக்குத் தன் அழகிலே அபார நம்பிக்கை உண்டு. அவள் கணவர் அவளை மணந்து கொண்டதே அவள் அழகுக்காகத்தான். அவள் கணவர் மோகனுக்குச் சுந்தரியிடத்தில் அளவில்லாத அன்பு. ஆகையால் அவளை எல்லாவிதத்திலும் மேன்மையாகவே நடத்தி வந்தார். அவள் கேட்டு வாய் மூடுமுன்பே அவளுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார் மோகன். எங்கெங்கோ தேடி ஜாதி முத்துக்களும், வைரங்களும், ரத்தினங்களும் பொறுக்கி எடுத்து விதவிதமான அபூர்வ நகைகளையும் ஆபரணங்களையும் கொண்டு வந்து அவளுக்குப் பூட்டி அவளையும் மகிழ்வித்துத் தானும் ஆனந்தத்தில் மூழ்கினார்.

இவ்வளவு செய்தும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் சுந்தரியைத் திருப்தி செய்ய அவள் கணவரால் முடியவில்லை. அவர் டில்லிக்கும், பம்பாய்க்கும், கல்கத்தாவுக்கும் போகும் போதெல்லாம் அங்கிருந்து விலையுயர்ந்த புடவைகளை வாங்கிக் கொண்டு வந்து இந்தத் தீபாவளிக்காக அவளுக்குச் சமர்ப்பித்தார். சுந்தரியின் நாட்டம் அவை ஒன்றிலும் செல்லவில்லை. ஒரு புடவைகூட அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒன்று கலர் பிடிக்கவில்லை; இன்னொன்று 'டிசைன்' பிடிக்கவில்லை; மற்றொன்று கரை அழகாக இல்லை; சுந்தரியின் எத்தனையோ ஆசைகளையெல்லாம் அறிந்து நிறைவேற்றிய அவருக்கு இந்தப் புடவை ஆசையை நிறைவேற்ற முடியவில்லையே என்ற தவிப்பு ஏற்பட்டது.

இந்த நெருக்கடியான நிலைமையில்தான் சுந்தரியின் பழைய தோழி சாரதா வந்து சேர்ந்தாள். "என்ன சுந்தரி ஒரு மாதிரி இருக்கிறாயே! எதற்காக இத்தனை ஏக்கம்?" என்று சாரதா சுந்தரியைக் கேட்டாள்.

"ஒன்றும் பிடிக்கவில்லை போ! இந்தத் தீபாவளிக்கு எனக்குப் பிடித்த புடவை ஒன்றுகூட கிடைக்கவில்லை சாரதா!" என்றாள்.

"உனக்கு நெசவாளர் தனியாக சிருஷ்டித்து அல்லவா கொடுக்க வேண்டும்! நீதான் சாதாரணமாக எங்களைப் போலுள்ளவர்கள் விரும்பும் சாதாரண மோஸ்தர் புடவைகளை விரும்புவதில்லையே! உனக்குத் தனி மாதிரி, விசித்திர டிஸைன்கள், கலர்கள்தானே பிடிக்கும்!" என்று பரிகாசஞ்செய்தாள் சாரதா.

"சாரதா! அது இருக்கட்டும்! நீ கட்டிக் கொண்டிருக்கிறாயே இந்தப் புடவை கலர், பாட்டர்ன் எல்லாம் மிக நன்றாய் இருக்கிறதே! இதை எங்கே வாங்கினாய்?" என்று தன் புடவையைச் சுந்தரி பாராட்டியது சாரதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இதுவா? தான் போன தீபாவளிக்கு வாங்கினது! இன்னும் அப்படியே பளிச்சென்று இருக்கிறது. இது பழைய கால பாட்டர்ன் அல்லவா? உனக்கு இது பிடிக்கிறதா?"

"சொன்னால் நீ நம்பமாட்டாய்! இது என்ன தெரியுமோ? கதர்ப் பட்டு!"

"நிஜமாகவா? கதர் பட்டில் இவ்வளவு நல்ல புடவைகள் கிடைக்கிறதா? எங்கே?" என்று ஆவலுடன் கேட்டாள் சுந்தரி.

"இது சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில் வாங்கினேன். இது சாதாரணம் தான். இன்னும் வேண்டுமானால் நல்ல நல்ல ரகங்கள், மோஸ்தர்களில் கிடைக்கிறது.

"கும்பகோணம், காஞ்சீபுரம், வேலூர், ஆரணி இந்த இடங்களில் எல்லாம் இப்போது சென்னை அரசாங்க கதர்ப்பட்டு ரகங்கள் நெய்கிறார்கள். நான் இந்தப் பட்டுப் புடவைகள் தான் வாங்குவது! இந்த தீபாவளிக்குக்கூட எனக்கு, மீனுவுக்கு, குழந்தைகளுக்கு எல்லாம் நல்ல கதர்ப்பட்டுதான் வாங்கினேன். ஏன்? என் வீட்டில் இவர்கூட இந்தத் தீபாவளிக்குப் பூராவும் கதர்தான் வாங்கியிருக்கிறார்!" என்று தெரிவித்தாள் சாரதா.

"தேவலையே! ஆனால் விலை?" என்று சுந்தரி ஒரு கேள்வி கேட்டாள். "விலை ரொம்ப சல்லிசு. இப்போதான் இந்தமாதிரி கதர்ப்பட்டு ரகங்களுக்கு ரூபாய்க்கு மூன்றரை யணா 'ரிபேட்' கொடுக்கிறார்கள். மற்ற கதர் ரகங்களுக்கு ரூபாய்க்கு ஐந்தணா 'ரிபேட்' கிடைக்கிறது! விலையைப்பற்றி உனக்கென்ன கவலை?" என்றாள் சாரதா.

"அப்படியானால் என்னை சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்துக்கு அழைத்துப் போகிறாயா?" என்றதும் சாரதா முழுமனத்துடன் ஒப்புக் கொண்டாள்.

இந்த தீபாவளிக்கு சுந்தரி நல்ல கதர்ப்பட்டிலேயே தனக்குப் பிடித்த வர்ணத்திலும், மோஸ்தரிலும், புடவை எடுத்து வந்தாள்.

கணவர் எங்கிருந்தோ எடுத்துவந்த நவீன மோஸ்தர்களிலெல்லாம் திருப்தியடையாத சாரதா சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில் கிடைத்த கதர் இனுசுகளில் திருப்தி அடைந்து விட்டாள். அதுமட்டுமல்ல அவள் கணவருக்கும் கதரிலேயே ஜரிகை வேஷ்டி, கதர்ப்பட்டு ஷர்ட்டுத்துணி, அங்க வஸ்திரமெல்லாம் வாங்கி வந்துவிட்டாள். மோகன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை.

உங்கள் தீபாவளி துவுனிகளை நீங்களும் உடனேயே சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.


வழக்கமான 'ரிபேட்'டுடன் ரூபாய்க்கு இரண்டணா விசேஷ 'ரிபேட்' கொடுக்கப்படும்.

சென்னை அரசாங்க காதி விற்பனை நிலையம் இயங்கும் இடங்கள்

சென்னை நகரில்: 86, பிராட்வே. 60, வாலாஜா ரோடு. 3, பைக்ராப்ட்ஸ் ரோடு. 22 தியாகராய ரோடு. 82, ராயப்பேட்டை ஹைரோடு. 6, தாணுத் தெரு, புரசைவாக்கம்.

மற்ற இடங்களில்: கோயமுத்தூர், திருப்பூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, கும்பகோணம் கடலூர் காரைக்குடி, காஞ்சீபுரம் வேலூர் நாகர்கோயில், திருநெல்வேலி, கோடைக்கானல், உதகமண்டலம் சேலம், திருவண்ணாமலை, தூத்துக்குடி விருதுநகர் சிதம்பரம், விழுப்புரம், கரூர், நாகப்பட்டினம், பொள்ளாச்சி, ஈரோடு கிருஷ்ணகிரி, கோபி செட்டிபாளையம், மாயூரம், டி. கல்லுப்பட்டி.

சென்னை அரசாங்க காதி இலாகா



அப்பு: அடே பயலே குப்பு......! மணி என்ன ஆகிறதோ தெரியவில்லை; ஓடிப்போய் மாணிக்கம் செட்டியார் கடையில், நான் கேட்டேன் என்று சொல்லி மணி கேட்டுக் கொண்டு வா!

குப்பு (வேலைக்காரன்): அவர் கடையிலே தான் எதுவும் சரியாயிராது என்றீங்களே, படிக்கல் தராசு முதல் கடிகாரம் வரை......?

அப்பு: அவர் கடையில், நம்ம மாதிரி வேண்டியவர்களுக்குச் சரியான அளவு உண்டடா, போய்க்கேளு......இந்த மாதிரி...... அக்கப்போர் அப்பு சரியான மணி கேட்கச் சொன்னார்னு கேளு.

குப்பு: அதோ...பாருங்கள்! அவர் கடையிலிருந்து கோவிந்தசாமி வருகிறாரு......அவரை நிறுத்திக் கேளுங்கள்.

அப்பு: அதுவும் நல்ல யோசனைதான்...... கோவிந்தசாமி......? சார் கோவிந்தசாமி!

கோவி: என்ன ஐயா அப்பு! உம்மைக் கண்ணிலேயே காணுமே......

அப்பு: ஆமாம். என்னைக் காணத்தான் முடிந்திராது!

கோவி: அப்படி எங்கே போயிருந்தீர்?

அப்பு: இந்தப் புரட்டாசி மாசத்தில் ஒருவரைக் காண முடியவில்லையென்றால் அவர் கட்டாயம் திருப்பதிக்குத்தான் போயிருப்பார்.

கோவி: அப்படியானால், நீர் திருப்பதிக்குப் போயிருந்தீர் என்று சொல்லும்?

அப்பு: ஆட்சேபனை என்ன? குப்புவையும் கூட அழைத்துக் கொண்டு திருப்பதிக்குப் போயிருந்தேன். உற்சவம் இந்தத் தடவை வெகு பிரமாதம். பத்துப் பதினைந்து நாட்கள் இருந்து விட்டு நேற்றுத்தான் திரும்பினேன். வராதவர் எல்லோரும் இந்தத் தடவை அங்கே வந்திருந்தார்கள்......

கோவி: வராதவர் என்று யாரைச் சொல்கிறீர்......என் மாப்பிள்ளையையா? அவரை அங்கே பார்த்தீரா......?

அப்பு: உம்முடைய மாப்பிள்ளையை யார் கேட்டார்கள்? இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவாஹர்லால் நேருவே இந்தப் புரட்டாசிக்கு வந்துவிட்டார் ஐயா...கேளும் அதிசயத்தை.

கோவி: ஆமாம்; நேரு திருப்பதிக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார் என்று பேப்பரிலே பார்த்தேன்; எனக்குக் கூட ஆச்சரியமாகத்தான் இருந்தது.

அப்பு: ஏன் ஆச்சரியப்பட்டீர்?

கோவி: 'கடவுளுக்குக்கூட பயப்படமாட்டேன்' என்று சமீபத்திலேதான் அவர் சொன்னார். அப்பேர்ப்பட்ட நேரு, திருப்பதிக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்வது என்றால் ஆச்சர்யந்தானே?

அப்பு: அப்படியானால் இப்போது ஏதோ அவர் ரொம்ப பக்திமேலிட்டு வந்ததாக சந்தோஷப்படுகிறீரா?

கோவி: பின்னே?

அப்பு: திருப்பதிக்கு ஒரு 'விசிட்' கொடுத்தார். அவ்வளவுதான். திருப்பதிக்கு நீரும் நானும் சென்றால் பெருமாளின் புகழை எடுத்துரைப்போம். ஆனால் நேருஜியோ ஏழு மலைகளின் இயற்கை வனப்பையே முக்கியமாகப் பாராட்டியிருக்கிறார்.

கோவி: அது எப்படியோ. என்னைப்போல் புரட்டாசி மாதம் கூட்டமாயிருக்குமே என்று பயந்து கொண்டு இராமல் நேரு திருப்பதிக்குச் சென்றது விசேஷம்தான்.

அப்பு: நேருவுக்கும் கூட்டத்துக்கும்தான் பொருத்தம் உண்டே. புரட்டாசி தரிசனத்துக்கு நேரு விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், கைமேல் பலனும் கிடைத்திருக்கிறது.

கோவி: என்ன அது......?

அப்பு: சென்னையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில், தி. மு. க. மேயர் நேருவுக்கு மாலை சூட்டின அதிசயத்தைத்தான் கூறுகிறேன். இதெல்லாம் கைமேல் கிடைத்த தரிசன பலனு இல்லையா......?



அண்மையில், பாரதக் குடியரசு ஜனாதிபதியின் போலீஸ் பதக்கம் பெற்ற இளைய போலீஸ் அதிகாரி ஸ்ரீ டி. டி. பி. அப்துல்லா; சென்னை போலீஸ் துறை, குற்றப் பிரிவு துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்.

கோவி: ஆமாம்! ஆமாம்! சுதந்திரத் திருநாளைக் கூடக் கொண்டாட மறுத்த தி. மு. க. மேயர், நேருவுக்கு மாலை சூட்டியது ஒரு விசேஷந்தான்!

அப்பு: ஏழுமலையான் கிருபையால் இமய மலையானைப் பயமுறுத்திவரும் பிணியும் நீங்கி விட வேண்டும்.....ஏழுமலையானே......

கோவி: இமயமலையானைப் பயமுறுத்தி வரும் சீனு எல்லைப் பிணியைத்தானே கூறு கிறீர்........தெரிந்தது தெரிந்தது!

குப்பு (குறுக்கிட்டு): சீனு என்றதும் மாணிக்கஞ் செட்டியார் கடை சீனிவெடி ஞாபகம் வருகுது...! இந்தத் தடவையாவது ஆட்டம் பாம்பு ராக்கெட் பாம்பு முதலிய வெடியெல்லாம் சீக்கிரமே வாங்கிவிட ணும்... அப்புறம் கிடைக்காதுங்க......

அப்பு: அட சே! ஆட்டம் பாம் கிட்டம் பாம் அதெல்லாம் மூச்சு விடக்கூடாது...... இந்தத் தடவை போலீஸ் கமிஷனர் எச்சரித் திருக்கிறார்......தெரியாதா? காலமே பேப்பர் போஸ்டர்லே போட்டிருக்கே......

கோவி: நான் கவனிக்கவில்லையே போஸ் டர் சங்கதியை......

அப்பு: போட்டிருக்கு... இந்த வெடிகளை எல்லாம் வெடிக்கவே கூடாதென்று.

கோவி: ஊரில் போக்கிரிகள் இந்த வெடியைத் தீபாவளியைச் சாக்காக வைத்து உபயோகிப்பது எனக்குத் தெரியும். நல்ல காரியம் செய்தார் கமிஷனர். ஆட்டம் பாம் முதலியவைகளை ஊருக்கு வெளியே கொண்டு போய் வெடிக்கலாமா?

அப்பு: அதை எங்கே கொண்டு போய் வெடித்தாலும் ஆபத்துத்தான். சந்திர மண்ட லத்திலே கொண்டுபோய் வெடித்தாலும் ஆபத்துத்தான்.

கோவி: சந்திர மண்டலம் என்றதும் ஞாபகம் வருகிறது. ரஷ்யா அங்கே ராக் கெட்டை அனுப்பி ஏதோ அமர்க்களப்படுத்து கிறதாமே. சந்திரனுக்கும் இரும்புத் திரை போட்டு நமக்கு வெளிச்சம் தராதபடியாது என்று ஏதாவது அக்கப்போர் பண்ணினால் என்ன செய்வது?

அப்பு: அவ்வளவு தூரத்துக்கு முற்றிவிடும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், சந்திரனை ராகு, கேது பிடித்தால் விட்டு விடும். ரஷ்யா பிடித்துக் கொண்டதோ எதையும் இலேசில் விடாது......

கோவி: சரி நேரமாகிறது......சர்க்கரை கொடுக்கிறார்களாம். க்யூவில் முன்னதாகப் போய் நிற்கணும்......

அப்பு: நானும் போகணும், காப்பிப் பொடி க்யூவுக்கு.

குப்பு: நானும் போய் மாணிக்கஞ் செட்டியார் கடையில் சரியான மணி பார்த்து விட்டு வந்து விடுகிறேன்! —"கொக்கி"

ஆகாச வெடி

"சந்திரனை நோக்கி ரஷ்யா ராக்கெட்டை அனுப்பியது எனக்கு ஒரு பிரமாதமாகத் தோன்றவில்லை."

—உபஜனாதிபதி ராதாகிருஷ்ணன்

ஏதோ அனுப்பி விட்டார்கள்; உபஜனாதி பதி இதைப் பிரமாதப்படுத்த வேண்டிய தில்லை!

★

"இந்த மகாநாட்டுக்குப் பெற்றோர்கள் மிகக் குறைவாக வந்திருப்பதைப் பார்க்கும்போது என்ன சொல்வதென்று புரியவில்லை!"

—பெற்றோர்மகாநாட்டில்மந்திரிபக்தவத்ஸலம்

"உங்களையும் பெற்றார்களே!" என்று சொல்லலாமே!

★

"எங்களுக்கு அமெரிக்கா கடன் கொடுத் தால், உடனே கடனை நேர்மையாகத் திருப் பிக் கொடுத்து விடுவோம்."

—பிரதமர் குருஷேவ்

உடனே திருப்பிக் கொடுப்பதென்றால் கடன் எதற்கு?

★

"சர்க்கார் பிரசுரங்களில் மந்திரிகள் படங் களைப் பிரசுரிப்பது மட்டமான பழக்கம்."

—ஆந்திரத்தில் நேரு

பின்னர் சர்க்கார் பிரசுரங்களை அடையா ளம் கண்டுபிடித்துத் தள்ள வேறு என்ன வழி இருக்கிறது?

"சென்னைக்கு வந்த ஸ்தல யாத்திரிகர் கோஷ்டியில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஸ்திரீ சாதுக்கள்."

—செய்தி

எனவே, பாதிக்கும் குறைவான மற்ற வர்களும் சாதுக்களாய்த்தான் இருந்திருக்க வேண்டும்

★

"ஒரு பியூனை நியமிக்கக்கூட எனக்கு அதி காரமில்லை."

—நேரு

ஆனால், அவனையே மந்திரியாக்கி விடத் தான் முடியுமே!

★

"நானாவதி வழக்கில் இருதரப்பு வக்கீல்க ளிடையே வாய்ச் சண்டை."

—தலைப்பு

கைகளில் விசி எறிய முடியாதவாறு கட்டுகள் இருந்ததுதான் வாய்ச் சண்டைக் குக் காரணம் போலும்!

★

"நாங்கள் சொல்வதைக் கேட்காவிட்டால் அதிகாரிகளை மாற்றுவோம்."

— நெல்லையில் ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ.

மாற்றல் விரும்பும் அதிகாரிகளை என்ன செய்வார் அந்த எம்.எல்.ஏ?

★

"வானவெளியில் செல்வோருக்காக ரஷ்யா பாசிப்பொடி உணவு கண்டு பிடித்திருக் கிறது."

—செய்தி

இது நாசிப் பொடிபோல் இருக்குமோ என வினவப்படுகிறது!


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
SANTOL
GOKUL
SANDAL
WOOD
T.S.R'S
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
"GOKUL"
SANTOL
TOILET POWDER

நீரிழிவு

நோயாளிகளுக்கு

இலவச ஆலோசனை

●

சிறு நீருடன் சர்க்கரை வெளியானால் அதற்கு டயாபெடிஸ் மெல்லிடஸ் (Diabetes Mellitus) என்றும் சர்க்கரை இன்றி அடிக்கடி சிறு நீர் கழித்தால் அதற்கு டயாபெடிஸ் இன்ஸிபிடஸ் (Diabetes Insipidus) என்றும் பெயர். இந்த வியாதியால் அவதியுறும் நோயாளிகள் அதிக தாகம் பசி தேகமெங்கும் வலி. சரீர உழைப்பு அல்லது மன சிந்தனை வேலை ஆகியவற்றைச் செய்ய விருப்பமின்மை. நாளுக்கு நாள் எடை குறைதல் சொறி. சர்ம வியாதிகள் மந்தமான கல்லீரல் பல மற்ற மூத்திரக் காய்கள் மற்றும் பழுதுள்ள பாங்கிரியாஸ் ஆகிய கஷ்டங்களுக்கு இலக்காவர். இந்த வியாதியைக் கவனிக்காவிட்டால் முடக்கு வாதம் சாக்லஸ்வரம் தூங்க முடியாமை. ராஜப் பிளவை தேகம் மற்றும் மன வலிமை குறைதல். தேக ஓய்ச்சல் அதிக களைப்பு மற்றும் பொதுவாக சுகத் திடமின்மை ஆகியவை ஏற்படக்கூடும். இஞ்செக்ஷன் ஏதுமின்றி, பட்டினி மற்றும் பத்தியமின்றி இந்த அபாயகரமான வியாதியை ஒழித்து, என்றென்றும் வாலிப வனப்புடனும் தேக திடத்துடனும் உழைப்பில் ஈடுபட, இலவச வைத்திய ஆலோசனைக்கு எமக்கு எழுதும்படி இந்த நோயினால் அவதியுறுபவர்கள் வேண்டப்படுகின்றனர். காலம் கடக்கு முன் உடனே தயவு செய்து எழுதவும்.

●

வீனஸ் ரிசர்ச் லாபரட்டரி (K. M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

புதுப் புத்தகங்கள்

மெய்யடியார்கள் ரூ. 1.40

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் டாக்டர் [illegible] மகாதேவன் எழுதியது. சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், வாசகர், ஆழ்வார், ஆண்டாள், சங்கரர், இராமானுஜர், ஸ்ரீ இரமண மகரிஷி ஆகியோரின் வரலாறும் அவர்கள் நமக்களித்த அழியாச் செல்வங்களாகிய அறிவுரைகளும் தாங்கி வாழத் துடிக்கும் மனித வர்க்கத்துக்கு வழிகாட்டும் இலக்கியக் கருவூலம்.

பாகிஸ்தான் கதைகள் ரூ. 2.50

நமது அண்டை நாடாகிய பாகிஸ்தானின் சிறுகதை இலக்கிய வளர்ச்சியையும், மக்களின் மனோதர்மத்தையும், பிரதிபலிக்கும் முதலாவது தமிழ் நூல். பல்லாயிரக் கணக்கான கதைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட கதைக் களஞ்சியம்.

தபாலில் பெற 25 காசு சேர்த்தனுப்பவும்
வி. பி. செலவு தனி.

ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:

ஜெமினி பிரசுரம்,
3/18, எல்லையம்மன் காலனி, சென்னை-6.

K. Swam



படை சிரங்கு
(ECZEMA)
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

சிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மகாராஜா டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு

வட்ட மேஜை

கல்வித்துறையிலும் கலவரம்

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் சோஷலிஸ பாணி என்ற பெயரில் விவசாயம் ஆலைத் தொழில், வாணிபம் போன்ற துறைகளில் மட்டுமல்லாமல் கல்வித் துறையிலும் தலையிட்டுக் குழப்புவதைக் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்வித்துறை என்பதில் பொருளுதவி பெறும் துவக்கப் பள்ளித் துறையையே (Aided Elementary Schools under private management) குறிப்பிடுகிறேன்.

நாடு விடுதலையடைவதற்கு முன் துவக்கப் பள்ளி விதிகளில் ஒரு துவக்கப் பள்ளியின் 'மானேஜர்' அந்தப் பள்ளியில் வேலை செய்யும் எந்த ஆசிரியரையும் தக்க காரணங்கள் காட்டி மூன்று மாத முன்னறிக்கை கொடுத்து வேலையிலிருந்து நீக்கலாமெனவும், அவ்வாறே எந்த ஆசிரியரும் மூன்று மாத முன்னறிக்கை கொடுத்து விலகிக் கொள்ளலாமெனவும் இருந்து வந்தது.

சுதந்திரமடைந்த பின் மேற்சொல்லப்பட்ட விதிகளுக்குக் காருண்யம் மிகுந்தவர்களால் கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்யப் பட்டது: ''ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் வேலை செய்து வந்த ஆசிரியர்களுக்கு முன்னறிக்கை கொடுக்கும்போது பள்ளித் துணைத் தணிக்கையாளர் (Deputy Inspector of Schools) அவர்களின் முன் அனுமதி பெறவேண்டும். இவ்வாறு அனுமதியுடன் நீக்கப்பட்ட ஆசிரியர் மாவட்டக் கல்வி அதிகாரியிடம் (District Educational Officer) 'அப்பீல்' (appeal) செய்து கொள்ளலாம். அதில் வெற்றியடைந்தால் பள்ளி மானேஜர் அவ்வாசிரியருக்கு வேலையற்றிருந்த அந்த நாட்களுக்கு முழு ஊதியம் கொடுப்பதுடன் உடனடியாக வேலைக்கும் வைத்துக் கொள்ள வேண்டும். அரசியலாரிடமிருந்து எவ்விதப் பொருளுதவியும் (Teaching Grant) கோருதல் கூடாது. மாவட்டக் கல்வி அதிகாரியின் ஆணைகளுக் கெதிராக இரண்டு மாதங்களுக்குள் ஆசிரியரோ அல்லது பொறுப்பாளரோ இரண்டாவதாகப் பகுதிப்பள்ளி தணிக்கையாளர் (Divisional Inspector of Schools) அவர்களிடம் முறையிடலாம்.'' இவ்விதி நடுநிலையை நிலைநாட்ட முற்படுவதால் ஒன்றும் குறைகூற முடியாது. ஆனால் தணிக்கையாளரின் அனுமதியுடன் நீக்கப்பட்ட ஆசிரியரை மாவட்ட அதிகாரியின் ஆணையின்படி சேர்த்துக் கொள்ளும்போது வேலையற்றிருந்த நாட்களுக்கு முழு ஊதியம் தரவேண்டும் எனக் கூறுவது எப்படி முறையாகும்? இதிலிருந்து அரசினருக்குத் தங்களின் அலுவலாளரான பள்ளித் துணைத் தணிக்கையாளரின்மீதே நம்பிக்கையில்லையென்பது தெளிவாகிறது.

இதன் பிறகு 1956 ஏப்ரலில் வந்த திருத்தம் பின்வருமாறு:—'பள்ளித் துணைத் தணிக்கையாளரின் முன் அனுமதி பெற்று விலக்கப்பட்ட ஆசிரியரை மாவட்டக் கல்வி அதிகாரி திரும்ப வேலையில் சேர்த்துக் கொள் என ஆணையிட்டால், மானேஜர் பகுதிப் பள்ளித் தணிக்கையாளரிடம் முறையிட்டாலும் சரி முறையிடாவிடினும் சரி, பத்து நாட்களுக்குள் அவ்வாணையை நிறைவேற்றுவதுடன் அவ்வாசிரியருக்கு வேலையற்றிருந்த நாட்களுக்கு முழு ஊதியமும் அளிக்க வேண்டும். மாநில கல்வி இயக்குநர் அவர்கள் (Director of Public Instruction) போதிய விசாரணைக்குப் பின் இவ்விதியை மீறியவர் பள்ளி மானேஜராக இருக்கத் தகுதியற்றவர் என ஆணையிடலாம்.''

அரசியலாரின் விதிகள் பொது நன்மையை முன்னிட்டு நடுநிலையினதாக இருத்தல் வேண்டும்—ஒரு சார்புடையதாக இருத்தல் கூடாது என்பர். ஆனால் இங்கோ, மானேஜரின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குப் போதுமான பாதுகாப்பளிக்கப்படவில்லை. ஆசிரியர்களின் வேலைக்கு மட்டும் அளவுக்கு அதிகமாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலை காங்கிரஸ் ஆட்சியாளரின் ''பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்'', ''ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால்'' போன்ற கொள்கைகளைப் பறைசாற்றி நிற்கிறது. ஆங்கிலேயரின் ஆட்சியிலுங்கூடத் தனி மனித உரிமை சமூக நலனுக்குத் தீங்கிழைக்காத வகையில் எவ்வாறு காப்பாற்றப்பட்டது என்பதை முதலாவதாகச் சொல்லப்பட்ட விதிகள் மெய்ப்பிக்கும். இரண்டாவதாகக் கூறப்பட்ட விதிகள் மானேஜரின் தனி மனித உரிமையில் பாதியைப் பறித்தது. மூன்றாவதோ முற்றிலும் பறிப்பதுடன் பள்ளிக்குக் குழியையும் தயாராகப் பறித்து வைத்துள்ளது. ஆசிரியரை மறுபடியும் வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் மேலதிகாரியிடம் முறையீடு தேவையே இல்லையே! விதிகளில் முறையீட்டுக்கு வழி செய்து என்ன பயன்? ஒன்றுமில்லை. அவ்வாறே ஊதியம் கொடுத்து மானேஜர் ஒரு ஆசிரியரை வேலையில் சேர்த்துக் கொண்ட பின், மேலதிகாரிக்கு முறையிட்டதன் விளைவாக மானேஜர் முதலில் ஆசிரியரை நீக்கியது சரியென உத்தரவாகிறது என வைத்துக் கொள்வோம். அப்போது ஆசிரியருக்கு வேலையில்லாதிருந்த நாட்களுக்காகக் கொடுக்கப்பட்ட ஊதியத் தொகை என்னாவது? அதை ஆசிரியரிடமிருந்து திரும்பப் பெற முடியுமா?

ஒரு பள்ளியின் மானேஜர் தம்மிடம் பணி புரிகிற ஆசிரியரைத் தக்க காரணங்களுக்காக வேலையிலிருந்து நீக்க இவ்வளவு இடர்ப்பாடுகள் என்றால் பள்ளியை ஒழுங்குற நடத்துவது எப்படி? தவறு செய்தால் பொறுப்பாளர் தண்டிக்க எளிய வாய்ப்புண்டு என்ற உணர்ச்சியுடன் ஆசிரியர்கள் பணி புரிவதற்கும் வழியில்லை. பொறுப்பாளரோ தம் உரிமைகள் பறிக்கப்பட்டதால் ஆசிரியர் எது செய்தாலும் கண்டிக்க வழியின்றி இருந்து விடுகிறார். இவ்வாறான விதிகள் இருப்பதால் ஒரு சில பள்ளிகளில் இத்தகைய தகராறுகள் மூன்று, நான்கு ஆண்டுகள் வளரத் துவங்கி அதன் பயனாகப் பொறுப்பாளர்—ஆசிரியர் நல்லுறவு பாதிக்கப்பட்டு மூடுவிழா நடத்தும் அளவுக்கு வந்துவிட்டது. மற்றத் துறைகளில் முதலாளி-தொழிலாளி; நிலம் படைத்தவர்-பயிரிடு

வோன் இவர்களின் நல்லுறவு எப்படிச் சீர்கெடத் துவங்கியுள்ளதோ, அதேபோல் கல்வித் துறையிலும் பொறுப்பாளர்-ஆசிரியர் நல்லுறவு சீர்கெடத் துவங்கியுள்ளது.

மாயவரம்
12-10-59

இரா. கண்ணன்

யாருக்கு லாபம்?

சென்ற பிஸானம் அறுவடையின்போது சென்னை அரசாங்கம் எங்கள் ஜில்லாவில் ஒரு கோட்டை கொண்ட இரண்டு மூட்டை (112 படி) நெல் விலை ரூ. 36 14-0 விதம் 30,000 மூட்டைகள் வாங்கினார்கள். அதை மில்களுக்கு ஒப்படைத்தார்கள். ஒரு கோட்டை நெல் குத்த 14 அணாவென்றும், அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாய விலைக் கடைகளுக்கும் கோட்டை நெல்லுக்கு 56 பட்டணம் படி அரிசியாக அளக்க வேண்டும் என்றும் கட்டாயப் படுத்தினார்கள். மேலே குறிப்பிட்ட கணக்கிலிருந்து ஒரு பட்டணம் படி அரிசி 0-10-9தான் ஆகிறது. இதைப் பொது மக்களுக்கு 90 நயா பைசா விதம். அதாவது 56 படி நெல் கொண்ட மூட்டை ஒன்று ரூபாய் 50-40க்கு அரசாங்கம் விற்கிறது. இதிலிருந்து அரசாங்கம் ஒரு மூட்டைக்கு ரூ. 12-12-6 நிகர லாபம் அடைகிறது. ஆகவே, 15,000 மூட்டை அரிசியிலிருந்து சென்னை அரசாங்கம் ரூ. 19, 1718-12-0 நிகர லாபம் அடைந்திருக்கிறது.

இதையொட்டி இன்னொரு விஷயமும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம். நெல் அரைக்கும் மில் முதலாளிகள், இதே நெல்லைக் கோட்டை 53 ரூபாய் விதம் வாங்கி எல்லாச் செலவும் போக ஒரு படி அரிசி ஒரு ரூபாய் விதம் விற்று வருகிறார்கள்.

அப்படியானால், இந்த வியாபாரத்தில் யார் லாபம் அடைகிறார்கள், சர்க்காரா? அல்லது மில் முதலாளிகளா? சர்க்கார் அரிசி வியாபாரத்தில் நுழைந்ததால் பொதுமக்கள் அடைந்த லாபம் என்ன?

மேலப்பாளையம்
திருநெல்வேலி
15—10—59

வி. எஸ். சையத் அகமத்.
(நாரியப்பர், பொதுநல சேவா சங்கம்) மற்றும் 11 பேர் கையொப்பம்.

மகத்தான சேவை

வாரந்தோறும் மூன்று கட்டுரைகள்வீதம் இடைவிடாது எட்டு வாரங்கள் கூட்டு விவசாயத்தைப் பற்றி வெற்றிகரமாக நடத்திய ஆராய்ச்சி அரங்கத்தின் மூலம் கல்கி இணையற்ற சேவை செய்திருக்கிறது.


ஒவ்வொரு வாரமும் கல்கி இதழின் வருகைக்காகப் பல விவசாயி மக்கள் ஆவலுடன் காத்திருந்து இக்கட்டுரைகளைப் படித்துப் பயனடைந்திருக்கின்றனர் என்பதை நான் நேரில் கண்டேன். கல்கியின் சேவை மேன்மேலும் வளரட்டும்.

அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கைகளைக் கண்மூடித்தனமாகக் கடைப்பிடிக்கும் நமது மேலிடத் தலைவர்களுக்கு அபாயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றன இவ்வாராய்ச்சிக் கட்டுரைகள்.

தனி மனிதனை அரசாங்கத்துக்கும் உயர்வான நிலைக்கு உயர்த்தவும், சத்தியத்தைக் கேவலம் கோஷங்களுக்கும் உயர்வானதென்று நிலை நிறுத்தவும், ஒத்துப் பாடுவதை விட சுய சிந்தனை உயர்ந்ததென நிலைநாட்டவும், நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜி முதிர்ந்த வயதிலும் இடைவிடாது போராடுகிறார். அவருடைய முயற்சிகள் வெற்றிகரமாக முடிவு பெற வேண்டுமென்பதே சிந்திக்கும் ஆற்றலுள்ள ஒவ்வொருவனுடைய பிரார்த்தனை.

திருநெல்வேலி
15—10—59

ஏ. எஸ். நாராயணஸ்வாமி
நெல்லை மாவட்ட ராஜாஜி பட்டதாரிகள் சங்கம், திருநெல்வேலி.



சென்னை கம்பர் கழகத்தினர் ஒன்பதாவது மகாநாட்டை ராஜாஜி மண்டபத்தில் சென்ற 11ம் தேதி வெகு சிறப்பாகக் கொண்டாடினர். இவ்விழாவை மந்திரி பக்தவத்ஸலம் துவக்கி வைத்தார். வேலூர் நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்கள் தமது தலைமையுரையில் தமிழின் சிறப்பையும், கம்பர் கவிதைச் சிறப்பையும் எடுத்துரைத்தார். இவ்விழாவில் திரு பி. ஸ்ரீ. ஆசார்யா, திரு கி. வா. ஜகந்நாதன் முதலிய பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். விழாத் தலைவர் திரு மகராஜன் பேசுவதை மேலே படத்தில் காணலாம்.



தீபாவளி விற்பனே!

புதிய ஸ்டாக்
அழகிய புது டிசைன்கள்
ஏராளமாக வந்துள்ளன

ருக்மிணி ஸில்க் எம்போரியம்

பட்டு ஜவுளி வியாபாரம்

பெரிய தெரு (போன் நெ. 58) கும்பகோணம்

உரிமையாளர்: ஆர். கே. சாரநாத செட்டியார்

யூனியன் பாங்க்
ஆப் இந்தியா லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1919)

தலைமைக் காரியாலயம்:

யூனியன் பாங்க் பில்டிங், அப்பாலோ தெரு, பம்பாய்-1

சென்னைக் காரியாலயம் 9, செம்புதாஸ் தெரு

எங்களுடைய கூட்டு சேமிப்புத் திட்டம் ஒவ்வொரு மாதமும் எளிய தவணையில் சேமிக்கக்கூடிய வாய்ப்பை யளித்து. 4% கூட்டு வட்டி யளிக்கவும் செய்கிறது

ஏ. எஸ். பிஜோர்
சென்னை ஏஜண்ட்

எப். கே. எப். நரிமன்
ஜெனரல் மானேஜர்

பிஞ்சுகளைக் கூடையில் நிரப்பிக் கொண்ட செங்கம்மா மெல்ல உதட்டைக் கடித்துக் கொண்டாள். கிழவனின் சுபாவம் அவளுக்குப் புதிய அனுபவமன்று. பெரியவரின் தயவை நாடாது கூடையை அனாயாசமாகத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டவளை வியப்போடு நோக்கினான் கிழவன். "நெஞ்சு உரத்தைப் போலவே வேலையிலும் கெட்டி தான்!" என்றான்.

'நல்லவேளை, பாட்டா. உன் பிஞ்சுக்குள் சொத்தை இருக்கு. என் நெஞ்சுக்குள்ளே உரமிருக்கு. இல்லாட்டி இத்தனை தூரம் இந்தச் சொத்தைப் பிஞ்சுக்காக நடந்து வருவேனா? இதோ பார் பாட்டா, இன்று கூடை ஒருரூபாய்கூடத் தேறுது... முன்னாடியே சொல்லிட்டேன்" என்று முகத்தைக் குலுக்கியபடியே திரும்பினாள்.

"என்ன சொல்லுறே?" கிழவன் மேட்டிலிருந்தே கூவினான்.

அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல் அவள் சென்றாள். தலைச்சுமையின் கனத்தில் நடை பதுங்கவில்லை. ஆண்மகனுக்குரிய கம்பீரத்தில், குழைத்துப் பூசிய பெண்மையின் மென்மைக்குள் பொங்கி வரும் இளமையின் பூரிப்பைப் பூட்டி வைத்தாற்போல உல்லாச நடை!



மார்க்கெட் வாயிலை மிதிக்கும்பொழுது மணி எட்டடித்து விட்டது. வழக்கம்போல அந்தப் பூனை மீசைக்காரன் விஷமப் புன்னகையை நெளிய விட்டபடி உட்கார்ந்திருந்தான். சீட்டுக் கொடுக்கும்பொழுது செங்கம்மாவின் உள்ளங்கை அருவருப்பால் சுருங்கியது. பார்வையிலே அனலைக் கொட்டியபடி இரண்டணா நாணயமொன்றை அவன் மடி மீது வீசினாள். உள்ளத்திலே திரண்டெழுந்த ஆத்திரத்தையெல்லாம் கூட்டிக் காறிக் கீழ உமிழ்ந்துவிட்டு உள்ளே சென்றாள்.

நெஞ்சிலே கல் புரண்டு இடறினாற்போல் அவளது உள்ளம் கணநேரம் தடுமாறியது. கண்களிலே பனித்த உணர்ச்சி முத்துக்களை இமைச் சிமிழ்க்குள் தேக்கிக் கொண்டாள்.

காய்களைக் கீழே கொட்டிக் கூறு கட்டலானாள். பூச்சி அரித்தவைகளை உண்டாக்கி மேலே நல்ல பிஞ்சுகளைச் சேர்த்துவைத்தாள். ஒருவிதத்தில் அவளது குடும்ப விஷயமும் மூடிவைக்கப்பட்ட பூச்சிக் காய்கள் போலத் தானே ஆகிவிட்டது?

அம்பாரமாகக் குவிந்து கிடந்த சோகை அரைமணியில் விலையாகி விட்டது. அடுத்த அங்காடியிடம் மழைபெய்து ஓய்ந்தாற்போல் சந்தடி அடங்கிக் கூட்டம் கரைந்து விட்டது. வெயிலின் உக்கிரம் கொட்டகைத் தகரத்தின் மீது நெருப்பைக் கக்கியது. விலையாகாமல் கிடந்த மூன்று கூறுகளையும் அள்ளிப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு வீடு நோக்கி நடந்தாள் செங்கம்மா. கையிலிருந்த சில்லறையெல்லாம் வழியிலேயே உணவுப் பொருள்களாக மாறிவிட்டன.

வெளிப்படலைத் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்தாள் செங்கம்மா. முத்து கயிற்றுக் கட்டிலே முக்கு முடிவதிப முனைந்திருந்தான். சிந்தனையின் சலனம் முகத்திலே தெறிக்க அவன் எழுந்து வந்தான்.

கள்ளிகளை முறித்து அடுப்பைப் பற்ற வைக்கலானாள். வெயிலில் வந்த களைப்பு இமைகளைக் கட்டியது.

"அக்கா! ஆயா ரொம்பக் காவலாக் கிடக்கு தாய..." குப்பென்று எழும்பிய தீயின் ஒளியில் அவனது முகத்திலே பரவிய கடுமையைக் கண்டு அவள் தயங்கினாள்.

"அந்த வழியாப் போகையிலே ஒரு மணிலே உடனே நுழைஞ்சேன். விழிச்சுப்போட்ட தாராகக் கிடக்கிறான். என் முகத்தைக் காணவும் கண்ணுலே தண்ணி விட்டானே..." நெகிழ்ச்சி கண்டத்தை அடைக்கக் கூறினான்.

"உம்..." நக்கென்று பானை அடுப்பிலே ஏறியது.

"உன்னைப் பார்க்க ஆசைபோல் வாயைத் தொறந்து சொல்லலே. பழைய கதையை மறந்து ஒரு நடை போய்ப் பாரேன்." முத்து இதைப் பயந்தவாறு சொன்னான்.

"விடு அந்தப் பேச்சை. வேறு இருந்தால் பேசு."

"ஐயே...நீ மெத்த கோபக்காரி. உம் மனசு கல்லுதான். நம்ம சாதி சனத்திலே இல்லாத தப்பா நடந்துருச்சு?"

"இன்னும் என்ன தப்பு நடக்கணும்? எவளோ மூணாம் மனுசனுக்காகத் தன் மக்களை நடுத் தெருவிலே விட்டாரே போதாதா?" மன வெழுச்சிகளின் துடிப்பு நெற்றி நரம்புகளிலே கோலமிட்டன.

"ஏதோ பழைய தொடுப்பு நடந்திடுச்சு. மனுசன் குணம் புடிக்கல்லே. நாம துண்டிச்சுக்கிட்டு வெளியேறி வந்தாச்சு. அதனாலே வயித்திலே சுமந்த பொறி இல்லாமப் பூடுமா? ஏதோ அவ மனசைப் போட்டுத் துருவிக்கிட்டே இருக்கு. ரெண்டு வருசத்துலே கூடாகி விட்டாள். ஆனாக்கினவளுக்கு நாம என்ன செய்தோம்?" முத்துவா இப்படிப் பேசுகிறான்? வெகுளிபோல் தோற்றமளித்த முத்து எத்தனை மாறான உணர்ச்சிகளைப் போக்கிக் கொண்டு வளைய வந்திருக்கிறான்?

"என் மனசுக்கு ஒட்டலே... சரி, கிடைச்ச அத்துக் கூலியைக் கொடு. துவையலுக்கு வாங்கியாரேன்" என்றான் உஷ்ணமாக.

"பிடி சுத்தின காக அஞ்சணா வந்தது. எதிருக்கும் வாங்கிச் சாப்பிடுன்னு ஆயா கையிலே கொடுத்தேன். அடிமிதி தின்னு மூளை பாவி. வவுறு குளிர ஒருநேரச் சோறுண்டா? துன்பப்படவே பொறந்தவ துன்பப் படுறா." தாய்க்கு அந்தி இழைக்கு விட்ட கசிவு குரலிலே எதிரொலித்தது.

"முனையிலே பட்டுப்போன நாளிலே இது நடந்திருந்தால் தவறாகத் தோணுமா? பதினஞ்சு வருசம் முன்னிலும், கல்லிலும் பாடு பட்டுத் தோளிலும் மார்பிலும் போட்டு வளர்த்துவிட்டு. நெஞ்சிலே தணலைக் கொட்டி

வட ஆற்காடு மாவட்டப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற அட்டைப் படக் கதை

ஞற்போல் அந்த மனுசனே நுழையவிட்டாளே. நாம் கண்ணுலேகூடப் பார்க்காதே...தாயிரு உயிரோடு இருந்தால் பாளே சிவுருப்போல் சிவிட மாட்டாரா?'' செங்கம்மா வெறுப் போடு அகன்ருள். உலேப்பானேக்குள் நீர் பொங்கி மறுகியது. சிந்தனையிலும் எண் ணங்கள் தளேத்தன.

* * *

மணக்காயி இரண்டு குழந்தைகளேச் சுமந்துகொண்டு பஞ்சத்துக்குப் பிழைக்க வந்த பொழுது அவளது பூர்வ கதையைப் பற்றி அறியும் ஆவல் யாருக்கும் ஏற்படவில்லே. கடந்த கால ஏடுகளேப் புரட்டிப் பார்க்க அவளுக்குத்தான் பொழுது ஏது? இரை தேடி ஊட்டிய தாயின் பராமரிப்பில் சிட்டுகள் இறக்கைகளே விரித்துப் பறக்கத் துடித்தன. அந்த இன்பக் கூட்டைப் பிய்த்தெறியக் கன்னியப்பன் வந்து சேர்ந்தான்.

வயது முதிர்ச்சி அடைந்தபின் தாயின் உழைப்பில் கூறு போட்டுக் கொண்டாள் செங்கம்மா. அன்று தர்பூஷணி பழங்களேத் துண்டு போட்டுச் சீக்கிரமே விற்றுவிட்ட மகிழ்ச்சியோடு வீடு திரும்பினுள். வீட்டுக் குள் புதிய ஆண் குரல் ஒலித்தது.

தாயின் கண்கள் புகையினுல் துன்புறுத்தப் பட்டுச் சிவந்து கருங்கியிருந்தன. மனத்திலே முட்டி எழுந்த பீதி கண்களில் கரையிட் டிருந்தது.

செங்கம்மா புதியவர் பக்கம் பார்வையை ஓட்டினுள். நெடுநெடுவென்ற உயரமும் பரு மனுமான தோற்றம். முதல் பார்வையிலேயே கைப்பு உணர்ச்சி உதடுகள் வரை பாய்ந்து வந்தது. சிந்தனையின் இருண்ட பகுதி யிலிருந்து ?ற்று அசைந்தாற் போல் ஓர் சலனம் நிழலாடியது.

'' யாரம்மா இவர் ?''

'' நமக்கு வேண்டியவர்...'' உடலிலுள்ள உயிர் சக்தி யாவும் ஒளியாகிப் பார்வையிலே ஒளிர்ந்தன.

'' வேண்டியவரா ?'' முள்சாட்டை விசிருற் போல் கேள்வி சீறி வந்தது.

'' ஆமாம்...!'' புதிய விருந்தாளியின் கொட்டும் நோக்குக்குப் பயந்தவாறு குனிந் தாள் தாயார்.

மாதங்கள் உருண்டன. புதிய விருந்தாளி வீட்டை விட்டு வெளியேறும் பேச்சே எழ வில்லே. ஊர்ப் பெண்களிடையே கலகலப்பு எழுந்தது.

செங்கம்மா ஆத்திரத்தைத் தாயிடம் கொட்டித் தீர்த்தாள். '' இந்தப் புது ஆளே வெளியேற்றப் போறியா இல்லியா? ஊர் ஜனங்க பேச்சு நாக்கைப் பிடுங்கிக்கலாம் போல இருக்கு.''

'' அவர் போக மாட்டார்...''

'' ஏன் ?''

'' அவர் நமக்கு வேண்டியவர்.'' அடுத்து ஒலித்த வேதனேப் பிரலாபம் நெஞ்சுக் குள்ளேயே சிதறி விட்டது.

'' உன்னுலே முடியாவிட்டால் நான் விரட்டி விடுகிறேன் !''

'அப்படி வா சவாலுக்கு என் சிறுத்தைக் குட்டி! குமரிப் பொண்ணுக்குப் பயந்தவன் நான் இல்லே !'' அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த கன்னியப்பனின் முரட்டுக் கரங் களுக்குள் செங்கம்மாவின் கூந்தல் சிக்கித் தவித்தது.

'' சீ எடு கையை. பொம்பிளேகள் உழைப் பிலே வயிறு வளர்த்துக்கிட்டு வாய் வேறு கேடு ?'' செங்கம்மா பலத்தையெல்லாம் திரட்டி அவனேத் தள்ளினுள்.

இனமொரு சண்டையும் பூசலுமாக நாட்கள் ஓடின. தாயின் கண்கள் துயரத் தின் ஊற்றுக் கண்களாகி விட்டன.

கன்னியப்பன் அவளது வருங்கால வாழ்க்கையிலே தலேயிட்டிருக்காவிட்டால் அந்த நிழலிலிருந்து அவன் வெளியேறும்படி ஏற்பட்டிருக்காது. அவன் மெதுவாக ஆரம் பித்தான். '' இதோ பார், புள்ளே! அந்தத் திருப்பத்தூரான் மகனுக்குப் பேசிக் கையை நீட்டிப் பரிசப் பணமும் வாங்கிட்டேன். கழுத்துலே கவுறு போடறதுக்கு முன்னுலே சொரூபத்தைக் காட்டினுல் நான் பொல்லாத வனுக இருப்பேன்'' என்ருன்.

'' என் கழுத்துலே கவுறு ஏறுவதற்கு முந்தி, உன் கழுத்துலே கத்தி ஏறிடும்.''

' என் குணம் புடிபடலே போல...உம்'' என்று உறுமினுன்.

' தே ஓட்டாதே. உன் மகளாக இருந் தால் இப்படிச் சப்பாணிப் பயலுக்குத் தள்ளப் பார்ப்பியா ?'' அழுகை முறிந்து அனலாக எரிந்தது குரல்.

'' நான் யாருன்னு நினேச்சே ?''

வைதிக தர்மவர்த்தனி

தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா

வேதம், இதிகாசம், புராணம் ஆகிய வற்றுக்குச் சீரிய விளக்கம் தருவது

பதின்மூன்றவது ஆண்டின் முதல் இதழ் வெளிவரும் புதிய அம்சங்கள்

பாரத கேசரி
ஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் எழுதும்
மகாபாரதப் பூஞ்சோலே

'அக்ஷயபரணி' எழுதும் ரஸம் மிகுந்த நவரஸப் பகுதி

ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா எழுதும்
கல்கி புராணமும் பெரிய புராணமும்

ஐப்பசி இதழ் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

தனிப்பிரதி அணு 7-ஆண்டு சந்தா ரூ. 5

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்

மானேஜர். வைதிக தர்மவர்த்தனி
கடவாசல், வடகால் போஸ்ட்
சீர்காழி வழி. தஞ்சை ஜில்லா

அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட புட்டிப் பால்களுக்குச் சமமானது!

SRI GANESHRAM'S 777 BRAND FOOD PRODUCTS · MADRAS-1 · S · INDIA

மால்டைன்

(போஷாக்கு சத்துக்கள் நிறைந்த உணவு)

குழந்தைகளும், வியாதியஸ்தர்களும் கர்ப்பிணிகளும் சாப்பிடலாம்

எங்கும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

ஹோட்டல்கள், கான்டீன் மற்றும் உணவு விடுதிகளுக்கென

கோக்கோ மணக்கமழும் மால்டைன்

5 பவுண்ட் பாக்கிங்குகளில் கிடைக்கும்

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ., சென்னை-1

ஸ்டாக்கிஸ்ட்: வாணி பார்மஸி, சிதம்பரம்

வீரபாண்டிய கட்டபொம்மன் கல்யாணப் பரிசு, வண்ணக் கிளி சிவகெங்கைச் சீமை, முதலிய படங்களின் சமீபத்திய எச்.எம்.வி., & கொலம்பியா இசைத் தட்டுகள் தமிழ், தெலுங்கு மொழிகளில் இங்கே கிடைக்கும்

எங்கள் ஏர்கண்டிஷன் ஷோ-ரூமிற்கு விஜயம் செய்யுங்கள்

பிரிட்டானியா டாக்கிங் மெஷின் கம்பெனி

407, கல்பதேவி ரோடு, பம்பாய்-2

போன்: 30465



நாள் முழுவதும் தூய்மையுடன் விளங்க

பாம்பியா லோஷனை

உபயோகியுங்கள்

தொடக்கத்திலிருந்தே பிரஞ்சு முறையில் அதற்கேற்ற தனிப்பட்ட வாசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. உலக முழுவதும் லக்ஷக்கணக்கானவர்களால், எல்லாக் காலங்களிலும், விசேஷ தினங்களிலும் உபயோகிக்கப்படுகிறது.





வியாபார விவரங்களுக்கு:

இன்டர்நேஷனல் ப்ரேண்ட்ஸ் பிரைவேட் லிட். கலினா, சாந்தா க்ருஸ் (கிழக்குப் பக்கம்) பம்பாய்-25 இவர்களுக்குத் தயவுசெய்து எழுதிக் கேளுங்கள்



After the tension and
excitement of the game comes the time
to relax—and here nothing can
beat Player's Navy Cut Medium Cigarettes.
The world over, players and spectators
alike always ask for



Player's Please

PL/221

Issued by The Imperial Tobacco Company of India Limited

''தெரியாது. கூட்டைப் பிரிக்க வந்த குரங்குன்னு.''

''நாக்கைப் பார், துண்டிச்சிருவேன்.'' இடுப்பிலிருந்த பேனாக்கத்தியைச் சுழற்றினான்.

செங்கம்மா படம் விரித்த நாகமானாள். ஆணியிலே தொங்கிய களைக் கொத்தை எடுத்தாள். பாய்ந்தோடி வந்து அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள் மனைக்காயி.

'நீ எட்டப் போ...அவனை வெளியேற்றலே...நான் பூடறேன்...'' மனம் வெறி கொண்ட காளைபோலத் துடிக்கக் கையிலிருந்த ஆயுதத்தைக் கீழே வீசினாள் செங்கம்மா.

'' அவரைப் போகச் சொல்ல முடியாது...''

'' ஏன் முடியாது?''

'' கடைசிவரையில் அவருக்குச் செய்வதாக வாக்குக் கொடுத்திட்டேன்...''

'' கட்டினவனு கடைசிவரை செய்ய?'' செங்கம்மாவின் ஏளனத்தில் ஐம்புலன்களும் சுழன்றன. கணத்துக்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள் தாயார்.

' ஆமாம்...என்ன செய்யப் போறே? உடலிலே பலம் இருந்த மட்டும் உழைச்சேன் உங்களை ஆளாக்க. இப்போ பட்டுப் போன மரம். எந்த நிழலடிச்சால்தான் என்ன? நீ வெளியே போயிரு. ஒரு விநாடி இதயம் துடிப்பிழந்து நின்று விட்டதோ?''

''உன்னோடு இருப்பதே அவமானம்'' என்று செங்கம்மா படியிறங்கி வந்து விட்டாள். முகத்தில் அறைந்தாற் போல் கதவைத் தாளிட்டாள் கன்னியப்பன்.

'' இத்தனை வருடங்களுக்குப் பிறகு இந்தச் சபலம் ஏன்? ஏன்?'' செங்கம்மாவின் உள்ளம் இந்தக் கேள்வியைச் சுற்றியே குருதிக் கண்ணீர் வடித்தது.

ஈரப்புடவையை உதறுவி முத்துவை நோக்கினாள். அவன் வட்டிதூக்குப் பின்னே சோர்ந்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு குனிந்து பரிமாறலானாள் செங்கம்மா.

* * *

ஆவணி மாதத்துத் தூற்றல் ஊசிபோல் விழுந்து கொண்டிருந்தது. சுற்றிலும் மையிருட்டு. தவளைகளின் கோஷ்டி கானம் நிசியைக் கிழித்தது. வெளியே காலடிஓசை பம்மிப் பம்மி ஒலித்தது. செங்கம்மா எழுந்து தாளை விலக்கி, உடலைச் சுருக்கி எட்டிப் பார்த்தாள். பந்துபோல் ஒன்று அடைத்தது கண்டத்தை.

புடலைப் பந்தலுக்கடியில் கன்னியப்பனின் நெடிய உருவம் தென்பட்டது. குனிந்து எதையோ அவசரமாக மண்ணுக்குள் மறைத்துக் கொண்டிருந்தான். இருப்பதிலே பூட்சுகள் அலறின.

செங்கம்மாவின் நெஞ்சிலே எண்ணங்கள் புரண்டு எரிமலையொன்று வெடித்தது. இருட்டுக்குள் உடலைப் புதைத்தபடி நடந்தாள்.

கழுத்தைச் சுற்றி உடும்புப் பிடி விழவும் அதிர்ந்துபோய் எழுந்தான் கன்னியப்பன். செந்தலைகளின் இடிச்சிரிப்பில் அவனது உடல் தாளமிட்டது. செங்கம்மா காட்டிய இடத்திலிருந்து நகைகளை எடுத்தபொழுது அவன் வாயடைத்து நின்றான்.



சினிமாத் துறையில் புகழ் பெற்ற டைரக்டர் ஸ்ரீ டி. எம். பஞ்சோலி பம்பாயில் தமது ஐம்பத்திமூன்றுவது வயதில் காலமானார். இருபது படங்களுக்கு மேல் தயாரித்து வெளியிட்டுச் சினிமா ரஸிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர் அவர். 'கஸான்ஜி' 'குலேபகாவலி' 'சந்தன்' முதலிய படங்கள் அவரது பெருமைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. சினிமாத்துறை ஒரு நல்ல டைரக்டர் படத் தயாரிப்பாளரை இழந்து விட்டது.

''அடே, மாரி! வகையா மாட்டிக்கிட்டியா? நம்ம உறவு போதுமா? பிள்ளையை முறிச்சக் கிணத்திலே தள்ளி நகைகளை அமுக்கின கொலை கேசிலே சம்பி எண்ணிக்கிட்டிருந்தப்போ தப்பி ஓடியாந்தாலும் எங்க வலைக்குள்ளேயே சுத்திக்கிட்டு டிமிக்கி கொடுத்திட்டு வரயா? உன் பிறவிக் குணம் போகுமா? கட நாயே...'' அவர்கள் அவனைத் தள்ளிக் கொண்டே போயினர்.

அவனது கடைசிநோக்கு செங்கம்மாவின் கண்களோடு இணைந்தது. அவற்றுள் செவ்வரி யிட்டிருந்த கொடூரமும் குரோதமும் எங்கே மறைந்தன? இனம் உணராத ஓர் தன்மை நெஞ்சை நிறைத்தது. யாரோ ஓங்கி அடித்தது போல் அதிர்ச்சியுற்றாள் செங்கம்மா.

இருட்டைக் கிழித்துக் கொண்டு முன்னே பாய்ந்து வந்த தாயைக் காணவும் உள்ளம் கூசிக் குன்றியது.

'' பாவி...கெடுத்திட்டியே?'' கண்ணீரைப் பெருக்கிப் பிரலாபித்தாள்.

' ஏன் இப்படி அழுது துடிக்கிறே மூணும் மனுசனுக்காக?'' என்றாள் குரோதத்தோடு.

'' ஆமாம்...அந்த மூணுமவன்தான் உன் அப்பார்...!''

'' என்ன சொல்லுறே? எங்க நாயினாவா?'' துடிப்பும் தவிப்பும் நெஞ்சிலே புயலாக வீச வினவினாள் மகள்.

'' ஆமாம்! அவர் ஜெயிலுக்குப் போகவும், வாழ வழி தெரியாமல் வானம் பார்த்த பூமியாக நான் இந்த ஊருக்குவந்தேன். கட்டின பொறி, தப்பி ஓடிவந்தவனை எங்கே விரட்டுவேன்? ஒளிஞ்சு மறைஞ்சு யார் நிழலிலே ஒதுங்க முடியும்? அதனாலே தான் உழைச்சுப் பிழைச்சுக்கட்டுமென்று குஞ்சுகளை வெளியேற்றினேன். உள்ளத்தைக் கடுமையான பாறாங்கல்லாக்கிக் கொண்டு தான் இந்தக் காரியத்தைச் செய்தேன் எத்தனை துன்பத்தை நெஞ்சிலே பூட்டிக்கிட்டு வளைய வந்தேன், சொல்லையும் சுமந்து கொண்டு? அதுவும் போச்சுது.'' புயலிலே சிக்கித் தவிக்கும் கொடியாக ஜீவவேர்கள் அறுபட்ட துடிப்பு முகத்திலே பரவியது.

'' அப்பனுக்கே வினைவைத்த பாவியாக்கிட்டயே என்னை. காய்ச்சிய பாலிலே சொட்டு மோரை விட்டாலும் நல்ல தயிராகும். துளி உப்பு தெறிச்சாப் போல் எங்க மனசை முறிஞ்ச பாலாக்கினயே...'' என்று அரற்றிய வாறு தாயை அணைத்துக் கொண்டாள். அறியாது தன் அருமை அன்னையிடம் கடுமையாக நடந்துகொண்ட விதத்தை யெண்ணி அவள் வெட்கித் தலைகுனிந்தாள். மூட்டம் விரிந்த வானம் போலக் கண்கள் நீரைப் பொழிந்தன. அதில் அவளதுஅகம்துலங்கியது.


தலைநகரிலே தமிழ் நாடகம்

தலைநகரில் நாடகமோ நாட்டியமோ சாதாரணமாக மேடைமீது மட்டுமல்லாமல் கொட்டகையிலும் அங்கும் இங்கும் காணலாம். வெய்யிலின் உக்கிரத்தைத் தாள மாட்டாத துடியிடையினர் ''ரவி'' அணிந்து மெல்லிய நைலான் புடவைகளை அணிந்ததும் அணியாததுமாக, இளநகையை நெளிய விட்டுக் கொண்டு, விரல் நுனி மறையும் வரையில் உடைகள் அணிந்து வரும் ஆடவர்களுடன், அன்னநடை பயின்று வந்து அமருவதே கண்கொள்ளாக் காட்சி. ஆனால் சமீபத்தில் புதுதில்லி பைன் ஆர்ட்ஸ் தியேட்டர் ஹாலில் காட்சி வேறுமாதிரி இருந்தது.



வேர்த்து வியர்க்கும் இந்த உஷ்ணத்திலும் பட்டுப் புடவைகள் சலசலக்க, பூமணம் கமழக் கசமுசவென்று எங்கும் இனிய குரல்கள் ஒலிக்க ஒரு சிறிய தமிழ் உலகமே அங்கு தோன்றி விட்டது. நல்ல நாடகத்தைக் காண ஏங்கியிருந்த தமிழர்களுக்குத் தென்னிந்திய தியேட்டர்ஸ் அளித்த தேவனின் ''கோமதியின் காதலன்'' அற்புதமாயிருந்தது.

பிரணதார்த்திஹரய்யராக வந்த பூர்ணம் விசுவநாதன் தமிழன்பர்களுக்குத் தெரியாதவரல்ல. நகைச்சுவை ததும்பிய அவர் நடிப்பும் பூர்ணமாகவே இருந்தது. ஆங்காங்கு சொந்தச் சரக்கையும் சேர்த்துக் காண்போரைச் சொக்க வைத்தார். அன்பொழுக ''ராஜா'' என்று அவர் விளித்தது இன்னும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அசட்டுப் பிள்ளையாக வந்த கோபு நடிப்பில் அப்பனுக்குச் சளைக்கவில்லை. அதேபோல் தமக்கை (பாலசந்தர்) நடிப்பு பலே ஜோர்.



கோமதிக்கு அதிக பங்கு இல்லையென்பதால் அவர் நடிப்புத் திறன் வெளியாகவில்லை போலும். அவர் காதலன் ரங்கராஜன் நிலத்தில் விழுந்த நெல்லிக்கனி போன்று குதிக்காமல் மட்டும் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தாசியாக நடித்த குமாரி இந்திரா உண்மையான பாரிஜாதமாகவே திகழ்ந்தார்.

இந்த நாடகத் தயாரிப்பில் கௌரவமான குடும்பப் பெண்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது மிகவும் பெருமைப்பட வேண்டிய விஷயம். அதுவே இந்த நாடகத்தின் வெற்றிக்கு ஒரு காரணம் என்று கூறினாலும் மிகையாகாது.

நடிப்பு மட்டுமல்ல, காட்சி ஜோடனைகளும் குறிப்பிட வேண்டியவை. இடியோசையும், கண்ணைப் பறிக்கும் மின்னலும், தொடர்ந்து பெய்த மழையும், ஒருகணம் குடை கொண்டு வர மறந்து விட்டோமே என்ற கவலையை அளித்தன. அக்காட்சிகள் அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருந்தன.

இவ்வளவு சிறப்பாக நடந்த நாடகத்தை டைரக்ட் செய்தது யார் என்று தெரிந்து கொள்ள வேண்டாமா?

திரை மறைவிலிருந்த கப்புதான். அவரது திறமையான டைரக்ஷன் காரணமாக நாடகம் நன்கு சோபித்தது.

-சாந்தா ராமஸ்வாமி

பூனையும் அழகிய வாலிபனும்

ஒரே ஒரு காலத்திலே...
பூனையொன்று அழகிய வாலிபன் மீது காதல் கொண்டது. பூனையின் தாபத்தைக் கண்டு இரக்கம் கொண்ட ஒரு தேவதை பூனையை உடனே ஒரு அழகிய பெண்ணாக மாற்றிவிட்டது. பெண்ணைக் கண்டு மயங்கிய வாலிபன் அவளை உடனே மணம் புரிந்து கொண்டு விட்டான்.

சிறிது காலம் சென்றது. பெண் எப்படி இருக்கிறாள் என்று அறிய தேவதை ஆசை கொண்டது. பூனையின் பழைய சுபாவங்கள் அவளிடம் இருக்கிறதா என்பது பற்றியும் அறிய அதற்கு ஆவல். ஆகையால் அப்பெண் எதிரே ஒரு எலியை தேவதை ஓட விட்டது. அவ்வளவுதான். பெண் உடனே ஓடி எலியை 'லபக்' என்று பிடித்து விட்டாள். இதைக் கண்டு மனம் கசந்த தேவதை பெண்ணை பழையபடி பூனையாக மாற்றி விட்டது.

பெண்ணின் மீது உயிரையே வைத்திருந்த வாலிபனின் மனம் உடைந்து போயிற்று. "ஐயோ, நான் மட்டும் ஒரு டின் பாரிஸ் மிட்டாய் வாங்கிக் கொடுத்திருந்தால், அவள் எலியைப் பிடிக்க ஓடியிருக்க மாட்டாளே" என்று கதறி அழுதான்.





நீதி: நீ காதலிப்பவர்களில் பாரி மிட்டாயை விரும்பாதவரும் உண்டோ

Parry's


பாரிஸ் மிட்டாய்கள் நிறைந்த ருசியும், தூய்மையும் கொண்டவை. இவற்றை உங்கள் இஷ்டப்படி சில்லறையாகவோ, அல்லது கண்கவர் மோஸ்தர்களில் அமைந்துள்ள அழகான டின்களிலோ வாங்கலாம். விலை ரூ. 1.75 லிருந்து ரூ. 5.00 வரை.

PRS 502 a

தயாரிப்போர்: பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், மதராஸ்


ஆரியன்

உங்கள் பற்களுக்குப் பொருத்தமானவை



உங்கள் பற்களின் பாதுகாப்புக்கு சரியான அமைப்புள்ள ஆரியன் பிரஷ்ஷுக்கு விட்டுவிட்டீர்களேயானால், அது உங்கள் பற்கள் முழுவதையும் முற்றிலும் நன்குசுச் சுத்தி செய்யுமென்பதை நீங்கள் உறுதி செய்துகொள்ளலாம்.

ஸ்டாண்டர்டு சைஸிலும் சிறிய சைஸிலும் கிடைக்கும். மிகவும் நேர்த்தியான உயர்ந்த ரகம்-பிளாஸ்டிக் பெட்டியில் கிடைக்கிறது.



நன்குசுச் சுத்திசெய்கிறது.
நீடித்து உழைக்கக் கூடியது.

Aryan

பளபளிக்கும் சோப் நுரைக்கு ஆரியன் ஷேவிங் பிரஷையே எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆஸ்தமா பிராங்கைடீஸ் குளிர்சுரம்

முதலியவைகளை எப்படி அடக்குவது

மூச்சுத் திணறல், இருமல், சிரமப்பட்டு மூச்சு விடுதல் சுவாசம் தடைபடுதல் ஆஸ்த்மா, ப்ராங்கைடீஸ், ஜலதோஷம், குளிர் சுரம் முதலிய உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இப்பொழுது மெண்டாகோ (Mandaco) சாப்பிட்டு நிவாரணம் அடையலாம். இந்த நவீன விஞ்ஞான அமெரிக்க மருந்து, இரத்தத்தின் மூலமாக சுவாசப்பைகள், சுவாசக் குழாய்கள், மற்றும் மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் மற்றும் சிரமப்பட்டு மூச்சுவிடுதல், இல்லாமல் சுகமாக சுவாசித்து குழந்தைபோல் தூங்கலாம். பூரண திருப்தி உங்களுக்கு அது நிச்சயமாக அளிக்கும்.

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடர்ம் (NIXODERM) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடர்ம் (NIXODERM) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் கவனிப்பீர்கள் நிக்ஸோடர்ம் (NIXODERM) சருமத்தின் மீது ஏற்படும் முகப் பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படை, படர் தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான இருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், இருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர் (NIXODERM) வாங்குங்கள். முகப் பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடர்ம் (NIXODERM) வாங்குங்கள்.

புல்லிடையே மறைத்தான். கைவேலுடன் தண்ணீரில் இறங்கி, குகையை நோக்கிச் சென்றான்.

செத்த பாம்பை விழுங்கித் தீர்த்து விட்ட முதலை, உயிர் மனிதன் தன்னிடம் வருவதைக் கண்டவுடன், தன் வாயை அகலத் திறந்து கொண்டே அவன்மேல் பாய்ந்தது. தன் பலமனைத்தும் சேர்த்துக் கைவேலை அதன் தொண்டையில் பாய்ச்சினான் இளங்கோ. வேலின் அடிப்புறத்தை இறுகப் பற்றிக் கொண்டான்.

முதலை வெகுண்டு துள்ளியது. தொண்டைக்குள் பாய்ந்திருந்த வேலையும், அதைப் பற்றியிருந்தவனையும் ஒன்றாக நீரில் கவிழ்க்கப் பார்த்தது. நீரை அடித்துப் பிளந்துகொண்டே அவனை நாலா பக்கமும் இழுக்கடித்தது. கீழும், மேலும் பக்கவாட்டிலும் அவனைப் பம்பரமாகச் சுழல வைத்தது.

இளங்கோவைக் களைப்படையச்செய்து நீரில் மூழ்கடிக்க வேண்டுமென்று முதலை நினைத்தது போலும். இளங்கோ அதன் போக்கில் விட்டுப் பிறகு அதைக் கவிழ்க்க விரும்பினான்.

நீருக்குமேல் முதலை எழும்பித் திமிரியடித்தபோது, இளங்கோவும் நீருக்கு மேல் வந்தான். அது அடித்தளத்துக்குச் சென்றபோது அவனும் போனான். பாறைகளில் அது அவனை மோதிக் கொல்லப் பார்த்தது. அவனும் பாறைகளின் இடுக்கில் அதை அழுத்தி வேல் முனையை இன்னும் உள்ளே ஆழச் செலுத்தப் பார்த்தான்.

வேல் முனை உள்ளே போகப் போக முதலையின் உக்கிரத் தாக்குதலும் மிகுதியாகியது. 'குபுகுபு'வென்று பீச்சிட்ட அதன் செங்குருதி அவன் முகத்தில் படிந்தது. அதன் வாய்க்குள் தன் தலையைக் கொடுக்கப் போகிறவன் போல் அவன் துணிந்து நெருங்கிச் சென்றான்.

தண்ணீருக்குள்ளே சென்று முதலையைக் கொல்ல நினைப்பது விவேகமற்ற செயல்தானோ? பிடி தளர, இளங்கோவின் கரங்களிலிருந்து வேல் நழுவி விடும் போல் தோன்றியது. வாய், மூக்கு, செவிகள் எங்குமே தண்ணீர் பாய்ந்தது. திக்கு முக்காடித் திணறினான் அவன்.

காவல் வீரன் திரும்பி வருவதற்குள் அவன் தான் வந்த காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும். நீரில் எழுந்த சத்தத்தைக் கேட்டு, எல்லா வீரர்களுமே ஓடி வந்தாலும் அது வியப்பில்லை. நொடிக்கொரு முறை பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டான் இளங்கோ.

அவன் அயர்ந்திருந்த மின் வெட்டும் நேரத்தில், அவனை மேலே தூக்கி எறிந்து பந்தாடப் பார்த்தது முதலை. ஒரு சாண் அளவுக்கு நீருக்கு மேலே தாவி, அவனையும் தூக்கி எறிந்தது. அவன் தன் கைவேலை விடவில்லை. அப்படியே வேலைச் சுழற்றி முதலையை ஒரு திருப்புத் திருப்பிப் புரட்டினான்.

முதலையின் அடிவயிற்றைக் கிழித்துக் கொண்டு, அதைத் தலை குப்புற மிதக்க விட்டு, இளங்கோவுடன் கையோடு வந்தது வேல். முதலையின் உயிர்த் துடிப்பும் இரத்தப் பெருக்கும் சிறிது சிறிதாக நின்றன. அதைக் காண விரும்பாதவன் போல் கரைப் பக்கம் திரும்பித் தன் வேலைக் கரையில் எறிந்தான். குகையைக் குறி வைத்து வேகமாக நீந்தினான்.

குகை அப்படியொன்றும் ஆழ்ந்து சென்ற குடைவரையாக இல்லை. நீண்ட சதுரத்தில் பெரியதொரு பிறைபோல் தோன்றியது. துழாவிப் பார்த்தான் இளங்கோ. ஏதோ ஒரு கல்லுருவம் அவன் கைகளுக்குத் தட்டுப்பட்டது. புத்தர்பிரானின் திரு உருவமாகவோ அல்லது வேறு ஏதோ ஒரு விக்கிரகமாகவோ இருக்க வேண்டும்.

அதன் முதுகுப்புறத்தில், பெரிய பாறாங்கல்லுக்கு அடியில், ஒரு பேழை இருப்பதைக் கண்டான். அதைக் கண்டவுடன் அவனுடைய களைப்பும் சோர்வும் எங்கோ பறந்து விட்டன. உள்ளத்தில் உற்சாகம் பெருக்கெடுத்தது.

பேழையின் மேலிருந்த கல்லைக் கீழே உருட்டித் தள்ளிவிட்டு, அதைத் தன் இடதுபக்க விலாப்புறம் இடுக்கிக் கொண்டான். அவனுடைய மார்புக் கூட்டுக்குள் துடித்துக் கொண்டிருந்த இருதயம் அந்தப் பேழைக்குள் புகுந்து கொள்ளப் பார்த்தது. தன் இருதயத்தின் அடித்தளத்திலிருந்து ஓர் இன்னிசைப்



புல்லிடையே மறைந்தான். கைவேலுடன் தண்ணீரில் இறங்கி, குகையை நோக்கிச் சென்றான்.

செத்த பாம்பை விழுங்கித் தீர்ந்து விட்ட முதலை, உயிர் மனிதன் தன்னிடம் வருவதைக் கண்டவுடன், தன் வாயை அகலத் திறந்து கொண்டே அவன்மேல் பாய்ந்தது. தன் பலமனைத்தும் சேர்த்துக் கைவேலை அதன் தொண்டையில் பாய்ச்சினான் இளங்கோ. வேலின் அடிப்புறத்தை இறுகப் பற்றிக் கொண்டான்.

முதலை வெகுண்டு துள்ளியது. தொண்டைக்குள் பாய்ந்திருந்த வேலையும், அதைப் பற்றி யிருந்தவனையும் ஒன்றாக நீரில் கவிழ்க்கப் பார்த்தது. நீரை அடித்துப் பிளந்துகொண்டே அவனை நாலா பக்கமும் இழுக்கடித்தது. கீழும், மேலும் பக்கவாட்டிலும் அவனைப் பம்பரமாகச் சுழல வைத்தது.

இளங்கோவைக் களைப்படையச்செய்து நீரில் மூழ்கடிக்க வேண்டுமென்று முதலை நினைத்தது போலும். இளங்கோ அதன் போக்கில் விட்டுப் பிறகு அதைக் கவிழ்க்க விரும்பினான்.

நீருக்குமேல் முதலை எழும்பித் திமிரி யடித்தபோது, இளங்கோவும் நீருக்கு மேல் வந்தான். அது அடித்தளத்துக்குச் சென்றபோது அவனும் போனான். பாறைகளில் அது அவனை மோதிக் கொல்லப் பார்த்தது. அவனும் பாறைகளின் இடுக்கில் அதை அழுத்தி வேல் முனையை இன்னும் உள்ளே ஆழச் செலுத்தப் பார்த்தான்.

வேல் முனை உள்ளே போகப் போக முதலையின் உக்கிரத் தாக்குதலும் மிகுதியாகியது. 'குபுகுபு'வென்று பீச்சிட்ட அதன் செங்குருதி அவன் முகத்தில் படிந்தது. அதன் வாய்க்குள் தன் தலையைக் கொடுக்கப் போகிறவன் போல் அவன் துணிந்து நெருங்கிச் சென்றான்.

தண்ணீருக்குள்ளே சென்று முதலையைக் கொல்ல நினைப்பது விவேகமற்ற செயல்தானோ? பிடி தளர, இளங்கோவின் கரங்களிலிருந்து வேல் நழுவி விடும் போல் தோன்றியது. வாய், மூக்கு, செவிகள் எங்குமே தண்ணீர் பாய்ந்தது. திக்கு முக்காடித் திணறினான் அவன்.

காவல் வீரன் திரும்பி வருவதற்குள் அவன் தான் வந்த காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும். நீரில் எழுந்த சத்தத்தைக் கேட்டு, எல்லா வீரர்களுமே ஓடி வந்தாலும் அது வியப்பில்லை. நொடிக்கொரு முறை பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டான் இளங்கோ.

அவன் அயர்ந்திருந்த மின் வெட்டும் நேரத்தில், அவனை மேலே தூக்கி எறிந்து பந்தாடப் பார்த்தது முதலை. ஒரு சாண் அளவுக்கு நீருக்கு மேலே தாவி, அவனையும் தூக்கி எறிந்தது. அவன் தன் கைவேலை விடவில்லை. அப்படியே வேலைச் சுழற்றி முதலையை ஒரு திருப்புத் திருப்பிப் புரட்டினான்.

முதலையின் அடிவயிற்றைக் கிழித்துக் கொண்டு, அதைத் தலை குப்புற மிதக்க விட்டு, இளங்கோவுடன் கையோடு வந்தது வேல். முதலையின் உயிர்த் துடிப்பும் இரத்தப் பெருக்கும் சிறிது சிறிதாக நின்றன. அதைக் காண விரும்பாதவன் போல் கரைப் பக்கம் திரும்பித் தன் வேலைக் கரையில் எறிந்தான். குகையைக் குறி வைத்து வேகமாக நீந்தினான்.

குகை அப்படியொன்றும் ஆழ்ந்து சென்ற குடைவரையாக இல்லை. நீண்ட சதுரத்தில் பெரியதொரு பிறைபோல் தோன்றியது. துழாவிப் பார்த்தான் இளங்கோ. ஏதோ ஒரு கல்லுருவம் அவன் கைகளுக்குத் தட்டுப்பட்டது. புத்தர்பிரானின் திரு உருவமாகவோ அல்லது வேறு ஏதோ ஒரு விக்கிரகமாகவோ இருக்க வேண்டும்.



அதன் முதுகுப்புறத்தில், பெரிய பாறாங்கல்லுக்கு அடியில், ஒரு பேழை இருப்பதைக் கண்டான். அதைக் கண்டவுடன் அவனுடைய களைப்பும் சோர்வும் எங்கோ பறந்து விட்டன. உள்ளத்தில் உற்சாகம் பெருக்கெடுத்தது.

பேழையின் மேலிருந்த கல்லைக் கீழே உருட்டித் தள்ளிவிட்டு, அதைத் தன் இடதுபக்க விலாப்புறம் இடுக்கிக் கொண்டான். அவனுடைய மார்புக் கூட்டுக்குள் துடித்துக் கொண்டிருந்த இருதயம் அந்தப் பேழைக்குள் புகுந்து கொள்ளப் பார்த்தது. தன் இருதயத்தின் அடித்தளத்திலிருந்து ஓர் இன்னிசைப்



பாடல் பிறந்து. பற்பல அபூர்வ ராகங்களாக அது உடலின் நாடி நரம்புகளில் பரவுவதை அவன் உணர்ந்தான்.

சின்னஞ்சிறு தங்கமீன் குஞ்சுபோல் அவன் நீரைக் கிழித்துக் கொண்டு, அதன் சிற்றலைகளைக் கண்டு சிரித்துக் கொண்டு, சுனையின் கரைக்கு வந்து சேர்ந்தான். நெற்றியில் படிந்த கேசத்தை ஒதுக்கிவிட்டபடியே புல் புதரை நெருங்கினான்.


மலைப் புல் அவனைச் சாமரம் வீசி வரவேற்றது. சுனைக் காற்று அவனுக்கு வாழ்த்துப் பண் பாடியது. ரோகணத்தின் மலைப் பாறைகள் அவன் மன உறுதி கண்டு பொருமி மௌனம் சாதித்தன.

இந்த வெற்றிப் பெருமிதத்தை இளங்கோ விநாடிப் பொழுது கூட அநுபவித்து மகிழவில்லை.

"போய் விட்டது! போய் விட்டது!" என்ற அடித் தொண்டைக் கூக்குரல் திடீரென்று எழுந்தது.

திடுக்கிட்டுக் குரல் வந்த திக்கில் திரும்பினான் இளங்கோ. மரத்துக்கு அருகே நின்ற வட்டப்பாறைக்குப் பின் பிதுங்கும் விழிகள் தெரிந்தன. "சோழநாட்டான்! சோழநாட்டான்!" என்று கத்திக் கொண்டே அவன் பேயைக் கண்டவன் போல் அலறியடித்துக் கொண்டு ஓடினான்.

கிராங்க் ஷாப்ட் (குறிப்பிட்ட பகுதியில்) தேயும்–
ஆனால் புதிய உறுப்புக்கள் வாங்கவேண்டாம்



மோட்டார் வாகனத்தின் பல உறுப்புக்கள் உபயோகத்தில் தேய்மான சேதமடையும். டி. வி. எஸ். தேய்ந்த உறுப்புக்களைப் புதுப்பிக்கும்.




டி. வி. சுந்தரம் அய்யங்கார்
கிளைகள் : திருச்சி –
சுந்தரம் மோட்டார்ஸ்


இறக்குமதி குறைவால் பல உறுப்புக்கள் கிட்டுவது கடினம். ஆகையால் தேய்ந்த உறுப்புக்களை சீர்படுத்தி உழைப்பு காணவேண்டும். "வெல்டிங்"—மற்ற முறைகளில்—செய்வதால் உலோக ரகம் சீர்கேடு அடைகிறது. டி.வி.எஸ். ஸில் உலோக உருக்குப் பாய்ச்சி (Metal Spraying) முறையில் தேய்மானத்தை கனப்படுத்தி, உரிய அளவிற்கு கடசல் பிடித்து புதிய உறுப்பு சேவையே காணப்படுகிறது. ஆனல், புதுப்பிக்கும் செலவு குறைவு.


மோட்டார் புதிய உறுப்புக்கள் கிடைக்கும் சங்கடத்தை விலக்க டி.வி.எஸ். புதுப்பிக்கும் முறை உதவும்.

புதுப்பிக்கப்படும் சில உறுப்புக்கள் :



தேய்ந்த ப்ரொபெல்லர் ஷாப்ட்


தேய்ந்த ஹப்


தேய்ந்த ஹாரன் ரிங்


தேய்ந்த ப்ரஷர் ப்ளேட்


தேய்ந்த சிலிண்டர் ஹெட்


கிராங் ஷாப்ட் தயம்பட இழைக்கப்படுகிறது.

அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

திருநெல்வேலி – புதுக்கோட்டை – சேலம் – கோயம்புத்தூர்

பிரைவேட் லிமிடெட், மதராஸ்

TVS 671 Rev

இளங்கோவுக்கு யோசிப்பதற்கு நேரமும் இல்லை; தப்பிச் செல்வதற்கு வழியும் இல்லை. வந்த வழியே பேழையுடன் இறங்க முடியாது.

புதருக்குள் பேழையை வைத்துவிட்டு, அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு மரத்தடிக்கு ஓடினான். வேலும், வாளும் இருந்தன; வில்லும் அம்புகளும் இருந்தன. முன்புறம் பாறையையும் பின்புறம் மரத்தையும் மதில்களாக வைத்துக் கொண்டு போராட்டத்தைத் துவங்கினான்.

பாறை முகட்டுக்கு மேல் இளங்கோவின் பார்வை சென்றபோது, காவலர்கள் அனைவருமே ஒன்றாய்த் திரண்டு வருவது தெரிந்தது. அம்பெடுத்து நாணேற்றி வில் வளைத்தான். அதற்குள் அவன் தலைக்குமேல் ரோகணத்து வேல்களும் அம்புகளும் பறந்துவர முற்பட்டன.

எதிர்ப்போரின் சரக்கூடத்தைத் துளைத்துக் கொண்டு சென்றன, இளங்கோவின் அம்புகள். விநாடிக்கொரு முறை மரண ஓலம் ஒன்றன்பின் ஒன்றாக எழும்பிக் கொண்டிருந்தது. எனினும் அவர்களது எதிர்ப்பும், முன்னேற்றமும் அறவே தடைப்படவில்லை. எஞ்சி நின்ற நான்கைந்து வீரர்களும் அணு அணுவாக அவனை நெருங்கி வந்து வளைத்துக் கொள்ளப் பார்த்தனர்.

இளங்கோவின் அம்புக்கூடு வெற்றுக் கூடாகியது. வில்லை வீசியெறிந்து விட்டுக் கையில் வேலெடுத்தான். எதிர்ப்பவர்களோ கொக்கரித்துக் கொண்டே கூரம்புகளை ஏவிவிட்டனர். கைவேலால் அம்புகளை மட்டுமே அவனால் தடுக்க முடிந்தது; அவர்கள் நெருங்கி வருவதைத் தடுக்க முடியவில்லை.

நான்குபேர் இருந்தார்கள் இப்போது. நால்வரிடமும் வில்லம்புகள் இருந்தன. அவர்கள் அவனை அணுகிக் கொண்டிருந்தார்கள்.

பாறையின் அடிப்புறத்தில் வேலைக் கொடுத்தான் இளங்கோ. புரட்டித் தள்ள முடியாது போல் தோன்றியது. பாறை புரண்டால் அவனும் அதோடு உருண்டு மடிய வேண்டியதுதான்.

பின்பக்கம் திரும்பி மரத்தின் வேரைப் பற்றிக் கொண்டான். வேலின் அடிப்புறம் தன் முதுகைக் கொடுத்தான். கண்கள் கொப்பளித்தன. கழுத்து நரம்புகள் புடைத்தெழுந்தன. மூச்சை அடக்கிக் கொண்டு முதுகந் தண்டால் வேலைத் தள்ளிவிட்டான்.

மறு கணம் பயங்கரமானதொரு கோடை இடி இடித்து, அந்த மலைப் பிரதேசத்தையே அதிர வைத்தது; கிடுகிடுக்கச் செய்தது. வேலும் முறிந்தது; பாறையும் புரண்டது. எதிர்த்து வந்தோர் நால்வரும் ஒன்றாகத் தங்கள் கடைசிக் குரலை எழுப்பினார்கள்.

பேழையைத் தூக்கிக் கொண்டு அவசரம் அவசரமாகக் குகையின் பின் வாயிலை நாடி வந்தான் இளங்கோ. வழியில் அங்கங்கே கிடந்த காவல் வீரர்களின் சடலங்களைப் பார்ப்பதற்கு அவனுக்கு அருவருப்பாக இருந்தது. எண்ணிப் பார்க்கவில்லை. எல்லோருமே மடிந்திருப்பார்கள் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

குகையின் பிற வாயிலில் இறங்குவது கிணற்றுக்குள் இறங்குவது போலிருந்தது. குறுக்கும் நெடுக்குமாக நீட்டிக் கொண்டிருந்த பாறைகள் படிகளாக உதவின. சிறிது தூரம் சென்றவுடன் வெளி வாயிலின் ஒளி தெரிந்தது. அதைக் கடந்து குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்த மலையடிவாரத்துக்கு வந்தான்.

இளங்கோவுக்கு வியப்பொரு புறம்; அச்சம் ஒருபுறம். இரண்டு குதிரைகள் கட்டியிருந்த அந்த இடத்தில் இப்போது ஒரே ஒரு குதிரை மட்டுமே மேய்ந்து கொண்டிருந்தது!

மற்றொரு குதிரை எங்கே? மனிதனின் காலடிகளும் குதிரையின் குளம்புச் சுவடும் தரையில் பதிந்திருந்தன. திரும்பிப் போய் இறந்தவர்களின் சடலங்களை எண்ணிப் பார்க்க நினைத்தான். பிறகு அந்த யோசனையை மாற்றிக் கொண்டு எஞ்சியிருந்த குதிரையின் மேல் பேழையை வைத்து விட்டுத் தானும் ஏறி உட்கார்ந்து கொண்டான். புரவியின் கடிவாளத்தைச் சுண்டினான்.

வீரர்களில் ஒருவன் தப்பி வந்து மகிந்தரின் குகையை நோக்கிப் பறந்தது இளங்கோவுக்குத் தெரியாது.

குகையிலிருந்து மகிந்தரும் அவரது வீரர்களும் கப்பகல்லகத்துக்குப் புறப்பட்டுவிட்ட செய்தி அந்த வீரனுக்கே தெரியாது. குகையைப் பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பியவன், குளம்பொலி கேட்டவுடன் பாதையோரம் அடர்ந்திருந்த புதருக்குப் பின் பதுங்கிக் கொண்டான். ஒலி நெருங்கி வந்தது. குதிரையின் மேலிருப்பவன் இளங்கோவென்பதையும், அவனிடம் பேழை இருப்பதையும் கண்டு கொண்டான். நேரடியாகச் சென்று எதிர்ப்பதற்கு நெஞ்சில் உரமில்லை.

குதிரை அவனைத் தாண்டிச் செல்லும் நேரத்தில் இளங்கோவின் கழுத்துக்குக் குறி வைத்து வேலெறிந்தான். மயிரிழை தப்பிவிட்ட கூர்வேல் இளங்கோவின் வலது தோள் பட்டையில் பாய்ந்தது.

"ஆ!" என்ற வேதனைக் குரலோடு குதிரையிலிருந்து பேழையுடன் கீழ சாய்ந்து தரையில் உருண்டான்

இளங்கோ பாய்ந்த இடத்திலிருந்து வேலும் தரையில் விழுந்தது. அதை எடுத்துக்கொண்டு வேல் பாய்ந்து வந்த திசையை நோக்கினான். செடிப்புதர்கள் அசைவது தெரிந்தது. காயம்பட்ட அதே தோளை உயர்த்தி, அதே வேலைத் திருப்பி எறிந்தான். மறுகணத்தில் மிரண்டுபோய் வெளியே தாவிய குதிரையிலிருந்து ஒரு மனித உடல் தரையில் சுருண்டு விழுந்து அசைவற்றுக் கிடப்பது அவனுக்குத் தெரிந்தது.

இளங்கோவால் திரும்பவும் நடந்து போய் சற்று தூரத்தில் நின்ற குதிரையின் மேல் ஏற முடியவில்லை. தள்ளாடி நடந்து சென்றான். வலது தோள் பட்டையிலிருந்து கரம் தனியே துண்டித்துத் தொங்குவதுபோல் தோன்றியது. இரத்தப் பெருக்கம் நிற்கவே யில்லை. இடுப்பிலிருந்த ஈரத் துணியைக் காயத்தில் பிழிந்து விட்டுக் கொண்டு மெதுவாகக் குதிரையின் முதுகைப் பற்றிக் கொண்டு தொத்தினான்.

பேழை அவனுக்கொரு சுமையாகத் தோன்றவில்லை உடலைச் சுமப்பதுதான் அவனுக்குச் சோர்வு தந்தது.

நல்ல வேளையாக நாற்சந்திச் சாவடிக் கருகே அவன் விட்டு வந்த அவனுடைய குதிரையை யாரும் அவிழ்த்துச் செல்ல வில்லை. சுற்றிலும் மண்டிக் கிடந்த பசும் புல்லைக்கூட அது சரியாக மேயாமல் தன் தலைவனை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. மெல்லப் பேழையை அதன் முதுகில் வைத்துக் கயிற்றைச் சுற்றினான். தானும் ஏறிக் களைப்பு மிகுதியால் பேழையில் தலையைச் சாய்த்தபடி குப்புறப் படுத்துக் கொண்டான்.

குதிரையால் வாய்விட்டுப் புலம்ப முடிந்தால் அது தன் தலைவனுக்காகப் புலம்பிக் கண்ணீர் வடித்திருக்கும். எப்படியாவது அவனைக் கொண்டுபோய்ச் சேர்த்தால் போதுமென்று, தன் களைப்பையும் மறந்து நடந்தது.

இளங்கோவுக்கு நினைவு தடுமாறத் தொடங்கியது. என்னென்னவோ காட்சிகள் அவன் மனக்குகைக்குள் உருப்பெற்றன. அருள்மொழி நங்கை அவனுக்கு வெற்றித் திலகமிட்டு அனுப்புகிறாள். ரோகிணி அவன் காதருகில் தன் இதழ்களை வைத்து மணிமுடியின் இருப்பிடத்தைச் சொல்கிறாள். இந்த இரண்டு பெண்களுமே அவன் வெற்றி பெற்றதைக் கண்டு பூரிப்படைகிறார்கள். வீர சுவர்க்கம் புகுந்ததைக் கேட்டு வெம்பித் தவிக்கிறார்கள்.

வெற்றி அல்லது வீரமரணம் என்று கட்டளையிட்ட அவன் தந்தை, வெற்றிக்குப் பின் அவன் வீர மரணமடைந்ததால் அவனுக்காக ஒரே ஒரு சொட்டுக் கண்ணீர் உதிர்க்கிறார். அடடா! முத்து போன்ற தந்தையின் கண்ணீர் சுவர்க்க லோகத்துக்கே அல்லவா அவனைத் தேடிக் கொண்டு வருகிறது!

ஆமாம்; எமதர்மராஜனின் கோட்டை வாயிலை நெருங்குவதுபோல் தோன்றியது அவனுக்கு. அதற்குள் நாலா பக்கங்களிலும் எமகிங்கரர்களை அவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள். கையில் தீப் பந்தங்களை ஏந்திக்கொண்டு குதிரைகள் மீதல்லவோ அவர்கள் வருகிறார்கள்! அட, பாவிகளா! பேழையைக் கொண்டு போய் மாமன்னரிடம் சேர்ப்பித்தவுடன் நீங்கள் வந்திருக்கக் கூடாதா?

முப்பத்துநான்காம் அத்தியாயம்

வெற்றித் திருமகன்

இளங்கோவின் தோளில் வேல் பாய்ந்த அதே நேரத்தில், வீரிட்டு அலறிக் கொண்டே படுக்கையிலிருந்து பதை பதைத்து எழுந்தாள் அருள்மொழி.

பகலுறக்கம் கொள்வது அவள் பழக்கமில்லை. அன்றைக்குப் பொழுது விடிந்ததிலிருந்தே அவளுடைய உடலும் மனமும் சோர்வுற்றிருந்தன. எதிலும் மனம் நாட்டம் கொள்ளவில்லை. பிற்பகலில் ஏதேதோ கற்பனை செய்து தன்னைக் குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டே கட்டிலில் சாய்ந்தாள்.

அரை நாழிகைப் பொழுதுக்குள் பயங்கரமானதொரு பகல் கனவு தோன்றி அவளை இப்படியெல்லாம் ஆட்டிப் படைத்தது.

தன் தமக்கையின் கூக்குரலைக் கேட்ட அம்மங்கைதேவி தொடுத்துக் கொண்டிருந்த மல்லிகைச் சரத்தை அப்படியே போட்டுவிட்டு, அருள்மொழியிடம் ஓடி வந்தாள். அருள்மொழியின் விழிகள் அப்போது அகலத் திறந்திருந்தன. வாயில் விரலை வைத்து அவள் தன்னையறியாது கடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் அருள் இல்லை.

"என்ன அக்கா, இது!"

தன் தங்கையின் முகம் ஒரு விநாடிக்குப் பிறகே அவளுக்குத் தெரிந்தது. மறுமொழி கூறாமல் அச்சத்துடன் அம்மங்கையை நோக்கினாள்.

"உறங்கி விட்டாயா, அக்கா?"

"அப்படித்தான் நினைக்கிறேன்."

"ஏதும் கனவு கண்டாயா?"

"கனவா?" என்று அம்மங்கையிடமே திருப்பிக் கேட்டுவிட்டு, கண்ட கனவைத் திரும்பவும் நினைவுபடுத்திக் கொண்டு, தனக்குள் நடுங்கினாள். "ஆமாம்! கனவாகத்தான் இருக்க வேண்டும்."

"என்ன கனவக்கா?" என்று கேட்டு, அவளருகில் அமர்ந்து அவளைச் செல்லமாக அணைத்துக் கொண்டாள் அம்மங்கை. அவளுடைய கேள்விக்கு அருள்மொழி பதிலளிக்காமல் மௌனம் சாதிக்கவே, "என்னிடம் சொல்லக் கூடாதா? என்ன கனவு அது?" என்று திரும்பவும் வற்புறுத்திக் கேட்டாள்.

"எனக்கு அதைச் சொல்லத் தெரியவில்லை. என்னவோ ஒரு பயங்கர கனவு."

"என்னிடம் நீ எப்போதும் எதையும் சொல்வதில்லை" என்று சிணுங்கினாள் அம்மங்கை. "கண்ட கனவு அதற்குள் உனக்கு மறந்து விடுமா?"

"பகற் கனவு பலிக்காதென்பார்களே, ஒருவேளை பலித்தாலும் பலித்து விடுமோ?" அருள்மொழி கேட்டாள். அவள் தங்கை பதிலிறுக்கவில்லை. பிறகு தங்கையின் கோபத்தைத் தணிப்பதற்காக அருள்மொழியே தொடர்ந்து கூறினாள்: "ஈழநாட்டில் நம்மைச்சேர்ந்தவர்களுக்கு ஏதோ துன்பமென்று தெரிகிறது. தந்தையாருக்கோ மற்றவர்களுக்கோ ஏதும் நேர்ந்துவிடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். போர்க்களத்தில் நடப்பதுபோல பயங்கரமான காட்சிகள் கனவில் வந்தன. தெளிவாக ஒன்றும் விளங்கவில்லை."

"பகற்கனவு ஒருக்காலும் பலிக்காது. எழுந்து போய் முகத்தைக் கழுவி விட்டு வா. உனக்காகப் பூச்சரம் கட்டியிருக்கிறேன். வைத்துக் கொள்."

முகத்தைக் கழுவிக் குங்குமம் இட்டுக் கொண்டு வந்தாள் அருள்மொழி. பெரிய கோயிலுக்குடையவனை மனத்துக்குள் பிரார்த்தித்துக் கொண்டாள். அம்மங்கையின் வண்ணக் கரங்கள் தன் தமக்கையின் கொண்டைக்கு அழகுற மலர் சூடிவிட்டன. என்றைக்குமே எதற்குமே கலங்காத அருள்மொழி, சிறு கனவு கண்டு பதறியது அவளுக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

அருள்மொழி அந்தப்புரத்திலிருந்து அரண்மனையின் ஆலோசனை மண்டபத்துக்குச் சென்றாள். அவளுடைய மனமோ தன்னுடைய ஆழத்தைத் தானே தேடுவதுபோல் உள்நோக்கி விரைந்தது. அவள் கண்ட கனவு இளங்கோவைப் பற்றியது. இளங்கோவின் உயிரைப் பற்றியது. அவன் உயிருடன் இருக்கிறானா? இல்லையா? திரும்பி வருவானா? மாட்டானா? ஒன்றும் புரியவில்லை.



ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் சிறிய வேளாரைப் போலவே, அவனும் உயிரற்று விழுந்து விட்டதாகக் கனவு கண்டாள் அருள்மொழி. 'பகற் கனவு பலிக்காது. அப்படியே இரவுக் கனவு போன்று இருந்தாலும் எதிரிடையான நிகழ்ச்சி நடக்கும்' என்று தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள் அவள்.

மனத்தின் சக்திக்கு எல்லையென்பதே கிடையாது போலும். ஒன்றையே திரும்பத்திரும்ப நினைத்துக் கொண்டிருந்தால், நினைக்கும் பொருளை நாடி அது காலம், தூரம், இடமெல்லாம் கடந்து சென்று பின்பற்றும் போலும். இளங்கோ ரோகணத்தில் வேல்பட்டு அலறிய அதே நேரத்தில், அருள்மொழியிடமிருந்து எப்படித்தான் எதிரொலி கிளம்பியதோ!

ஆலோசனை மண்டபத்துக்குள் கொடும்பாளூர் மதுராந்தக வேளார் தனியாக அமர்ந்திருந்தார். அருள்மொழி அருகில் வந்து நின்றது அரை விநாடிக்குப் பிறகு அவருக்குத் தெரிந்தது. வழக்கமாக அவள் அங்கு வருவதும் இல்லை; அவருடன் கலகலப்பாகப் பேசுவதும் இல்லை.

"வா, அம்மா!" என்று அமரச் சொல்லி இருக்கையைச் சுட்டிக் காட்டினார் மதுராந்தக வேளார். "ஏன் என்னவோ போலிருக்கிறாய்?"

"ஈழத்திலிருந்து ஏதாவது செய்திகள் வந்ததா, மாமா? எல்லோரும் அங்கே நலந்தானா?"

பெருமூச்சு விட்டார் பெரிய வேளார். "நலத்துக்கொன்றும் குறைவிருக்காது; ஆனால் ரோகணந்தான் என்றும்போல் நம்மை ஏமாற்றப் பார்க்கிறது" என்றார் மதுராந்தகர். "வழக்கம்போல் அங்கு என்னென்ன நடைபெறுமோ அவை நடந்திருக்கின்றன. நாட்டை நம்மிடம் விட்டுவிட்டு அவர்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். மணிமுடி மாயமாய் மறைந்து விட்டது."

இரண்டு மூன்று தினங்களாக ரோகணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவருக்குத் தெரியாதவை. ஒரு வாரத்துக்கு முன்பு கிடைத்த கடைசிச் செய்தியில் அவர் உலவிக் கொண்டிருந்தார்.

ஊட்டமும் ஊக்கமும் ஒருங்கே பெற

ராகோமடைன்

புத்துணர்ச்சி
அளிக்கும்
சிறந்த பானம்





பைன் கெமிகல் ஒர்க்ஸ், மைசூர்

தந்தி அம்ருதம் தபால் பெட்டி : 82 போன் 2208

ஆர்ய வைத்திய பார்மஸி (கோயமுத்தூர்) லிட்.

தலைமை ஆபீஸ்: திருச்சி ரோடு, கோயமுத்தூர் -1

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்

கிளைகள் : சென்னை (போன் : 85752), கள்ளிக்கோட்டை (போன் : 864), மைசூர் (போன்: 92), எர்ணாகுளம் (போன்: 454), பாலக்காடு (போன்: 195), பொள்ளாச்சி (போன்: 41), ஆலந்தூர், கஞ்சிக்கோடு, கோயமுத்தூர் (ரயில்வே ஸ்டேஷன் எதிரில்)

தொழிற்சாலை : கஞ்சிக்கோடு (தக்ஷிண மலபார்)

யோக்கியதாம்சமும் அனுபவமும் உள்ள வைத்தியர்கள் எல்லாக் கிளைகளிலும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். நோயாளிகளிடமிருந்து வரும் கடிதங்களை பிரதம வைத்தியர் நேரில் கவனித்து, மருந்துகளும், சிகிச்சை முறைகளும் எழுதி அனுப்பப் படுகின்றன. "பஞ்சகர்மா" முதலிய விசேஷ சிகிச்சைகள் வைத்தியர் பார்வையில் தலைமை ஆபீஸிலும் எர்ணாகுளம், பொன்னானி கிளைகளிலும் செய்யப்படுகின்றன

தமிழ், மலையாளம், ஆங்கில மொழிகளில் வேண்டுவோருக்கு விலை ஜாபிதா இலவசமாக அனுப்பப்படும்

விவரங்களுக்கு தலைமை ஆபீஸுக்கு எழுதவும்

ஆர்ய வைத்தியன் பி. வி. ராமவாரியர்

பிரதம வைத்தியர் & மானேஜிங் ஏஜண்டு

OSR

பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

அருணா

ஸ்திரீகள் டானிக்

ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிமிடெட்
சென்னை-17.

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்.,

(நிருவியது)

"வீணு விஹார்," 17-A. ஸயான் - மாதுங்கா எஸ்டேட்
(கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)
பம்பாய் - 22
தந்தி : 'GROW RICH

POST BAG No 6759

25 மாதங்கள்	குறுகிய கால ஏலச் சீட்டுகள் 2 - வது ஞாயிற்றுக்கிழமை ஏலங்கள் 1959 நவம்பர் மாத ஸீரிஸ்	25 அங்கத்தினர்கள்

சேரக் கடைசி தேதி 7-11-59 ... முதல் ஏலத் தேதி 8-11-59

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ 100/-	ரூ 2,500/-	G	ரூ 20/-	ரூ 500/-
C	ரூ 50/-	ரூ 1,250/-	H	ரூ 15/-	ரூ 375/-
F	ரூ 25/-	ரூ 625/-			

நீண்டகால ஏலச் சீட்டுகள்

சேரக் கடைசி தேதி 7-11-59 ... முதல் ஏலத் தேதி 8-11-59

50 மாதங்கள் 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	குறித்த தள்ளுபடி
A	ரூ 100/-	ரூ 5,000	ரூ 500/-
B	ரூ 50/-	ரூ 2,500	ரூ 250/-
D	ரூ 20/-	ரூ 1,000	ரூ 100/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி எம். வி சுப்ரமணியம் மானேஜிங் டைரக்டர்

வெள்ளிக்கிழமை (வார விடுமுறை நாள்)

வேலை நேரம் : காலை 8 முதல் 11 மணி வரை : மாலை 4 முதல் இரவு 8 மணி வரை

தலைமை ஆபீஸ் "பாலுஸேரி பில்டிங்ஸ்", 3, செங்கராச்சாரித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5
கிளைகள் 185, முதல் மாடி, 6-வது கிராஸ், காந்திநகர், பெங்களூர்-9 ✶ 5-6 பிளாக் 11 ஆஸப் அலி ரோடு, புது டெல்லி -1 ✶ 14-A/4, W. E. A. கரோல்பாக், புது டெல்லி-5 198, முதல் மாடி, ஜோர்பக் நர்ஸரி, புது டெல்லி - 3.

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

"எப்போது எல்லோரும் திரும்பி வரு வார்கள் மாமா?" என்று கேட்டாள் அருள்மொழி நங்கை.

"எல்லோருமா?" விசனத்துடன் சிரித்தார் வேளார். "போருக்குச் சென்றவர்கள் எல்லோருமே திரும்பி வருவ தென்றால் அது சாத்தியப்படுமா அருள்மொழி? போனவர்கள் போக இருப்பவர்கள் வருவார்கள்."

இந்தப் பெரிய வேளார் எப்போதுமே இப்படித்தான் என்று நினைத்தாள் அருள்மொழி. நல்ல சொல் சொல்லி அவர் நாவுக்குப் பழக்கமில்லை.

"தந்தையார் திரும்புவார்களா?" என்று சிறிது சினத்துடன் வினவினாள். "எப்போது வருவார்கள்?"

நாட்டு நிலைமையில் அவரது நாட்டம் திரும்பியது. "அதையா கேட்கிறாய்? மிக விரைவில் திரும்பி விடுவார்கள். சக்கரவர்த்திகளுக்கு நான் திருமுகம் அனுப்பியிருக்கிறேன்."

அவர் தொடர்ந்து கூறலானார்:— "ஈழத்தின் நிலைமை என்றும் போல் இழுத்துப் பறித்துக்கொண்டு நிற்கிறது. இந்தச் சமயத்தில் நம்மைப் பாண்டியர்கள் வெளிப்படையாகவே பகைத்துக் கொள்ளத் துணிந்து விட்டார்கள். அவர்களை நிர்மூலம் செய்தாலொழிய, சோழ சாம்ராஜ்யத்துக்கு வாழ்வு கிடையாது. அவர்கள் வாழ்வதா, நாம் வாழ்வதா என்று முடிவு செய்து தீரவேண்டும். சக்கரவர்த்திகள் எனக்கு எல்லா அதிகாரமும் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் அவர்களைக் கலந்துகொண்டே பாண்டி நாட்டுக்குப் படை அனுப்ப விரும்புகிறேன். ஈழத்துக்கும், காஞ்சியில் இளவரசர் ராஜராஜனுக்கும் தூதுவர்கள் சென்றிருக்கிறார்கள்."

"ஈழத்திலிருந்து தந்தையாரும் மற்றவர்களும் திரும்பி விடுவார்கள் என்று கூறுங்கள்!" குரலில் மகிழ்ச்சி ஒலிக்கக் கூறினாள் அருள்மொழி. 'மற்றவர்கள்' என்று அவள் யாரைக் குறிப்பிடுகிறாள் என்று வேளாருக்கு விளங்கவில்லை. இளங்கோவிடம் அவள் கொண்டிருந்த பற்றுதல் இளங்கோவுக்கே தெரியாத போது அவருக்கு எப்படித் தெரியும்?

"மற்றவர்கள் என்று யாரைச் சொல்கிறாய் அருள்மொழி?"

"வந்தியத்தேவர், இன்னும்.."

தடுமாறினாள் நங்கை. கண்ணிமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

கல்கி

தீபாவளி மலர்

1959

புகழ்பெற்ற அறிஞர்கள், பிரபல கதாசிரியர்கள், கவிஞர்கள் எழுதியுள்ள அருமையான கதைகள், கவிதைகள், கட்டுரைகளுடனும், பிரசித்தி பெற்ற ஓவியர்களின் பல வண்ணச் சித்திரங்கள், ஹாஸ்யச் சித்திரங்களுடனும் கல்கி தீபாவளி மலர் அக்டோபர் மாதம் 30-ந் தேதி தீபாவளித் திருநாளன்று தமிழ் மக்களின் கரங்களை அலங்கரிக்கும். இருநூற்றைம்பது பக்கங்களுக்கு அதிகமான கலை மணம் கமழும் இம்மலர் பெரிய அளவில் உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சாகிறது. மூவர்ணச் சித்திரங்கள் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சாகின்றன

விலை ரூபாய் 3/-

உங்கள் பிரதிகளுக்கு உள்ளூர் ஏஜண்டிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்

தபால் மூலம் பெற விரும்பும் சந்தா நேயர்கள் ரிஜிஸ்தர் செலவு உள்பட கீழ்க்கண்ட விகிதப்படி பணம் அனுப்பக் கோருகிறோம். வி. பி. பி. மூலம் அனுப்ப இயலாது.

உள்நாடு, இலங்கை	... ...	ரூ.	3-65
பர்மா, மலேயா, இதர வெளி நாடுகள்	...	ரூ.	4-00

மானேஜர், கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை - 10

அவர் முகத்தைப் பார்த்தாள்; மேலும் கீழும் பார்த்தாள். தனது மார்பகத்தை மறைத்திருந்த துகிலின் நுனியை விரலில் சுற்றினாள்.

"இன்னும்...கொடும்பாளூர் இளவரசர்!" என்று கூறிச் சட்டென்று தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

பெண்களின் மென்மையான மன உணர்ச்சிகளுக்கும் கொடும்பாளூர் வேளாருக்கும் வெகு தூரம். அவள் ஏன் தயங்கினாள், ஏன் தடுமாறினாள், ஏன் தவித்தாள் என்பதிலெல்லாம் அவர் மனம் செல்லவில்லை.

"மணிமுடி வந்தால், அது வரும் போது, என் மகன் வருவான்" என்றார். "அது வராவிட்டாலும் சக்கரவர்த்திகள் வருவார்கள்."

'நீங்களும் உங்கள் மணிமுடியும்!' என்று அவரைத் தன் விழிகளால் சுட்டு விட்டு எழுந்து நின்றாள் அருள்மொழி. விழிகளின் சூடு அவருக்கு ஒன்றும் உறைக்கவில்லை. பாண்டிய நாட்டின் நெருக்கடி நிலைமை பற்றி ஒரு விரிவான சொற்பெருக்காற்றினார்.

சற்றுநேரம் நின்று வேண்டா வெறுப்போடு அதைச் செவிமடுத்து விட்டு அந்தப்புரத்துக்குள் வந்தாள். நல்லவேளையாக அங்கு அம்மங்கைத் தேவி இல்லை. கட்டிலில் கிடந்த பட்டுப் பஞ்சணை அவள் கண்களில் கசிந்த ஈரத்தைத் துடைத்து விட்டது.

• • •

நள்ளிருளில் கொள்ளிவாய்ப் பேய்களைப் போல் இளங்கோவைச் சூழ்ந்து கொண்ட எமதூதர்கள், அவனைச் சுற்றிலும் வளைய வந்து ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆர்ப்பரித்துக் கெக்கலித்தார்கள். தீப்பந்தங்களை வீசிய வண்ணம் தினவெடுத்துத் துள்ளினார்கள்.

குதிரைகளுக்குமா கொள்ளை போகிற ஆனந்தம்? பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு அவை கனைத்தன. வால் குஞ்சம் ஆட்டிக் களித்தன.

இளங்கோவுக்கு ஏதுமே புலனாகவில்லை. கனவில் நடக்கிறதா? நனவு தானா? கனவும் நனவும் கலந்த ஒன்றா?—ஏதோ ஒரு குதிரை முன்னால் பறந்தது.

நள்ளிரவு நேரம். ஆனால் அரண்மனை வாயில் ஒரே ஒளிமயமாக விளங்கியது. இளங்கோவைச் சுமந்து வந்த கறுப்புக் குதிரை தள்ளாடிக் கொண்டே உள்ளே நுழையப் பார்த்தது. சட்டென்று யாரோ அதன் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தினார்கள். இளங்கோவினால் அது யார் என்று தலைதூக்கிப் பார்க்க முடியவில்லை. உயர்த்திய தலை மீண்டும் பேழையை நோக்கித் தாழ்ந்தது.

கண்களை நன்றாகத் திறந்து விழித்தான். மங்கலான பார்வை கூர்மை பெற்றது.

கடிவாளத்தைப் பற்றியிருந்த உருவத்தை உற்றுப் பார்த்தான். அப்படிப் பார்த்த கண்கள் மெல்லச் சிரித்தன. பேச முயன்றான். உதடுகள் அசைந்தனவே தவிர ஒலி பிறக்கவில்லை.

மலையைப் போல் நின்றுகொண்டிருந்த மாமன்னரின் மனத்துக்குள்ளே ஓர் எரிமலை வெடித்துக் குமுறியது. கடிவாளத்தைப் பற்றியிருந்த கரம் தம்மையும் மீறி நடுங்குவதைக் கண்டார். அவரால் அவரது உணர்ச்சிக் குலைவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. உதடுகள், கன்னங்கள், புருவங்கள் அனைத்துமே துடிதுடித்தன.

மாபெரும் சோழ சாம்ராஜ்யத்தின் தலைவரது கண்களும் கலங்குவதுண்டா? கலங்குகின்றனவே!

"இளங்கோ! இளங்கோ!"

இளைஞனின் புன்னகையே அவருக்குக் கிடைத்த மறுமொழி.

தம் இரு கரங்களாலும் அவனைப் பற்றிக் குதிரையிலிருந்து இறக்கினார் மாமன்னர். இளங்கோவின் உடல் அவரோடு நகர்ந்ததே தவிர, அவன் கரங்கள் பேழையை விட்டு நகரவில்லை. பேழையைத் தன்னோடு எடுத்துக் கொண்டான்.

மாமன்னர் அவனைத் தமது அகன்ற மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார். அவனது உச்சியை அன்புடன் வருடினார். இளங்கோவினால் நிற்க முடியவில்லை. மெல்லச் சரிந்தான்; மாமன்னரின் பாதங்களில் பேழையை வைத்து விட்டுத் தரையில் விழுந்தான்.

பிறந்த குழந்தையை வாரி எடுப்பது போல் அவனை வாரி எடுத்துக் கொண்டார் பெரிய உடையார். அரண்மனைக்குள் திரும்பி அடி மேல் அடிவைத்து நடந்தார். தஞ்சைத் தலைநகரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை நினைத்து அவரது கண்ணிமைகள் குவிந்தன. முத்து முத்தாக உதிர்ந்தன கண்ணீர்.

நெக்குருகும் நெஞ்சத்தோடு நிமிர்ந்த நடை போடலானார்.

மணிமுடி கிடைத்துவிட்ட ஆனந்தத்தில் வாழ்த்தொலி எழுப்பத் தொடங்கினார்கள் சிலர். வல்லவரையர் அவர்களைக் கையமர்த்தினார்.

எங்கிருந்தோ வந்து, கூட்டத்தை ஊடுருவிக் கொண்டு ரோகிணி மாமன்னருக்கு எதிரில் வந்து நின்றாள். இளங்கோவை அவரிடமிருந்து பறித்துக் கொள்ளத் துடிப்பவைபோல் அவள் கரங்கள் துடித்து நீண்டன.

தீப்பந்தங்களின் ஒளி வெள்ளம் திரும்பிய பக்கமெல்லாம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. (தொடரும்)

தளதளக்கும் ஈனோ

★ ஜீரண உறுப்புக்களை சுத்தம் செய்கிறது

★ குளுமை அளிக்கிறது

★ வயிற்றுக் கோளாறுகளை சரிப்படுத்துகிறது



உல்லாசமூட்டும் புத்துணர்ச்சியை அளிக்கிறது

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்' அருந்துங்கள்



'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

குரூப் லாபரேட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

படித்துப் பாருங்கள்

நன்னாள் அன்பளிப்பு

ஆங்கிலத்தில் வீட்டை எப்படி அழகு பெற வைத்துக் கொள்வது, சிக்கனமாக எவ்விதம் வாழ்வது, எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்கும் வகை, பொது இடங்களில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறை, சிநேகத்தை ஒரே ரீதியாகக் காப்பாற்றும் முறை என்பவை போன்ற அனேக தலைப்புகளுடன் கூடிய புத்தகங்கள் வெளி வருகின்றன. அழகான அட்டைப் படம், பெரிய அச்சு, சின்னப் புத்தகம், குறைந்த விலை என்ற கவர்ச்சியான முறைகளைக் கையாளுகிறார்கள். ரயிலில் போகும் பொழுதும், அலுத்துக் களைத்திருக்கும் போதும், ஆழ்ந்த விஷயங்களைக் கொண்ட புத்தகங்களைப் படித்தால் நெற்றிக்கட்டு 'விண் விண்' என்று தெறிக்கிறது. அந்தமாதிரி சமயத்தில் எளிமையான புத்தகங்களை வாசகர்கள் விரும்பி வாங்கிப் படிக்கிறார்கள்.

நம் அரும் தமிழ் மொழியில் இம்மாதிரியான புத்தகங்கள் வெளிவராமல் இருப்பது பெரும் குறையாக இருந்து வந்தது. 'நன்னாள் அன்பளிப்பு' என்ற புத்தகத்தைப் பார்க்கும் பொழுது அந்தக் குறை நீங்கியது மட்டுமல்ல; பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். அழகான அட்டைப்படம்; கைக்கு அடங்கும் புத்தகம். தொகுத்திருக்கும் விஷயங்கள், மனம் நிறைந்திருக்கும் கருத்துக்கள்.

கடவுள் வணக்கத்தில் ஆரம்பித்துப் பிரார்த்தனைச் சிறப்பு, உடல் நலனைக் காக்கும் முறை, குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் நடந்து கொள்ளும் முறை, ஒற்றுமையான தாம்பத்யம், நண்பர்கள், வேலைக்காரர்கள் எல்லோரையும் நடத்தும் விதம் முதலிய அரிய விஷயங்கள் எளிமையான தமிழில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. தவிர, பெரிய பிரச்னையான வரவு செலவுத் திட்டம், வருவாயை அதிகப்படுத்தி, செலவைக் குறைத்து, எப்படிச் சேமிப்பு செய்வது என்பது போன்ற பெரிய விஷயங்களும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. நற்பண்புக்கேற்ற செயல்களான காலம் தவறாமை, இனிமையான பேச்சு, பழகும் உயர் அன்பு, வாழ்வின் குறிக்கோள், பொதுநலனில் பங்கு கொள்ளுதல், மன உறுதி இப்படிப் பலதிறப்பட்ட அரிய பெரிய விஷயங்களும் இந்தப் புத்தகத்தில் அடங்கி இருக்கின்றன.

வெளியீடு: விப்கோ கம்பெனியார்; ரங்கநாதன் தெரு, தியாகராயநகர், சென்னை-17. விலை ரூ. 2—00.

அநுபவ தையற்கலை

ஆரியர்களுக்கு அநேக ஆண்டுகளுக்கு முன்னமேயே நாகர்கள் ஆடைகள் தயார் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றிப் பிற நாடுகளுக்கும் உடைகள் தயாரித்துப் பெரிய அளவில் வியாபாரம் செய்திருக்கிறார்கள். மனிதன் தோன்றும் சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது மிருகத்தின் பரிணாமமாக மனிதன் மாறும் பொழுதே உடை அணியும் வழக்கமும் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. ஆதிமனிதன் வெப்பம் குளிர் தாங்க இயற்கை அமைப்பில் அடர்ந்த ரோமங்களுடன் படைத்திருக்கிறது. நாகர்களுக்குப் பின்னால் நாகரிகம் வளர வளர உடுப்புகளுக்கு பல செயற்கைத் துணிகளை நெய்ய ஆரம்பித்தார்கள். பருத்திப் பஞ்சிலிருந்து துணிகள், பட்டுப்பூச்சிப் பட்டுகள், வாழை நார்ப்பட்டுகள், இன்று கண்ணாடியிலிருந்து கூடப் பட்டுகள் தயார் செய்கிறார்கள்! துணிகள் நெசவு செய்தால் மட்டும் போதுமா. அழகான வர்ணச்சாயம் ஏற்றும் முறை கண்டு பிடிக்கப்பட்டது. அதிலும் நாம் திருப்தியடையவில்லை. ஆண்டவன் படைப்பிலுள்ள அழகான பூக்கள், பட்சிகள், மரம் செடி கொடிகள் இவைகளை அச்சிட வேண்டுமென ஆசை பிறந்தது. எனவே துணி நிறத்துக்குப் பொருந்துமாறு அச்சிடவும், கைவேலை செய்யவும் கற்றுக் கொண்டோம்.

நாலு கெஜம் துணியை எடுத்துப் போர்வையாகப் போர்த்திக்கொண்டு போவது நாகரிகமா? இல்லை, அந்தத் துணிகளை அழகாக நம் உடல் அமைப்புக்கு ஏற்றவாறு தைக்கவும் கற்றுக் கொண்டோம். இன்று எவ்வளவோ விதம் விதமாக அழகு நிரம்பிய உடுப்புகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால் இந்தத் தையல்கலைக்காக நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் எவ்வளவு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டும். தையல் கலையின் பூர்வ சரித்திரத்துடன் 'அநுபவ தையல்கலை' என்ற அழகான புத்தகம் பிரசுரமாயிருக்கிறது.

இதில் ஒவ்வொருவரும் தையல் கலைக்காகச் செயலாற்றியது விளக்கப்பட்டிருக்கிறது. ஊசி நூல் கோர்ப்பதிலிருந்து தையல் மிஷினைச் சுற்றும் வரை அழகான தமிழில் எளிமையாக எழுதப்பட்டிருக்கிறது. தையல் மிஷினின் எல்லாப் பாகங்கள், அதன் உபயோகங்கள், அதைப் பாதுகாக்கும் முறை முதலிய சகல விஷயங்களும் படவிளக்கத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 3—25.

அநுபவ தையற்கலை: உடுப்புகள் இரண்டாம்

நாட்டில் 'ஆள்பாதி ஆடைபாதி' என்ற வழக்குச் சொல் உண்டு. 'அநுபவத் தையற்கலை' முதல் புத்தகத்தில் ஆண்கள் உபயோகிக்கும் எல்லா உடுப்புகள், வெட்டும் விதம், தைக்கும் விதம் எல்லாமே தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. உடல் அமைவுக்கேற்றபடி வெட்டும் நுணுக்கம் இப் புத்தகம் விரிவாக அறிவிக்கிறது. தையல் கலையை ஆசிரியர் உதவியின்றியே முறைப்படி கற்றுக்கொள்ள இப்புத்தகங்கள் இரண்டும் அமைக்கப்பட்டிருக்கின்றன. உண்ண உணவு, உடுக்க உடை ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதவை. ஒவ்வொரு குடும்பத்திலும் தங்களுக்குத் தேவையானதை தைத்துக் கொள்வதில் பொருளும் மிச்சம். அத்துடன் அழகாக அணிந்து கொள்ளும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது. அதற்குப் பெருதவியாக இப்புத்தகம் இருக்கிறது.

இரு புத்தகங்களையும் எழுதியவர்: கு. சுகுமாரன். கிடைக்குமிடம்: அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17. விலை ரூ. 3—00.

— வசுமதி ராமசுவாமி



Gowri Publicity





பெரும்பாலும் தொழிலாளர்களும் நடுத்தர வகுப்பாரும் வாழும் பகுதியாகிய பெத்து நாயக்கன் பேட்டையில் சுதந்திரக் கட்சிக்கு மக்கள் அமோகமான ஆதரவு காண்பித்தனர். 1. ராஜாஜி விளக்கமாகப் பேசுகிறார். 2. திரு வீரஜின்னு செட்டியார். 3. ரங்கசாமி தேவர். இன்னும் பலர் இக் கூட்டங்களில் பேசினர். மக்கள் ஆர்வத்தோடு அவ்வவர் பேச்சுக்களையும் கேட்டதிலிருந்து சுதந்திரக் கட்சியை வரவேற்பதில் எவ்வளவு உற்சாகமாக இருக்கின்றனர் என்பதை உணர முடிந்தது.

2



3







அம்பத்தூரில் சுதந்திரக் கட்சியின் கிளையைச் சென்ற 11ம் தேதி ராஜாஜி ஆரம்பித்து வைத்தார். 1. அம்பத்தூரிலுள்ள பல சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கின்றனர். 2. பெண்களின் பகுதி. 3. தலைமை வகித்த டாக்டர் வெங்கடேச அய்யர். 4. ராஜாஜி பேசுகிறார். 5. டாக்டர் சந்தோஷம் பேசுகிறார். 6. மாலை மரியாதைகள்—ராஜாஜியின் பின்னால் நிற்பவர் இக் கூட்டத்துக்குக் காரணபுருஷரான நடேசய்யர். 7. திரு எஸ். எஸ். மாரிசாமி.

தீபாவளி

பண்டிகைக்காக...

நவீன ரகங்களில் எல்லாவித சைஸ்களிலும் 'ஜெண்ட்ஸ் & லேடீஸ் வாட்சுகளும், ஸ்பெஷலாக 9¾" சைஸ், 21 ஜுவல்ஸ் வாட்டர் புரூப் & ஷாக் புரூப் செண்டர் செகண்ட், ரோல்டு கோல்டு, 20 மைக்ரோன்ஸ் கைக்கடிகாரம், 3 வருஷ உத்திரவாதத்துடன் ரூ. 70/-க்குக் கிடைக்கும்.

மற்றும் வெஸ்ட் எண்ட், பேவர்-லூபா, ரோமர் முதலான உயர்ந்த ரக கைக்கடிகாரங்களும் எங்களிடம் கிடைக்கும்.

★


விவரங்களுக்கு

ஸ்விஸ் வாட்ச் ஹவுஸ்

ஒப்பணக்கார வீதி

கோயமுத்தூர்

அழகிற்கு ஆரோக்யத்திற்கு வஸந்த்



சந்தன சோப்

தி வஸந்த் சோப் ஒர்க்ஸ் லிட்.,
மதராஸ் & வஸந்த்நகர்.

மணமகள் தேவை

புகழ்பெற்ற கம்பெனி யொன்றில் ரூ. 600/- சம்பளத்தில் உயர்தர அதிகாரியாகப் பணியாற்றுபவரும், மிக்கப் படித்தவரும் முப்பத்தோரு வயதுள்ள பிராமண வாலிபருக்குச் சென்னையிலோ, கேரளத்திலோ உயரமான, பொன் நிறமுள்ள, ஸ்ரீவத்ஸ கோத்திரமல்லாத அழகிய பிராமணப் பெண் தேவை. கடிதப் போக்கு வரவு இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும். ஜாதகம், போட்டோவுடன் விண்ணப்பிக்கவும்

✲

AYYAR

C/o Messrs JAYBHARAT
LUBRICANT (I) PRIVATE LTD.
NAFEES CHAMBERS
CARNAC ROAD - BOMBAY-1

[அக்டோபர் மாதம் 24-ம் தேதி உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தையொட்டி நியூயார்க் நகரத்தில் வசிக்கும் திரு பி. ஜி. கிருஷ்ணய்யா ஐ. நா. ஸ்தாபனத்தைப் பற்றி அனுப்பியுள்ள ஒரு விசேஷக் கட்டுரையைக் கீழே வழங்குகிறோம். —ஆசிரியர்]


ஐ. நா. வின் லட்சியங்கள்

பி. ஜி. கிருஷ்ணய்யா

மனித உரிமைகள் என்று அடிக்கடி உலக அரசியல் அறிஞர்கள் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். மானிடர்கள் யாவரும் சம உரிமையுள்ளவர்கள். சம சுதந்திரம் உள்ளவர்கள். உலக மக்கள் யாவரும் ஒரே குலம். யாவரும் சகோதரர்கள். குடும்பம்தான் சமூகத்தின் ஆதாரம், அடிப்படை. சமூக ஒற்றுமைக்குக் குடும்ப ஒற்றுமையே ஆதாரம். அதை அனுசரித்தே அரசாங்கங்கள் செயல்பட வேண்டும். வாழ்க்கைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், மதப்பற்றுச் சுதந்திரம், தொழில் சுதந்திரம் முதலியன ஒவ்வொருவனுக்குமுள்ள உரிமை. இப்படிப் பல உரிமைகள் சொல்லப்படுகின்றன. இவை எல்லா நாடுகளிலும் எல்லா மக்களுக்கும் பூரணமாக இருந்தால்தான் வாழ்க்கை செழிப்புறும். இந்த லட்சியத்தை நோக்கியே மனிதகுலம் முன்னேற வேண்டும் என்றெல்லாம் குறிக்கோள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது மானிட வர்க்கம். இந்த லட்சியத்தின்சின்னமாக விளங்குவது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்.

இந்த உலகநாடுகளின் ஸ்தாபனத்துக்கு நிரந்தர விலாசமே வெகு நாட்களுக்கு நிச்சயமாக இல்லை. நியூ பவுண்ட்லாண்ட் கடற்கரைக்கு அப்பால் அகஸ்டா என்னும் கப்பலில் ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் முதன் முதலாகச் சந்தித்து அட்லாண்டிக் சாஸனத்தை விவாதித்ததிலிருந்து, டம்பர்டன் ஓக்ஸ் என்னும் இடத்துக்கு மாறி, பிறகு கோல்டன்கேட் நகரத்திலுள்ள நாடக மேடையில் சிலகாலம் தங்கி வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் அலுவல்கள் நடத்தி, லேக் ஸக்ஸெஸ்ஸில் தற்காலிக இடம் அமைத்துக் கொண்டு, ப்ளெஷிங் மெடோஸ், ஷெய்லேர் அரண்மனை முதலிய பல இடங்களில் செயல் புரிந்து, கடைசியில் அதற்கே உரித்தான சொந்த இடத்துக்கு வந்து விட்டது. நியூயார்க் நகரத்தில் இப்போது செயலாற்றுகிறது.

ஆமாம்! அதனுடைய சொந்த இடந்தான். முன்பு அமெரிக்காவுக்குச் சொந்தமான இந்த இடத்தை உலக ஸ்தாபனத்துக்கு அமெரிக்கா நிரந்தரமாகக் கொடுத்து விட்டது. இந்த இடத்தில் அற்புதமான ஒரு கட்டடத்தை உலக ஸ்தாபனம் அமைத்துக் கொண்டது. முப்பத்தொன்பது மாடிகள் கொண்டது. வானையே எட்டிப் பிடித்து விடுமோ என்ற பிரமையை உண்டாக்கும் தோற்றம். கண்ணாடி மாளிகையோ என்று ஒரு சமயம் ஐயமூட்டும். அடுக்கடுக்காக அமைந்துள்ள அதனுடைய 5400 பச்சை வர்ண ஜன்னல்களை அண்ணாந்து பார்த்தால், பளிங்குக் கற்களில் எழுதிய சாசனங்களின் வரிகளோ என்று எண்ணத் தோன்றும். மனித லட்சியங்களை எழுத்து வடிவத்தில் உருவெடுத்து விட்டனவோ என்றும் தோன்றும். எப்படித் தோற்றமளித்தாலும் சரி, மனித குலத்தின் வருங்கால நம்பிக்கைக்கு ஒரு கட்டடம் உண்டு என்றால் அது இந்த மாளிகைதான் என்பதில் சந்தேகமில்லை. பிளவுபட்டுள்ள பல்வேறு ராஜ்யங்களும் நட்புடன் பழக வாய்ப்பளிக்க ஏற்பட்டது இந்த ஐ. நா. கட்டடம்.



ஐ. நா.வின் தலைமைக் காரியாலயம்

உலக மக்களின் உன்னத எண்ணங்களும் லட்சியத்துக்கும் ஏற்றவாறு எப்படி வெளித்தோற்றம் அமைந்திருக்கிறதோ, அவ்வாறேதான் உட்புற அமைப்பும். அதைப் பற்றிய சில விவரங்களைக் கேளுங்கள்.

தலைமைக் காரியாலயத்தில் மட்டும் போடப்பட்டுள்ள மூன்றடி அகலமுள்ள ஜமக்காள விரிப்பு முழுவதையும் ஒரே நீளமாக வைத்தால் பதினைந்து மைல் நீளம் இருக்கும்.



ஐ. நா. வின் லட்சியத்தைச் சித்திரிக்கும் ஓவியம்

டெலிபோன் ஸ்விச்சுகள் பொருத்தியுள்ள பலகைகளை மட்டும் 25 பேர்கள் இயக்குகின்றனர். நாளொன்றுக்கு 500 முதல் 1000 வரை ஐ. நா. ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இவையனைத்தும் செய்தி ஸ்தாபனத்துக்கு அனுப்பப்பட்டுப் பதிலைந்து வெவ்வேறு மொழிகளில் பதில் அளிக்கப்படுகின்றன.

காலை 9-30 மணியிலிருந்து மாலை ஆறுமணி வரையிலும் ஐ. நா. காரியாலயத்தில் சாதாரணமாக வேலை செய்யும் நேரம். ஆனாலும் எப்போது வேண்டுமானாலும் யாரையும் தருவித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

பிரதான கட்டடத்தில் மட்டும் 5400 ஜன்னல்கள் இருக்கின்றன. தலைமைக் காரியாலயத்தில் முழுவதும் 6600 ஜன்னல்கள் உள்ளன.

உயரச் செல்லும் 'லிப்டுகள்' மேலும் கீழும் போகும் பாதைகளின் நீளத்தை ஒன்றாகக் கூட்டினால் 1½ மைல் நீளமாகும். லிப்டுகளின் ஓட்டத்தைக் கணக்கெடுத்தால் நாளொன்றுக்கு அவை 250 மைல் தூரம் செல்லுகின்றன.

அலுவலகத்தில் 2300 டைப் அடிக்கும் சாதனங்கள் உள்ளன. பதினைந்து மொழிகளில் 'டைப்' அடிக்கும் வசதிகள் இருக்கின்றன. இத்தனை மொழிகளா என்று பிரமிக்க வேண்டாம். இதோ, எண்ணிக் கொள்ளுங்கள். அராபிய மொழி, " ஜெக் (ஜெக்கோஸ்லோவேகியா நாட்டு மொழி, டேனிஷ் (டச்சுக்காரருடையது), இங்கிலீஷ், பிரஞ்சு, கிரீக், ஹீப்ரு (யூதர்கள் பாஷை) ஹாலந்து மொழி, நார்வீஜிய மொழி, பாரசீகம், போலந்து பாஷை, போர்ச்சுகீசிய மொழி, ரஷ்ய மொழி, ஸ்பானிஷ் மொழி, துருக்கி — ஆகியவை. இந்தியைக் காணவில்லையே என்று விழிக்கிறீர்களா! நல்லவேளையாக இந்தி அவ்வளவு தூரம் போகவில்லை. இந்தியாவுக்கு உலக அரங்கில் ஆங்கிலந்தான் பணியாற்றுகிறது. டைப் அடிக்கும் யந்திரங்கள்கூட, ஒவ்வொன்றும் மூன்று மொழிகள் (ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ்) டைப் அடிப்பதற்கு ஏற்றவாறு உள்ளன.

ரேடியோ நிகழ்ச்சிகள் 25 மொழிகளில் ஒலிபரப்பப்படுகின்றன. 560 பத்திரிகை நிருபர்களும் ரேடியோ நிருபர்களும் ஐ. நா. காரியாலயத்தின் அங்கீகாரம் பெற்றுச் செயல் புரிகின்றனர். இவர்களில் பாதிப்பேர்களுக்குமேல் அமெரிக்க நாட்டுக்கு வெளியிலிருந்து வந்திருப்பவர்கள். 85 புகைப்பட நிருபர்களும் செய்தித்தாள் படப்பிடிப்பு ஸ்தாபனங்களிலிருந்து நூறு பிரதிநிதிகளும் இங்கே தினசரி செய்திகளைச் சேகரிக்கின்றனர்.

ஐ. நா. ஸ்தாபனத்தின் நிர்வாகச் செலவுகளை அங்கம் வகிக்கும் நாடுகள் ஏற்கின்றன. அங்க நாடுகளின் பிரஜைகளுக்கு இச் செலவைப் பங்கீடு செய்தால் தலைக்கு ஆண்டுக்குச் சில அணுக்கள்தான் ஆகும். அமெரிக்கப் பிரஜைகளுக்கு மட்டும் ஐ. நா.வினால் தலைக்குப் பத்துச் சென்டுதான் செலவாகிறது. அதாவது 45 நயா பைசா.

மனித இனத்தின் சரித்திரத்தின் பதினைந்து வருஷ காலம் கணக்கிலேயே அகப்படாது. எனினும் இந்தக் குறுகிய காலத்தில் மனித இனத்தின் ஆசை அபிலாஷைகளையும், ஊக்க உற்சாகங்களையும், நம்பிக்கைகளையும் ஒரு சாஸனத்தில் பொறித்து, அதற்கு ஒரு தனி இடம் ஏற்படுத்திக் கொண்டு, நடைமுறை, செயல் முறைகள் வகுத்து ஒழுங்கு பெற இயங்கச் செய்திருப்பது மகத்தான சாதனை என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

ஐ. நா. கட்டடத்தில் ஆலோசனை மண்டபத்தின் மூன்றாவது மாடியில் மூன்று பகுதிகளாகப் பிரம்மாண்டமான படம் ஒன்று ஜோஸ் வேலா ஜானெட்டி (Jose Vela Zanetti) என்னும் பிரபல ஓவியரால் தீட்டப்பட்டு மாட்டியுள்ளது. குழப்பமும், களைப்பும் மிகுந்த பழைய சூழ்நிலையிலிருந்து ஒரு புது நிலையை



ஐ. நா. வில் பணியாற்றும் ஒரு இந்தியப் பெண்மணி ஐ. நா.வுக்கு வரும் யாத்திரீகர்களுக்கு எல்லாவற்றையும் சுற்றிக் காட்டி விளக்குகிறார்.



வருங்கால வளமைக்காக

நெற்றியில் படருது ரேகை: அனுபவ முதிர்ந்த மேதை!
பற்றுடன் தமதின மகனைக் கண்ணெனக் காக்கும் தந்தை;
கற்றதம் அறிவைத் தந்தும், எப்பெரும் தியாகம் செய்தும்
பெற்றதம் மைந்தனை உலகில் பெரியவ னாக்கும் சீலர்!

பெற்றவர் அனுபவம் அன்றோ பிள்ளையின் நாளைய வாழ்வு?
கற்றதன் பயனும் இவனும் கடமைகள் ஆற்றத் துணிவான்;
வெற்றிடா முயற்சி செய்வான், வாழ்ந்திடும் வலிமை பெறுவா
வெற்றியை அடையும் நேரம் விரைவினில் வந்தே தீரும்! [ன்

இன்னலே மேலும் குறைய, இன்பமே மேலும் பெருக
இன்றைய முயற்சி யாவும் நாளைய நல்வாழ் வாகும்!

இன்று,—சென்ற பல காலம் போலவே
எமது தயாரிப்புக்கள் வீடுதோறும் ஒளிதுலங்க,
உடல் நலமோங்க, இன்பமிலங்கத்
துணைபுரிகின்றன; இதே சமயம் எமது ஊழியத்தின்
இலட்சியமாக முன்னிற்பது...

நாளை,—நாளொரு மேனியாக வளரும்
நல்வாழ்வு வேட்கை மேலும் மேலும் புதுப்புது
முயற்சிகளை ஊக்குவிக்கப்போகும் காலம்; அதன்
வழியே வளரும் புதுப்புது எண்ணங்கள்,
புதுப்புதுப் பண்டங்களோடு பரந்த முறையில்
சிறந்த பணிபுரிந்திடச் சித்தமாயிருக்கிறோம்...

[illegible]

PR. 4-50 TM

உருவாக்க ஐ. நா. எடுத்துக் கொண்டுள்ள முயற்சியைச் சூசகமாகச் சித்திரித்துக் காட்டும் கற்பனை ஓவியம் இது. சின்னங்களை வரைந்து லட்சியத்தைக் கற்பனைக்கு விட்டிருக்கிறது. இடதுபுறத்திலிருந்து பார்த்துக் கொண்டே போனால், முதலில் யுத்தத்தினால் சின்னாபின்னமாகச் சிதறிப்போன ஒரு குடும்பத்தினரின் சிதைந்த தோற்றம் வரையப்பட்டிருக்கிறது. சிலர் தரையில் விழுந்து கிடக்கின்றனர். ஒருவன் ஒன்றும் தோன்றாமல் ஏக்கத்தால் சலனமற்றுச் சிலையென நிற்கிறான். வேதனையும் துயரமும் உருவெடுத்த நிலையில் ஒரு தாயார் பரிதாபமாக விரித்த கைகளுடன் உதவியளிக்கும்படி முறையிடுகிறாள். நான்கு கைகளுடனும் விரித்த சிறகுகளுடனும் அந்தத் தாயின் அபயக்குரலைக் கேட்டு அபயமளிக்கும் வண்ணம் ஒரு உருவம் காணப்படுகிறது. அதன் முகம் மறைந்திருக்கிறது. ஆனாலும் சிந்தனையிலாழ்ந்து, புதியதாக உருவாகிக் கொண்டுவரும் உலகத்தை வாழ்த்தி ஆசி கூறும் பாவம் பொலிகிறது. தெய்வ உருவத்தினை யொத்த அந்தத் தோற்றத்தின் நிழலில் அதன் பார்வையில் மனிதர்கள் உறுதி கொண்ட உள்ளத்துடனும் திடம் கொண்ட தோளினோடும், கலைஞனின் நுட்பத்திறனுடனும், உலைக்கூடத்தில் சம்மட்டி கொண்டு அடித்து உருவாக்கப்படும் இரும்பைப்போல், புது உலகத்தையே உருவாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் கட்டி முடிக்கப் போகும் புது உலகமெனும் மண்டபத்தில் புதுக் குடும்பம் வாழப் போகிறது. இப்புதுக் குடும்பத்தில் இனி ஆயுதங்களைத் தொடுவதில்லை என்று அவற்றைத் தூரத்தில் எறிந்துவிட்ட குடும்பத் தலைவன், அன்னை பூமியில் புது விதைகளைத் தூவிப் புதுப்பயிர் விளைவிக்க முற்படுகிறான். இவை படத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள காட்சிகள். லட்சியங்களை அக்காட்சிகளே விளக்குகின்றன. ஸ்பைனோஸா என்னும் ஆசிரியர் கூறுவதுபோல் சமாதானம் அல்லது அமைதி என்பது யுத்தமில்லா நிலை மட்டும் அல்ல; அது மனித மனத்தின் ஒரு நிலை என்பதை எடுத்துக் காட்டுவதே இந்தச் சித்திரத்தின் நோக்கம் என்று ஓவியர் ஜானெட்டியின் விளக்கவுரை கூறுகிறது.

ஐ. நா. வின் லட்சியத்தை இச்சித்திரம் அழகாக எடுத்துக் காட்டுகிறது. உலக மக்கள் அனைவருக்கும் எல்லாச் சுதந்திரங்களும் கிடைக்க உறுதி கொண்டிருந்தாலும், ஐ. நா. ஸ்தாபனம் ஒரு உலக அரசாங்கம் அல்ல.

ஐ. நா. ஒரு தனி ராஜ்யம் அல்ல. அவ்வாறு அது உருவாக வேண்டுமென்று ஆரம்பிக்கப்படவுமில்லை. அதற்கென்று தனியாகச் சைனியம் ஒன்றுமில்லை. உலகத்திலுள்ள நாடுகள் எல்லாம் ஐ. நா. ஸ்தாபனத்தில் அங்கத்தினர்களும் அல்ல. இன்றைக்கும் இருபதுக்கு மேற்பட்ட நாடுகள் ஐ. நா. வில் சேராமல் தனித்து உள்ளன. நீதிக்கும் நியாயத்துக்கும் இணங்காத ஒரு நாட்டைப் பணிய வைக்கத் தன்னிடம் எந்த ஆயுதபலமும் இல்லை. எனினும், தன் விருப்பத்துக்கு மாறாகச் செல்லும் ஒரு நாட்டைக் கண்டிக்கச் சைனியங்களைக் காட்டிலும் வலிமையுள்ள ஒரு ஆயுதம் தன்னிடம் இருக்கின்றதென்பதை ஐ. நா. அறியும். அதுதான் உலக மக்களின் குரல்; உலக அபிப்பிராயம். இதன் சக்தி அதிகம், வேகம் அதிகம். பல இடங்களில் கொரியாவில் ஸூயஸ் கால்வாயில்—இதன் சக்தியை உலகம் அறிந்திருக்கிறது.

''ராணுவத்தின் சக்தியைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தது ஒன்று உண்டு. அது தான் புதுக் கருத்துக்களின் சக்தி. உரித்த காலத்தில் பூர்ணப் பொலிவுடன் புதுக் கருத்தின் சேதி'' என்று விக்டர் ஹியூகோ என்ற பிரஞ்சு ஆசிரியர் சொன்னார். ஐ. நா. ஸ்தாபனம் அத்தகையதொரு சக்தி. இச்சக்தி தன் லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளும் காலமும் வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

சென்னை வன்னியத் தேனாம்பேட்டை

ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம்

ராஜகோபுரத் திருப்பணி உதவிக் கச்சேரி



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ... பாட்டு

ஸ்ரீ ஆர். கே. வெங்கட்ராம சாஸ்திரி ... வயலின்
ஸ்ரீ வி. நாகராஜன் ... மிருதங்கம்
உமையாள்புரம் ஸ்ரீ கோதண்டராமய்யர் ... கடம்

25-10-59 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-15 மணிக்கு

மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில்

சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்
அவர்கள் முன்னிலையில் நடைபெறும்

டிக்கெட்டுகள்: ரூ. 100/- ரூ. 50/- ரூ. 25/- ரூ. 15/- ரூ. 10/- ரூ. 5/- ரூ. 2/-


மைக், ஒலிபெருக்கி ஏற்பாடுகள்: அசோசியேட்டட் ரேடியோ எஞ்சினீர்ஸ். 20, கச்சேரி ரோடு, சென்னை-4



ஆஹா!
அருமையான
பொக்கிஷம்!

பல்லாண்டு காலம் உன்னதமான ஒலியை வழங்குவதனால் நீங்கள் மர்பி மாடல் 0352 ரேடியோவை ஓர் பொக்கிஷமாகப் பாதுகாக்கலாம். உறுதியான அழகிய காபினெட்டில் அமைக்கப்பட்ட உயர்ந்த ரேடியோ... நீண்ட கால ஆராய்ச்சி, பல சோதனைகள், மறு சோதனைகள் முதலியவற்றை அதன் தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் நிகழ்த்தி இந்த ரேடியோவை மிக உன்னதமாகத் தயாரித்துள்ளனர்.

- ஏஸி & ஏஸி/டிஸியில் இயங்கக் கூடியது
- ஆல்வேவ்ஸ் 3 பாண்டுகள்
  - 5 வால்வ்கள்
    8 வகை செயல்திறன்
  - ரூ. 275.00தான்
    உள்ளூர் வரிகள் தனி



கவர்ச்சியான தோற்றம்! இனிமையான நாதம்!

MR-61

கண்கள் உறங்காவோ?

அத்தியாயம் 13

இறுதிக் கோரிக்கை

விகாஸ் நினைவிழந்த நிலையில் தெருவில் குப்புற விழுந்து கிடந்தான். அவன் இடது விலாவிலும் முதுகிலும் கத்தியால் குத்தப்பட்டிருந்தான். சுந்தரமும் வேறொரு முதியவரும் குத்தப்பட்ட இடங்களில் துணியை வைத்து அழுத்தி ரத்தப் பெருக்கைத் தடுத்து நிறுத்த முயன்று கொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றிலும் ஒரே கும்பல்; கச-முசாவென்று ஒரே இரைச்சல்.

வீணா அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடோடியும் வந்தாள். விகாஸ் விழுந்து கிடந்த அலங்கோல நிலையைப் பார்த்ததும் அவள் அலறி அழுது, "ஐயோ, யார் செய்தார்கள், சுந்தர்? யார் செய்தார்கள் இப்படி?" என்று புலம்பினாள். அவசரமாகத் தரையில் அமர்ந்து விகாஸின் கையைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தாள். அவன் இன்னும் இறந்து விடவில்லை. ஆனால் நிலைமை என்னவோ மிகவும் அபாயகரமானதுதான். தரையில் கொட்டியிருந்த ரத்தத்தைப் பார்த்தபோது அவனுக்கு உடனடியாகப் புது ரத்தம் செலுத்தாவிட்டால் பிழைப்பது துர்லபம் என்பது வீணாவுக்கு விளங்கிவிட்டது.

ஆதலால் அவள் விவரங்களை விசாரிப்பதில் நேரத்தைச் செலவிடாமல் அவனை உடனே டிஸ்பென்சரிக்குள்ளே தூக்கி வரச் செய்து முதலில் காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டினாள். துரதிர்ஷ்டவசமாக அவள் புங்கனூற்றில் நடத்தி வந்தது வெறும் டிஸ்பென்சரியே. அங்கே ரத்தம் செலுத்துவதற்கான வசதிகள் எதுவும் இல்லை. ஏன், அவளுடைய கேசவபுரத்து ஆஸ்பத்திரியில் கூட அதற்கான ரத்தச் சேமிப்புக் கிடையாது. இருந்தாலும் ஆரோக்கிய நிலையிலிருந்த வேறொருவரின் ரத்தத்தை எடுத்து அவனுக்குச் செலுத்தலாம் என்ற நம்பிக்கையில் சுந்தரத்தைக் காரை எடுத்து வரச் செய்தாள். அதில் விகாஸைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஊருக்கு விரைந்து சென்றார்கள்.

காரில் போய்க்கொண்டிருக்கையில் அவள் சுந்தரத்திடம், "என்ன நடந்தது, சுந்தர்? வெளியே நின்று கத்திக்கொண்டிருந்த பாவிதானா இந்தப் பயங்கரமான காரியத்தைச் செய்தவன்? எதற்காக?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

காரை ஓட்டிக்கொண்டிருந்த சுந்தரத்திடமிருந்து ஒரு நெடுமூச்சுப் பிரிந்தது. "யார் குத்தினால் என்ன, வீணா? குத்திய பாவி தப்பி ஓடிவிட்டான்" என்று அவன் அசிரத்தையாகப் பதிலளித்தான்.

"ஆனால் கத்தியால் இரண்டு தடவைகள் குத்துமாறு விகாஸ் என்னதான் செய்து விட்டான்?"

"அவர் ஒன்றும் செய்யவில்லை. அவர் குத்துப்பட்டதற்கு நீயும் நானும்தான் முக்கிய காரணம்."

அது வீணாவுக்கும் தெரியும். ஆம், அவர்களுக்குப் பரிந்து வந்தவர்களில் முக்கியமானவன் அவன். ஆனால் ஐயோ, அதற்கு இத்தனை கடுமையான தண்டனையா? "அந்தப் பாவி கொலைக்கும் அஞ்சாத கிராதகன் என்பதுதான் விகாஸுக்கு ஏற்கெனவே தெரியுமே? அதைத் தெரிந்துகொண்டு இரண்டு நாட்களாக ஒதுங்கியிருந்தவன் இன்று எதற்காக அவனிடம் வம்புக்குப் போனான்?" என்று வருந்தினாள் அவள்.

சுந்தரம் வெறி பிடித்தவன்போல் கத்தினான்: "அவன் இல்லை, வீணா! அவன் எவ்வளவோ நல்லவன். வாயினால் தான் அவன் தாக்கினான். ஆனால் இந்தச் சண்டாளர்களின் கோஷ்டி ஒரு பிழையும் செய்தறியாத நம் நண்பரைக் கத்தியால் தாக்கிப் பழி தீர்த்துக் கொண்டு விட்டது."

இந்தச் செய்தியைக் கேட்ட வீணா திடுக்கிட்டாள். "யார் அவர்கள்? விகாஸ் அவர்களுக்கு என்ன தீங்கிழைத்தான், இப்படிச் செய்வதற்கு?"

"அவர் நம் பங்கில் இருந்தார் அல்லவா? அதுதான் அவர் அவர்களுக்கு இழைத்த தீங்கு."

"யார் அவர்கள்? சொல்லுங்கள், சுந்தர்!" காரின் பின் ஆசனத்தில் விகாஸின் தலையை மடிமீது இட்டுக்கொண்டு அமர்ந்திருந்த வீணா, கையை நீட்டி முன் ஆசனத்தில் அமர்ந்து காரை ஓட்டிக் கொண்டிருந்த சுந்தரத்தின் தோளைத் தொட்டுக் கெஞ்சினாள்.

"வேண்டாம் வீணா, அவர்கள் யார் என்பதையும், அவர்கள் நோக்கத்தையும் அறிந்து நான் துன்புறுவது போதும்;

நீயும் அதைக் கேட்டுத் துயரமடைய வேண்டாம்'' என்றான் சுந்தரம்.

வீணாவுக்கு இந்தப் பதில் சிறிது வருத்தத்தை அளித்தது. ''இன்பத்தைப் போல் துன்பத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளத் துணிந்திருப்பவள் நான், சுந்தர். சொல்லுங்கள்'' என்று கூறினாள் அவள்.

அவளுடைய இந்த இறைஞ்சல் சுந்தரத்தின் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது. அவன் சொன்னான்: ''நம் காரணமாக விகாஸுக்கு எதிராக இங்கே ஒரு பெரிய கோஷ்டி உருவாகியிருக்கிறது. அதுவும் தெய்வத்தின் பெயரால் உருவாக்கப்பட்டிருக்கும் கோஷ்டி அது....''

வீணா அதிர்ந்தாள்: ''என்ன? தெய்வத்தின் பெயராலா?'' என்று அலறினாள்.

''ஆமாம்; நாம் அதை மிகச் சிறிய சம்பவம் என்று ஒதுக்கி விட்டோம். ஆனால் அந்தப் பாவிகள் மறக்கவில்லை. நான் இங்கே வேலை ஏற்க வந்த அன்று சேரவாய்மலைக் கோவிலில் நடந்த சம்பவம் உனக்கு நினைவிருக்கிறதா? அந்தக் கோவில் பூசாரியும் தர்மகர்த்தாவும், நாம் தெய்வத்தையே எதிர்க்கத் துணிந்து விட்டோம் என்று கதை கட்டி, அதற்குக் காரணம் விகாஸே என்று கூறி, அன்று அவன் அர்ச்சகர் கையிலிருந்து பூசைத் தட்டைப் பிடுங்கி எறிந்ததைப் பெரிது படுத்திப் பேசி, பாமர மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறார்கள் என்று நான் நேற்றுத்தான் அறிந்து கொண்டேன். ஆனால் அதை அறிந்தபோதுகூட, அவர்கள் அதற்காக விகாஸைக் கொன்றுவிடும் அளவுக்குத் தீவிரமாவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை, வீணா! எதிர்பார்க்கவில்லை.'' சுந்தரம் பேசுவதை நிறுத்திப் பையிலிருந்து கைக் குட்டையை எடுத்துப் பொங்கிவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

வீணாவுக்குப் பேரிடியாக இருந்தது இந்தச் செய்தி. ''ஐயோ! என்ன நடந்தது, சுந்தர்? விவரமாகச் சொல்லுங்கள்'' என்று அவள் அரற்றினாள்.

சுந்தரம் சொன்னான்: ''நேற்று பிற்பகல் ஷிப்டில் ஒரு தகராறு ஏற்பட்டது.



வீணா. காங்கிரீட் கலவை யந்திரம் ஒன்றின் தொழிலாளி ஒருவன் வேலை நேரத்தில் அருகிலிருந்த பாறைக் குவியலின் மீது படுத்து உறங்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். மேஸ்திரியைக் கூப்பிட்டு அவன் ஏன் அங்கே படுத்திருக்கிறான் என்று விசாரித்தேன். 'நேற்று ராத்திரி கோவில்லே ஏதோ கூட்டமாம் சார், அதற்குப் போய் விடிய விடிய விழித்திருந்து விட்டு, இங்கே வந்து உடம்புசரியாக இல்லையென்று சொல்லிப் படுத்துக் கொண்டிருக்கிறான்' என்று மேஸ்திரி விளக்கினான்.

''நான் உடனே அவன்மீது அநுதாபம் கொண்டு, 'காலனியில் டாக்டர் அம்மாள் வந்திருப்பாள்; ஒரு சீட்டுத் தருகிறேன்; கொண்டு போய்க் காட்டி மருந்து வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள்ளச் சொல்' என்றேன். 'அதெல்லாம் வேண்டாமுங்க; இந்தப் பயல்கள் டாக்டர் அம்மாகிட்டே போக மாட்டார்கள்' என்றான் மேஸ்திரி.

'' பணச் செலவுக்குப் பயந்துகொண்டு அவன் போக மறுத்து விடுவான் போலிருக்கிறது என எண்ணிய நான், 'பணம் ஒன்றும் கொடுக்க வேண்டாம் மேஸ்திரி, இலவசமாக'மருந்து தரச்சொல்லிச் சீட்டு எழுதித் தருகிறேன்' என்று கூறிவிட்டு உனக்குக் கடிதம் எழுதுவதற்கு ஆரம்பித்தேன்.

''ஆனால் மேஸ்திரி குறுக்கிட்டு, 'நன்றி கெட்ட பயல்கள்! நீங்கள் இவ்வளவு நல்லவங்களாக இருக்கிறீங்க; இவங்க என்னடான்னா உங்களுக்கும் அந்த டாக்டர் அம்மாளுக்கும் எதிராகக் கட்சி கட்டிக்கிட்டு இருக்கிறாங்க' என்றான்.

''நான் திடுக்கிட்டேன். 'என்னப்பா விஷயம், மேஸ்திரி? என்னவோ கட்சி, கிட்சி என்கிறாயே' என்று அவனைத் தூண்டினேன். மேஸ்திரி மிகவும் நல்லவன். அவன் உடனே எல்லா விஷயங்களையும் என்னிடம் கூறி மிகவும் வருந்தினான். அதுதான் ஏற்கெனவே சொன்னேனே. நாம் மூவரும் புரட்சி செய்வதற்கென்றே இங்கே வந்திருக்கிறோமாம். விகாஸ்தான் அவ்விஷயத்துக்கு நமது குருநாதராம். கேவலம், ஒரு வடநாட்டான் வந்து நம் நாட்டுப் பழக்க வழக்கங்களில் புகுந்து அவற்றைப் புரட்டிவிட முயலுவதும், அதை மற்றவர்கள் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பதும் ஊருக்கே பெருத்த அவமானமாம். 'அன்று பூசைத் தட்டைப் பிடுங்கி எறிந்தான், ஐயா! நாளைக்குக் கோயில் மூல விக்கிரகத்தையே பிடுங்கி எறிந்து விடுவான். அவன் அப்படிச் செய்யப் போவதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கப் போகிறீர்களா?' என்று அந்தப் பூசாரியும் தர்மகர்த்தாவும் காலனிக்கு வந்து இந்தப் பாமர மக்களிடம் பிரசாரம் செய்து நமக்கு எதிராக ஒரு கட்சியே திரட்டி விட்டார்களாம்.

''மேஸ்திரி இதையெல்லாம் விவரித்து விட்டு, 'சார்! இந்தக் காலனியிலே நல்லவங்களும் இருக்கிறாங்க; பொல்லாதவங்களும் இருக்கிறாங்க. நல்லவங்களாலே, என்ன இருந்தாலும், இந்தப் பயல்கள் செய்கிறது அநியாயம் என்று உங்கள்மீது அநுதாபந்தான் காட்ட முடியுமே தவிர, இந்தப் பொல்லாப் பயலுகளுக்கு எதிராகக் கட்சி கட்டிக் கிட்டுக் கிளம்ப முடியாது. அதனாலே நீங்கள் மூன்று பேரும் கொஞ்சம் ஒதுங்கியே இருந்து கொள்ளுங்கள்' என்று என்னை எச்சரித்தான்.

''இதைக் கேட்டதும் நான் அசட்டையாகச் சிரித்தேன். 'கட்சியாவது, மண்ணாவது! நம்மிடம் எந்தப் பயலும் வாலாட்ட முடியாது' என்று தெம்பாக இருந்தேன். ஆனால் படுபாவிகள், கொலை செய்யும் அளவுக்குத் துணிந்து விட்டார்களே?'' சுந்தரத்தின் நெஞ்சு விம்மியதை அவன் தோள்மீது கை வைத்திருந்த வீணாவால் நன்கு உணர முடிந்தது. அவள் உள்ளமும் இச்செய்தியால் பெரிதும் குழப்பம் அடைந்தது. தாங்கள் அமைக்க இருக்கும் புரட்சி வாழ்க்கையில் அவள் பலவித இன்னல்களை எதிர்பார்த்துத்தான் இருந்தாள். ஆனால் விகாஸைப் போன்ற உத்தமர்கள் அதற்குத் தங்கள் உயிரையே பலி கொடுக்க வேண்டியிருக்கும் என்று அவள் சிறிதும் நினைக்கவில்லை. இந்த விஷயம் எங்கே ஆரம்பித்து, எங்கே வந்து முடிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்த போது அவளுக்குப் பெரிய பீதியே ஏற்பட்டது. அவதூறுகளைப் பொறுக்கலாம்; கேலிகளைப் பொறுக்கலாம்; தொல்லைகளைப் பொறுக்கலாம்; ஆனால் சம்பந்தப்பட்ட தாங்கள் இருவரும் இருக்கத் தங்களை விட்டுத் தங்களுக்கு ஆதரவு தருபவர்களைத் துன்பப் படுத்துவது; அவர்கள் உயிரையே வாங்கிவிட முயலுவது என்றால் அதை அவள் எவ்வாறு பொறுக்க முடியும்?

காரின் பின் ஆசனத்தில் பிணம்போல் நினைவற்று, அசைவற்றுக் கிடந்த விகாஸை அவள் கண்கள் நோக்கின. அவனை எப்படியும் பிழைப்பூட்டிவிட வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு இருந்தது. ஆனால் அது இயலாமல் போய்விட்டால்? எங்கிருந்தோ, எங்கோ வந்துள்ள அவனுக்குத் தன் காரணமாக நிகழ்ந்த சாவாக அது இருக்கும் என்பதை எண்ணியபோது அவள் முகத்தைக்



தீபாவளி
வெளியீடு
கண்
திறந்தது
நீதிக்காகப் போராடிய ஒரு சிறுவனின்
உள்ளமுருக்கும் கதை
டைரக்ஷன் • K.V. சீனிவாசன்
நாராயணன் கம்பெனி தயாரிப்பு

தீபாவளி விற்பனை

உங்கள் ஜவுளி
தேவைகளுக்கு

ராதா ஸில்க்

எம்போரியம்

14, ஸன்னதி தெரு - மயிலாப்பூர் - மதராஸ்-4

போன்: 71188

25-10-59 ஞாயிறு அன்றும் எமது ஷோரூம் திறந்து வைக்கப்படும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம்	ரிஸர்வ் நிதி
ரூ. 2,00,00,000	ரூ. 1,48,00,000

எங்கள்

"ரெக்கரிங் டிபாசிட்" திட்டம்

பிரதிமாதம் தொடர்ந்து செய்யும் டிபாசிட் தொகையான	ரூ. 10	ரூ. 100	ரூ. 500
கீழ்க்கண்டபடி பெருகும்:			
46 மாதங்களில்	ரூ. 500	ரூ. 5000	ரூ. 25000
86 மாதங்களில்	ரூ. 1000	ரூ. 10000	ரூ. 50000

சேர்மன்
ஜி. டி. பிர்லா

ஜெனரல் மானேஜர்
எஸ். டி. சதாசிவன்

UC 9-59

கைகளால் மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

சுந்தரத்தின் கார் காற்றைவிட வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. அவன் மனமும் குழம்பித்தான் போயிருந்தது. இத்தனை மாதங்களாகத் தன்னிடமிருந்த உறுதியும் ஊக்கமும் இன்று குன்றிவிட்டதுபோல் அவனுக்குப் பட்டது. வீணாவுடன் பழக்கமேற்பட்ட பிறகுதான் அவன் மனத்தில் அந்த உறுதியும் ஊக்கமும் பிறந்தன. இன்று இந்தச் சம்பவம் நடைபெறும் வரையில் அவை படிப்படியாகப் பலம் பெற்று வந்தனவே யன்றிச் சற்றும் குறையவில்லை. வீணாதான் இடையிடையே மனம் தளர்ந்தாள்; தயங்கினாள்; பின் வாங்கினாள். பிறகு அவன் அவளைத் தேற்றி வழிக்குக் கொண்டு வந்தான். ஏன், அவள்கூட இப்பொழுது சில மாதங்களாக, அதாவது தானாவதியிடம் அகப்பட்டுக்கொண்ட பின்னர் முன்னை விட அதிகமான மன உறுதியோடுதானே இருந்து வந்தாள்!

ஆனால் இன்று....? இந்தச் சம்பவம் தன்னையே பாதித்திருக்கையில் அவளை அளவுகடந்து பயப்படுத்தி யிருப்பதில் வியப்பு என்ன இருக்கிறது? அன்று வெளியே என்ன நிகழ்ந்தது என்பதை அவன் கூறவில்லை. வேண்டுமென்றேதான் கூறவில்லை. கூறினால் அவள் இன்னும் பீதியடைவாள்; வாழ்க்கையிலேயே விரக்தி அடைந்து விடுவாள் என்றுதான் அவன் அதை அவளுக்குச் சொல்லாமல் சாதுரியமாகப் பேச்சை வேறு திசையில் திருப்பி விட்டான். உண்மையில் அந்தக் கலகக்காரர்கள் விகாஸைக் குறி வைத்தா கத்தியை ஓங்கினார்கள்? தன்னை நோக்கியல்லவா!

ஆம், அவர்கள் சுந்தரத்தைத்தான் குறி வைத்தார்கள். சுந்தரத்தால் ரோசம் உண்டு பண்ணப்பட்டு அருகிலிருந்த கிழவரின் கைத்தடியைப் பிடுங்கிக் கொண்டு வெளியே பாய்ந்தாலும், விகாஸ் நிதானம் இழந்து விடவில்லை. வழக்கமாக வெளியே தானாவதியால் ஏவி விடப்பட்டிருந்த அந்த நாலைந்து நபர்கள்தாம் வந்து கூக்குரலிட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் இன்று அங்கே ஒரு பெரிய கும்பலே கூடியிருந்தது. அந்தக் கும்பலின் நடுவே சுந்தரம் நின்றுகொண்டு கோபமாக ஏதோ கூறிக் கொண்டிருந்தான். அவனும் அவனுக்குமேல் உரத்த குரலில் கத்திக்கொண்டிருந்தவர்களும் பேசிய விதத்தையும், அவர்கள் முகத்தில் ததும்பி நின்ற கோப உணர்ச்சியையும் பார்த்தபோது எந்த நிமிஷமும் அங்கே அடி-தடி நிகழலாம் என்று தோன்றியது விகாஸுக்கு. ஆதலால் அவன் கைத்தடியுடன் சுந்தரத்தின் அருகில் வந்து நின்றுகொண்டான். அருகில் நெருங்கி, சுந்தரத்திடம் வாதிட்டுக்கொண்டிருந்தவர்களையும், அவர்கள் பேசிய பேச்சையும் சிறிது நேரம் கேட்ட பிறகுதான் அவனுக்கு இந்தக் கோஷ்டியினர் வேறு என்பது புலனாயிற்று. ஊரிலே பலப் பல கோஷ்டிகள் இப்படித் திடீரென்று முளைத்துத் தங்களைக் கேவலமாக இகழ்ந்துரைப்பதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. இருந்தாலும் சரிவரத் தமிழ் பேசத் தெரியாத அவனால் சுந்தரத்துக்குப் பாதுகாப்பாக அவனுக்கு அருகே நிற்க முடிந்ததேயன்றி வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இந்த நிலையில்தான் சுந்தரம் ஏதோ சொன்னானென்று அவனை அடிக்க ஒருவன் கையை ஓங்கிக்கொண்டு வந்தான். சுந்தரம் சட்டென்று விகாஸின் கையிலிருந்த தடியைப் பிடுங்கி அவர்களை எதிர்க்க முயன்றான். அத்தகைய அடி-தடியை விரும்பாத விகாஸ் கைத்தடியை விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்டான். ஆனால் சுந்தரம் அப்பொழுது வெறி கொண்ட நிலையில் இருந்தான். அவன், "சீ! விடுங்கள் தடியை. உணர்ச்சி கெட்டவர்களாக, கோழைகளாக, இந்த ராஸ்கல்கள் பேசும் அவதூறுகளைக் கேட்டுக்கொண்டிருப்பதா?" என்று தடியைப் பலங்கொண்ட மட்டும் இழுக்கவே விகாஸ் பிடியை விட்டு விட்டான். அவன் பிடியை விட்டதற்கு வேறொரு காரணமும் இருந்தது. கையை ஓங்கியவனுக்குப் பின்னால் இருவர் கத்தியை உருவி எடுத்துக்கொண்டிருந்ததை அவன் கண்கள் கண்டு விட்டன. எனவே அவர்களைத் தடை செய்து நிறுத்துவதற்காக அவன் பிடியைத் தளர்த்தித் தடியை விட்டுவிட வேண்டியதாயிற்று.

பின்னர் எல்லாம் கண் மூடித் திறப்பதற்குள் மின்னலென நிகழ்ந்துவிட்டன. கையை ஓங்கிக்கொண்டு வந்தவனைத் தள்ளிவிட்டுக் கத்தி பிடித்திருந்தவர்கள் இருவரும் சுந்தரத்தை நோக்கிப் பாய்ந்தனர். விகாஸ் குறுக்கே பாய்ந்து அவர்களைத் தடுக்க முயன்றான். சுந்தரம் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே இடது விலாவிலும், முதுகிலும் குத்தப்பட்டுக் கீழே சாய்ந்தான். "விகாஸ்!" என்று அவனிடம் பாய்ந்த சுந்தரம் தலையை நிமிர்ந்து பார்ப்பதற்குள், குத்தியவர்கள் உட்பட அந்தக் கோஷ்டி முழுவதுமே கலந்து மறைந்து விட்டது. எங்கே பழி தங்கள்மீது விழுந்துவிடுமோ என்று தானாவதியின் கோஷ்டியினரும் பறந்து விட்டனர். வேடிக்கை பார்க்க

வந்த கூட்டம் மட்டுமே வீணு அங்கே வந்த போது மிஞ்சியிருந்தது.

இதையெல்லாம் அவன் வீணுவுக்கு விளக்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? 'உங்கள் உயிருக்கே உலை வைக்க இருந்த இந்தப் புரட்சி வாழ்க்கை வேண்டவே வேண்டாம்' என்று அவள் கூறிவிட்டால்கூடப் பரவாயில்லை; ஆனால் அவள், 'என்னால் எத்தனை பேர்களின் உயிருக்கு ஆபத்து!' என்று தன் உயிரையே அல்லவா போக்கிக்கொண்டு விடுவாள்! அதற்காகத்தான் அவன், அன்று கலகம் விளைவிப்பதற் கென்றே வந்தவர்கள் தங்கள் மூவரையுமே கண்ணி வைத்திருந்த போதிலும், அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசாமல், விகாஸ் அர்ச்சகரிடம் நடந்துகொண்ட முறைதான் இதற்கெல்லாம் காரணம் என்ற ரீதியில் பேச்சைக்கொண்டு சென்றான்.

ஆனால், இன்று வேண்டுமானால் இவ் விஷயத்தை அவளுக்கு மறைத்துவிடலாம். என்றென்றுமே அது சாத்தியமா? நாளையே இவ்விஷயம் ஊரெல்லாம் பரவிவிடப் போகிறது. ஏன், இன்று இன்னும் சிறிது நேரத்துக்குள் போலீசாரே விசாரணை புரிய வந்துவிடலாம். அப்பொழுது இதை மறைக்க முடியுமா? இல்லை, கலகம் விளைவித்தவர்கள் தன்னைக் கொல்ல வந்தனர் என்பதை வீணுவுக்கு இனி யாரும் ஒளிக்கவே முடியாது; அதை அறிந்ததும் ஏற்படப் போகும் விபரீத விளைவுகளைத் தடை செய்யவும் யாராலும் முடியாது. இப்பொழுது அதைத்தான் மறைத்தது வேண்டுமானால் ஒரு தாற்காலிக சாந்தியாக இருக்கலாம். நிகழ்ச்சியின் வேகத்தோடு வேகம் சேர்க்காமல் இருக்க உதவியிருக்கலாம். ஆனால் இது இனி வரப் போவதைத் தடுத்து நிறுத்த முடியாது. அது நடக்கத்தான் போகிறது. வீணுவும் அவனும் மீண்டும் பிரியத்தான் போகிறார்கள்—முன்போல் இல்லை; நிரந்தரமாக; ஒருகால் இந்த உலகிலிருந்தேகூட!

மொத்தத்தில் அவர்கள் இருவருமே அப்பொழுது நிலைகுலைந்திருந்தனர். அவர்கள் கட்டிய மனக் கோட்டைகளையெல்லாம் இன்றையச் சம்பவம் தகர்த்து எறிந்துவிட்டது. இனி தங்களிடையே இணைப்பு ஏற்பட வழியில்லை. சமூகத்திடம் தோற்றவர்களாக, ஏமாற்றத்தில் உயிரை மாய்த்துக் கொள்ளவோ அல்லது வெளியே தலைகாட்டாமல் வாழவோதான் வேண்டும் என்று அவர்கள் முடிவுறுத்தி விட்டார்கள். ஆனால் அவர்கள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை; ஒருவர் மற்றவரிடம் மனம் விட்டு அதைக் கூறவில்லை. தங்களுக்குள்ளே அதை அமுக்கி வைத்துத் தாங்களாகவே விலகிக்கொண்டு விடுவதுதான் ஏற்றது என்ற கருத்துடன் இருந்து விட்டார்கள்.

ஆனால் அவர்கள் அப்படி இருந்துவிட்டால், விதி அவர்களுக்கென்று வகுத்திருந்த இதர துன்பங்களை வேறு யார் அநுபவிப்பது?

* * *


சுந்தரத்தின் கார் வீணுவின் ஆஸ்பத்திரி வாசலில் வந்து நின்றது. நர்ஸின் உதவியுடன் அவர்கள் விகாஸின் உடலை உள்ளே தூக்கிச் சென்றனர். சுந்தரமே அவனுக்குத் தன் ரத்தத்தைக் கொடுத்தான். உடலில் ரத்தம் ஏற்றப்பட்டுச் சிறிது நேரமானதும் விகாஸ் நினைவடைந்தான். தன் அருகில் சோகமே வடிவாக அமர்ந்திருந்த வீணுவையும் சுந்தரத்தையும் நோக்கி அவன் ஒரு துயரப் புன்னகையைச் சிந்தினான். "நான் பிழைத்து விடுவேன்; கவலைப்படாதீர்கள்" என்று தீனமான குரலில் அவர்களுக்கு ஆறுதல் சொன்னான். "அதிகமாகப் பேச வேண்டாம்; ஓய்வெடுத்துக் கொள்" என்று வீணு எவ்வளவு கூறியும் கேளாமல் தொடர்ந்து பேச ஆரம்பித்தான். "நாம் நடத்துவது ஒரு புனிதப் போர். அதற்கு முதல் பலியாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தால், வீர சொர்க்கத்தை நாடும் போர்வீரனைப் போல் மனம் மகிழ்ந்திருப்பேன். ஆனால், தெய்வம் என்னைக் காப்பாற்றி விட்டது. நமது போரில் நான் ஆற்ற வேண்டிய பணி இன்னும் நிறைய இருக்கிறது போலும்" என்று என்ன என்னவெல்லாமோ பேசிக்கொண்டே சென்றான்.

"போதும், விகாஸ்! பேசியது போதும். உன் உடல், அயர்வு ஏற்படும் செயல்களை இப்பொழுதிருக்கும் நிலையில் தாங்காது" என்று வீணு மீண்டும் அவனிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

விகாஸ் ஏளனமாக நகைத்தான். "தாங்காவிட்டால் போகட்டும். இந்த உடல் உயிரோடு இருப்பதைவிட அழிந்தால்தான் அதற்குப் பெருமை" என்றான் அவன்..

"இப்படியெல்லாம் பேசாதீர்கள், மிஸ்டர் விகாஸ்!" என்று சுந்தரம் அவனைக் கண்டித்தான்.

"ஏன் மிஸ்டர் சுந்தரம், ஏன் பேசக் கூடாது? நான் இந்த 'கோதா'வில் குதித்தபோது உயிரைத் திருணமாக மதித்துத்தான் குதித்தேன். சமூகத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம் என்பது எளிதானதில்லை, மிஸ்டர் சுந்தரம்! அதற்கு ஆயிரம் ஆயிரம்பேர்கள் தங்கள்



குற்றாலத்துத் தவமுனிவர் ரஸிகமணி டி. கே. சி.யின் ஐந்தாவது நினைவு விழா சமீபத்தில் திருக்குற்றாலத்தில் சிறப்பாக நடைபெற்றது. திரு சா. கணேசன் தலைமை தாங்கினார். வரவேற்புரைகூறிய திரு தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் டி.கே.சி.யின் ஞாபகார்த்தமாகக் கட்ட இருக்கும் 'டி. கே. சி. நகர்' பற்றிய தகவல்களைச் சொன்னார். அன்பர் பலர் பாராட்டுரை பகர்ந்தார்கள். டி. கே. சி.யுடன் உறைந்து வாழ்ந்த நண்பர் திரு டி. எம். கோமதிநாயகம் பிள்ளை பல ரஸமான அனுபவங்களைப் பற்றிப் பேசினார். அவர் பேச்சைக் கேட்டுக் கூடியிருந்தவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்து மகிழ்ந்தனர்.

உயிரைத் தாரை வார்க்கத் தயாராக இருக்க வேண்டும்.''

வீணாவின் உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த துயரம், விகாஸின் இந்த ஆவேசப்பேச்சைக் கேட்டதும் வெடித்து வெளி வந்துவிட்டது. ''அப்படிப்பட்ட போரில் நான் இனி ஈடுபடப் போவ தில்லை, விகாஸ்! சமூகப் புரட்சிக்காக என் உயிரை வேண்டுமானாலும் தியாகம் செய்வேனேயன்றி,பிறிதொரு மனிதரின் உயிர் என் காரணமாகப் பலியாக விட மாட்டேன். இப்படிப் பல உயிர்களைப் பலியிட்டுத்தான் என் வாழ்வைச் சமைத் துக்கொள்ள வேண்டியிருக்கும் என்பது முன்பே தெரிந்திருந்தால், நான் இதில் ஈடுபட்டே இருக்க மாட்டேன்.''

அவளுடைய இந்தத் தளர்ச்சி விகாஸை வெறி கொள்ளச் செய்தது. அவன் தன் நிலையை மறந்து, ''வீணா!'' என்று பலம் கொண்ட மட்டும் கத்திவிட் டான். ஒரே கத்தல்தான்; மறு நிமிஷம் ''ஐயோ!'' என்ற குரல் தொண்டையி லேயே அடங்க, இடுப்பில் கத்திக் குத்துப் பட்டிருந்த இடத்தில் கையை வைத்து அழுத்திக் கொண்டு மயங்கி விட்டான். அங்கிருந்து, வீணா போட்டிருந்த கட்டுக் களையும் மிஞ்சிக் கொண்டு ரத்தம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

வீணா பட்ட சிரமமும், சுந்தரம் கொடுத்த உதிரமும், இப்பொழுது பய னற்றுப்போய்விட்டன. திடுக்கிட்டவீணா அவன் கையைப் பிடித்து நாடியைப் பரி சோதித்தபோது அது மீண்டும் தளர்ந்து விட்டிருந்தது. அவள் மறுபடியும் அவ னுக்குச் சில 'இஞ்செக்ஷன்'களைச் செலுத்தி இறுதிச் சிகிச்சை செய்து பார்த்தாள். பயனில்லை. விகாஸின் உயிர் அணு அணுவாகப் பிரிந்துகொண் டிருந்ததை டாக்டராகிய அவளால் அறிந்துகொள்ள முடிந்தது. புனிதப் போரில் உயிரை விட்டு வீர சொர்க்கம் பெற விரும்பிய அவன் கோரிக்கை நிறை வேறத்தான் போகிறது என்பதை அவள் தெள்ளத் தெளிய உணர்ந்து கொண்டு விட்டாள். இனி அவள் செய்யக் கூடி யது ஒன்றுமே இல்லை, அவன் சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர, பார்த்துக்கொண்டு, கண்களில் கண்ணீர் பெருக அமர்ந்திருந்தாள்.

சில நிமிஷங்கள் பரபரப்புடன் சென் றன.வீணாவின் வலக்கரம் இன்னும் விகா ஸின் இடக்கரத்தைப்பற்றிநாடியைப் பரி சோதித்துக் கொண்டுதான் இருந்தது. தளர்ந்து கிடந்த அந்த நாடிகள் திடீ ரென்று வேகத்தோடு துடித்தன.இறுதித் துடிப்பு அது. அந்தத் துடிப்பு அவனுக் குக் கண நேரம் நினைவளித்தது; பேசும் திறன் அளித்தது. விகாஸ், வீணா பிடித் துக் கொண்டிருந்த இடக்கரத்தை உதறி விட்டு, அதே கரத்தால் சுந்தரத்தின் கையைத் தொட்டான். ''நண்பரே! வீணா பெண் பேதை. தைரியமிழந்து விட்டாள். நீங்கள் தைரியம் இழக்கா தீர்கள். கடைசி வரையில் உறுதியோடு நின்று நமது போரைத் தொடர்ந்து நடத்துங்கள். இது என் இறுதிக் கோரிக்கை. இதை நீங்கள் நிறைவேற் றினால்தான் என் ஆத்மா சாந்தி அடையும்.''

மூச்சையெல்லாம் திரட்டிக் கொண்டு வேகத்தோடு இதைக் கூறிவிட்டு விகாஸ் மீண்டும் கண்களை மூடிக் கொண்டு விட்டான். மூடிய அந்தக் கண்கள் பின் னர் திறக்கவே இல்லை. (தொடரும்)

தீபாவளிக்கு

பட்டு ஜவுளிகள்
வாங்குவதற்கு
நம்பிக்கையான இடம்

S. R. B.

குப்புசாமி அய்யர்
அண்டு ஸன்

230, கீழ மாரெட்டு வீதி, மதுரை
போன்: 36

117, நைனியப்ப நாயக்கன் தெரு
பார்க் டவுன், மதராஸ் - 3
போன்: 3506

நண்பர் ஒரு நல்ல செய்தி யைச் சொல்கிறார். அடிக் கடி எப்ரிலைம் உட் கொள்வதால், அவர் ஆஸ்த்மா உபாதையால் தற்பொழுது பீடிப்பதில்லை




EPHRILIME
எப்ரிலைம்

U.D

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ் டிப்போ:
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ் - 1



எந்நாளும்
எந்நேரமும்
நரஸுஸ் காப்பி
அருந்தும் நேரமே

அருமையான காப்பி ஒரு கோப்பை பருக விரும்புவீரானால் நரஸுஸ் காப்பி அருந்துவதே உத்தமம். அதன் பரிசுத்த தன்மையிலும் முற்றிலும் தனிப்பட்ட சிறப்புடையதாக, மற்ற காப்பிகளினின்றும் வேறுபட்டு நல்ல மணமுடையதாக விளங்குகிறது. கல்யாண விருந்துகளுக்கும், ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் முதலியவற்றிற்கும் உகந்தவாறு பொருத்த அளவுகளிலும் இப்பொழுது கிடைக்கின்றது.

பரிசுத்தமான நரஸுஸ் காப்பி
தனிச் சிறப்புடைய
காப்பியாகும்


நரஸுஸ்
மானுபாக்சரிங் கோ. பிரைவேட் லிட்.,
சேலம் & சென்னை

முல்லை வாயில் நாதன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

பண்டைத் தமிழ் நாட்டு வள்ளல்களில் பிரபலமானவன் **வேள்பாரி.** பல வளங்கள் உடையதும், முந்நூறு ஊர்களைக் கொண்டதுமான பறம்பு மலையிலிருந்து ஆட்சி செலுத்திய சிற்றரசன் அவன். வேளிர் குலத் தலைவனான இப்பாரி வரையாது கொடுக்கும் வள்ளல். பாடி வந்த புலவர்களெல்லாம் முந்நூறு ஊரையும் பரிசிலாகவே பெற்றுச் சென்று விடுகின்றனர். மிஞ்சியது குன்று ஒன்றுதான். இப்பாரியின் புகழைக் கேட்ட தமிழ் நாட்டு மூவேந்தர் இவனிடம் தீராப் பகைமை கொள்கின்றனர். வள்ளல் பாரி நல்ல வீரனும்கூட. ஆதலால் அவனைப் போரில் வெல்வது என்னவோ இயலாத காரியமாக இருக்கிறது அவர்களுக்கு. இந்தப் பாரியை வெல்ல அவர்கள் கண்ட ஒரே வழி, பாடும் பாணர்களாக வேஷமிட்டு வந்து பரிசிலாகக் குன்றைப் பெறுவதுதான். குன்றைக் கைக்கண்டதோடு, வஞ்சனையால் பாரியையுமே கொன்று விடுகின்றனர் இம்மூவேந்தரும் சேர்ந்து. இத்தகைய பாரியின் கொடைத் திறனை விளக்க ஒரு சிறு கதை உண்டு. ஒரு நாள் வேள் பாரி தேரிலே ஏறிக் கொண்டு காட்டுக்குச் செல்கிறான். திரும்பும்போது வழியில் முல்லைக் கொடி ஒன்றைப் பார்க்கிறான். அக்கொடி பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பு ஒன்றில்லாமல் துவண்டு விழுவதைக் காண்கின்றான். இதைக் கண்ட பாரியின் உள்ளத்தில் ஒரு கருணை பிறக்கிறது. துவளும் முல்லைக் கொடிக்குத் தான் ஊர்ந்து வந்த தேரையே கொழுகொம்பாக நிறுத்தி விட்டு நடந்தே திரும்புகிறான் தன் அரண்மனைக்கு. முல்லைக் கொடிக்கே இத்தனை கருணை காட்டியவன் என்றால், மற்றக் கொடைத் திறனைப் பற்றி விவரிப்பானேன்! இந்தப் பாரியின் உயிர்த் தோழர் புலவர் பெருமகனான **கபிலர்.** அவர் பாடுகிறார், இவன் முல்லைக்குத் தேர் அளித்த செயலைக் குறித்து.

> பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
> நாத்தழும்பு இருப்ப பாடா தாயினும்
> கறங்குமணி நெடுந்தேர்
> கொள்கெனக் கொடுத்த
> பரந்தோங்கு சிறப்புடை பாரி



ராஜ கோபுரம்

என்று கபிலரால் பாரியும், பாரியால் முல்லைக் கொடியும் பிரசித்தி பெற்று விடுகின்றனர்.

இதைவிடப் பெரிய சமயப் பிரசித்தியை பெறுகிறது மற்றொரு முல்லைக்கொடி. அந்தக் கொடி காரணமாக ஒரு கோயிலே உருவாகிறது; கோயிலைச் சுற்றி ஒரு சிறிய கிராமமே எழுகிறது. அப்படி எழுந்த கோயில்தான் **மாசிலாமணி ஈசுவரர்** கோயில். அக்கோயில் இருக்கும் தலந்தான் **திருமுல்லைவாயில்.** இத்தலத்தின் வரலாற்றை அறிய வேண்டாமா? சோழ மன்னனான கிள்ளி வளவனுக்கும் நாக கன்னிகையான பீலிவளைக்கும் பிறந்தவனே தொண்டையர் குலத் தோன்றலான **ஆதொண்டைச் சக்கரவர்த்தி.** சோழமன்னன் தன் நாட்டை இருகூறாக்கி, தென் பகுதியைச் சோழனுக்கும், வடபகுதியை ஆதொண்டைக்கும் பகிர்ந்து கொடுக்கிறான். இந்தத் தொண்டைமான் சக்கரவர்த்தி காடு வெட்டி நிலம் திருத்தி, அங்குள்ள குறும்பர்-குறும்படக்கி, தொண்டை மண்டலத்தையே உருவாக்குகிறான். காஞ்சியிலிருந்து புழற் கோட்டத்துக் குறும்பர் தலைவனை அடக்கப் புறப்படுகிறான். படைகள் பின்நடந்து வர, இவன் யானைமீது ஆரோகணித்து முன்னே செல்கிறான். வழியிலே ஒரு முல்லைவனம். அங்கே ஒரு கொடி மன்னன் ஏறிச் செல்லும் யானையின் கால்களைச் சுற்றிக் கொள்கிறது. அதனால் யானை நடக்க இயலாதது கண்டு யானை மீதிருந்த சக்கரவர்த்தி உடைவாளால் அக்கொடியை வெட்டி எறிகிறான். இப்படி இவன் வீசிய வாள்வெட்டு முல்லைக் கொடியின் கீழ் இருந்த சிவலிங்கத்தின் மீது படுகிறது. லிங்கத் திருவுருவின் தலையிலிருந்து ரத்தம் சிந்துகிறது. மன்னன் இதனைக் கண்டு, யானையினின்றும் இறங்கித் தான் செய்த அபவாதத்துக்கு வருந்துகிறான். உடனே இறைவனும் தொண்டைமானை ஆட்கொள்ளக் கருதி, அவனுக்குத் தரிசனம் தருகிறான். அவன் மேற்கொண்ட படை யெடுப்பில் தக்க துணையாக இருக்க நந்திதேவரையே உடன் அனுப்பி வைக்கிறான். மன்னனும், குறும்பரை வென்ற பின் தன்னை ஆட்கொண்ட இறைவனுக்கு, ஒரு கோயில் கட்டுகிறான். தான் வெற்றி கொண்ட புழற்கோட்டத்திலிருந்து இரண்டு

எருக்கந் தூண்கள் கொண்டு வந்து நிறுத்தி விதானம் அமைக்கிறான். இப்படித் தான் தோன்றி ஈசராக அமைந்தவரே மாசில்லா மணிநாதர். அவர் கோயில் கொண்டிருக்கும் இடமே திருமுல்லைவாயில். இந்தத் திரு முல்லை வாயில் நாதனை ஆளுடை நம்பியாம் **சுந்தரர்** விளக்கமாகவே பாடுகிறார்.

சொல்லரும் புகழால் தொண்டைமான்
களிற்றை, சூழ் கொடி
முல்லையால் கட்டிட்டு
எல்லையில் இன்பம் அவன்பெற
வெளிப்பட்டு அருளிய
இறைவனே என்று
நல்லவர் பரவும் திருமுல்லை
வாயில் நாதனே!
நரை விடை ஏறி!
பல்கலைப் பொருளே! படுதுயர்
களையாய் பாசுபதா!
பரஞ்சுடரே!

இப்படிச் சுந்தரர் இட்ட வட்டமாகக் கூறி யிருந்தும் இக்கதைக்கு வேறு இரண்டு 'பாடங்களும்' ஏற்பட்டிருக்கின்றன. சுந்தரர் பாடிய ஊர் வட திருமுல்லை வாயில். அவர் சொல்லும் கதையில் தொண்டைமான் களிற்றை முல்லைக் கொடி சுற்றிக் கொள்கிறது. இதே கதையை, இதே வட திருமுல்லை வாயில் தலத்துக்கே ஏகாம்பரநாதர் உலா பாடிய **இரட்டையர்களும்** ஏற்றுகிறார்கள் ஒரு சிறு மாறுதலுடன். யானைக்குப் பதிலாக இவர்கள் குறிப்பது தேரை.

'மல்லல் தொடைத்
தொண்டைமான்
கடவும் தேரை, ஒரு
முல்லைக் கொடி
தடுத்தமூதூர்'

என்பது அவர்கள் சொல்லும் பாடம். இன்னும் முல்லை வாயில் என்ற பெயரிலேயே சோழ நாட்டிலே, சம்பந்தர் பிறந்த சீகாழிக்குக் கிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் கடற்கரையில் ஓர் ஊர் இருக்கிறது. அதைத் **தென் திருமுல்லை வாயில்** என்கிறார்கள்.



பல்லவர் சிங்கத் தூண்கள்

சம்பந்தரோ,


வரை வந்த சந்தொடு அகில் உந்தி
வந்து மிளிர்கின்ற பொன்னி வடபால்
திரை வந்து வந்து செறி தேறல்
ஆடு திரு முல்லை வாயில் இதுவே.

என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இங்குள்ள இறைவன் முல்லை வனநாதர், இறைவி கோதை. இங்கேயும் ஒரு பாட பேதம். இன்னி வளவனது குதிரை ஊர்ந்து செல்லும் போது முல்லைக் கொடி ஒன்று அக்குதிரையின் காலைப் பிணைத்தது என்று சொல்கிறது தென் திருமுல்லை வாயில் புராணம். இந்தப் பாடங்களை யெல்லாம் அலசி ஆராய்ந்து முடிவு காண வேண்டியதை ஆராய்ச்சியாளர்களுக்கு விட்டு விடலாம். மூன்று கதையிலும், ஆம், களிறு, தேர், குதிரை என்றெல்லாம் பாடம் மாறுபட்டாலும் பிணைத்தது என்னவோ முல்லைக்கொடி என்பதை மறுப்பவர் இலர்—முல்லைக் கொடி தடுத்த மூதூர், திருமுல்லை வாயில் என்று பிரசித்தி பெற்றிருப்பதும் உண்மை. அது போதும் அல்லவா நமக்கு?

நாம் இன்று பார்க்கப் போவது **வடமுல்லை வாயிலையே** (தென் திருமுல்லை வாயில்-தொலைதூரத்தில் தெற்கே இருக்கிறது. மிகவும் சின்னஞ் சிறிய கோயில்தான். ஆதலால் அதை விட்டு விடலாம்தானே! இந்தத் திருமுல்லை வாயில் சென்னைக்கு மேற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. சமீபத்தில் காங்கிரஸ் மகாசபை நடந்த ஆவடிக்கு வடகிழக்கே இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. சென்னையிலிருந்து செல்வோர் ஆவடி செல்லும் பாதையில் சென்று கொஞ்சம் வடக்கே திரும்பி ஊருக்குள் போக வேண்டும். கோயில் கோபுரம் தெற்கு நோக்கி இருந்தாலும், மாசில்லா மணி நாதர் கிழக்கு நோக்கியே இருக்கிறார். மகா மண்டபத்துக்கு வெளியே, ஒரு சிறிய மண்டபத்தில் இருக்கும் நந்தியோ (திருவலத்தில் இருந்தது போல்) இறைவனுக்குப் பின்புறத்தைக் காட்டிக்கொண்டு கிழக்கு நோக்கியே இருக்கிறது. தொண்டைமான் சக்கரவர்த்திக்குத் துணைபோன அவசரத்தில். கோயிலுக்குச் சென்றால் கர்ப்பக்கிருகத்துக்கு வெளியே இருக்கின்றன, இரண்டு எருக்கந் தூண்கள். தேக்கு மரத்தைவிட வலிவுடைய தூண்கள் அவை. பித்தளைப் பூண்கள் வேறே கட்டி வழுவழு என்று இருக்கின்றன. இறைவனோ தீண்டாத் திருமேனி தாங்கியவராக இருக்கிறார். அவருக்குச் சந்தனக் காப்பிடுகிறார்கள். இவரையே **வெட்டுத் தாங்கி ஈசுவரர்** என்றும் அழைக்கிறார்கள். தொண்டைமான் சக்கரவர்த்தி வெட்டிய வெட்டினால் ஏற்பட்ட வடு இன்றும் இருக்கிறது அவரது திருவுருவில்.

இங்குள்ள இறைவியின் திருநாமம் **கொடி இடை நாயகி**. முல்லைக்கொடியின் அடியில் இருந்த இறைவன் வெளி வந்தபோது அவனைக் கொழுகொம்பாகச் சுற்றி நிற்கும் அம்மையைக் கொடி இடையாள் என்று சொல்வது தான் எவ்வளவு பொருத்தம். கோயில் நிரம்பப் பழைய கோயில் என்பதற்குக் கோயி

லின் பிரதான வாயிலை நோக்கி இருக்கும் விநாயகர் சந்நிதியை அலங்கரிக்கும் இரண்டு சிம்மத் தூண்கள் சான்று பகரும். பல்லவர் கோயில்களில் காணும் சிம்மத் தூண்கள் இங்கே இடந் திருக்கின்றன. அவற்றை வைத்தே இச்சிறுகோயில் உருவாக்கப் பட்டிருக்குமெனத் தோன்றுகிறது. இந்தக் கோயிலின் விமானத்திலே ஒரு புளிங்கு விநாயகர் வலம் சுழித்த தும்பிக்கையுடன் இருக்கிறார். ஓர் அடிக்கும் குறைவான உயரமே உடையவர் அவர். எங்கேயோ புறப் பக்கத்திலிருந்து வந்தவர் இவர் என்று தோன்றுகிறது.



நந்தி மண்டபம்

இந்தத் திருக்கோயில் அமைப் பெல்லாம் அழகாக இருந்தாலும் சென்று காண்பவர்களுக்கு ஓர் ஏமாற்றம் இருக்கவே செய்யும். முல்லைக்காடாக இருந்த இடம் இது என்றும், முல்லைக் கொடி தடுத்து நிறுத்தியது தொண்டைமான் சக்கரவர்த்தியை என்றும் ஒன்றுக்கு மூன்றாகக் கதைகள் உருவாகி யிருக்க, இன்று கோயிலுக்கு உள்ளேயோ அல்லது வெளியிலேயோ மருந்துக்குக் கூட ஒரு முல்லைக் கொடியைக் காணோம். அரளியை எல்லாம் வைத்து வளர்த்திருக்கும் கோயில் நிர்வாகிகள் முல்லைக்கொடியை மட்டும் வைத்து வளர்க்க மறந்ததன் காரணம் என்னவோ? முல்லை வனநாதராம் மாசிலாமணி ஈசுவரரையும், கொடியிடை நாயகியையுமே கேட்க வேண்டும்.

தமிழ் கூறும் நல்லுலகம்

பீஹார் ராஜ்யத்தில் உள்ள பாட்னா தென்னிந்திய சங்கத்தின் சார்பில் முதன் முதலாகப் ''பாரதி விழா'' செப்டம்பர் 29-ம் தேதியன்று அமோகமாகக் கொண்டாடப் பட்டது. அங்கத்தினர்களும் மற்றும் பாட்னாவில் உள்ள அரசாங்க அதிகாரிகளும் இந்த விழாவில் கலந்துகொண்டு விழாவை விமரிசையாக நடத்தியதுடன், இந்த விழாவை வருஷா வருஷம் கொண்டாடவும் தீர்மானித்துள்ளார்கள்.

முக்கியமாக, பாரதி பாட்டுக்களை இனிமையாகப் பாடிச் செவிக்குணவு அளித்தவர்கள், ஸ்ரீமதி சரோஜா செளந்தரராஜன், இந்துமதி நாராயணசுவாமி, ஹேமா ராமானுஜம், ஜானகி நாதன், ராமசுந்தரி, ராமசுப்ரமண்யம் ஐ. ஏ. எஸ்., ஸ்ரீனிவாஸன் ஐ. ஏ. எஸ்., செளந்தரராஜன், சாந்தா ஜகந்நாதன் ஆகியோர்.

★

கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் எழுத்தாளரும் நூலாசிரியருமான திரு சோம. லெ. அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு லெ. அரியரன் தலைமை தாங்கினார். திருவாளர்கள் ஒ. வி. சி. சேகர் இறை வணக்கமும், இராமச்சந்திரன், இராசப்பன் தமிழிசையும் பாடினர். பின்பு மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் கண்ணப்பன், செங்கல்வராயன், மு. நாராயணசாமி, எஸ். கே. சாமி, பாலசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். திரு சோம. லெ. அவர்கள் வரவேற்புக்கு மறுமொழியில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''தமிழ் மொழி உயர்தனிச் செம்மொழியாகும். உலக மொழிகள் அனைவற்றின் வளர்ச்சியினைப் போல் நற்றமிழ் முறையிலே வளர்ந்து வருகிறது. இன்று நல்ல தமிழிலே பேசவும் எழுதவும் அனைவரும் முன்வந்துள்ளது நல்லதொரு சிறப்பாகும்.''

மன்ற உறுப்பினர் திரு இலக்குமி நாராயணன் சோம. லெ. அவர்களுக்கு வாழ்த்துப்பா பாடி வழங்கினார்.

பொதுச் செயலாளர் நன்றி கூற, பின்பு நல்விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

★

திருவனந்தபுரம், கரமனை வள்ளுவர் மன்றத்தில் சென்ற 4-10-59 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்குப் பாரதி விழா சிறப்பாக நடந்தது. விழாவுக்குத் தலைமை வகித்த திரு கே. சிதம்பர தாணு பி.ஓ.எல். அவர்களையும் பிரதம சொற்பொழிவாளரான பல்கலைக் கழகத் தமிழாசிரியர் திரு ஏ. டி. சொக்கலிங்கம், பி.ஏ. (ஆனர்ஸ்) எம். லிட். அவர்களையும் மன்றத் தலைவர் திரு எஸ். செல்லம் பிள்ளை அவர்கள் வரவேற்றார். விழாத் தலைவர் தலைமையுரையும் சொற்பொழிவாளர் உரையும் விழாவுக்குத் தனிச் சிறப்பைத் தந்தன. பின்னர் விழாத் தலைவர் விழாவையொட்டி நடத்திய ''பாரதியாரும் தமிழும்'' என்ற கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற திரு எஸ். கோபால் பி.காம்., எஸ். இலக்குவன், என். முத்தையா முதலியோருக்கு முதல், இரண்டு, மூன்றும் பரிசுகள் முறையே வழங்கினார். மன்றச் செயலாளர் திரு எஸ். சுப்பராயன் பி. காம். அவர்கள் நன்றி கூற, குளிர்பான விருந்துடன் விழா முடிந்தது.

தீபாவளி ஜவுளிகளுக்கு.....

நல்லி சின்னசாமி செட்டி

(பனகல் பார்க் எதிரில்)

தியாகராயநகர் - சென்னை-17

(டெலிபோன் நெ. 88115)

அசல் கொள்ளேகாலம் பட்டில் தயாரித்த

* காஞ்சீபுரம் புடவைகள்
* கத்தான் சேலைகள்
* பாவாடைத் துண்டுகள்
* சோளி-பீஸ்கள்

மற்றும்

அற்புதமான வேலைப் பாடுகளமைந்த

* நூல் சேலைகள்
* ஜரிகை வேஷ்டிகள்
* அங்கவஸ்திரங்கள்

இத்துடன் சகலவிதமான நவீன மில் ரகங்களும் தற்பொழுது ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்

25-10-59 ஞாயிற்றுக்கிழமை அன்றும் விற்பனை உண்டு!

பின்னி

ரகங்கள் அனைத்தும் எமது பிரத்யேக ஷோ-ரூமில் கிடைக்கும்

KRC

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

123. குத்திக் கெடுத்த காது

குத்திக் கெடுத்த காது என்ற ஒரு பழமொழியைக் கேட்டிருப்பீர்களே!

இல்லையே, கேட்டதில்லை!

அப்படியானால் இப்போதுதான் கேட்டீர்களே, காதினுள் தோன்றும் நமைச்சல் - குத்தல் வலி - இல்லை குருகுருப்பு அதுவும் இல்லாவிட்டால் ஒரு பழக்கம் காரணமாகச் சிலர் எந்நேரமும் காதைக் குடைந்த வண்ணம் இருப்பர்,

பேனாக்கட்டையின் நுனி-சாவி-நெருப்புக்குச்சி என்று இப்படியொரு பொருளைக் கண்டால் போதும். உடனே காதைக் குடைய அப்பொருளை உபயோகிக்க வேணுமென்று கைதுடிக்கும் இவர்களுக்கு. தம்மையுமறியாமலே வாய் ஏதோ பேசிக் கொண்டிருக்க மேற்சொன்ன பொருளினால் காதைக் குடைய ஆரம்பித்து விடுவர். கண்களை இடுக்கிக் கொண்டு வாயைக் கோணலாக்கி-தலையையும் ஒருபுறம் சாய்த்து, காதைக் குடையும்போது இவர்கள் அனுபவிக்கும் சுகத்தை என்னவென்று சொல்வது?

இப்பழக்கத்தினால் அடிக்கடி இப்படிக் காதைக் குடைவதால் காதில் ஒரு அழற்சி ஏற்படாதோ? அவ் வழற்சி காரணமாகக் காதைக் குடைவது அதிகரிக்குமே தவிர குறையாது. அதனால் காதின் அழற்சி அதிகரிக்குமே தவிர குறையாது. இப்படி அழற்சி அதிகரிப்பதாலோ அல்லது காதைக் குடையும் போது ஏற்படும் அற்ப அஜாக்கிரதையாலோ காதில் ஒரு காயம் ஏற்பட நேரிடும். இந்தக் காயம் விரணமாகி அதைத் தொடர்ந்து வலியும் குத்தலும் எரிச்சலும் உண்டாகிக் காதைக் குடையவும் சகிக்காது, குடையாமல் இருக்கவும் இயலாத நிலையேற்பட்டு மனிதன் பரிதவிப்பான். நரக வேதனைப்படுவான்.

இவ்வளவுதானா....? விரணத்திலிருந்து ரத்தம், சீழ், ஜலம் ஆகியவை ஒழுகத் தொடங்கும். காதின் பக்கமாகக் கையைக் கொண்டு போகவும் அஞ்சுவான். வலிவேதனை எரிச்சல் குத்தல் ஒருபுறமிருக்க ஒழுகும் ரத்தம் சீழ் ஜலங்களையும் சேர்த்து எத்தனை நாட்கள் சகிப்பான்? இந் நிலையில்,

1. எருக்கின் மொட்டுகள் சிலவற்றை எடுத்து அரைத்து உருட்டி, அத்துடன் சிறிது இந்துப்புவும் நல்லெண்ணெயும் சேர்த்துக் குழைத்து முன் கட்டுரையில் விவரித்தபடி புடபாகஸ்வரஸம் தயாரித்து, அதில் சில துளிகளைக் காதில் விட்டு வருவது நல்லது.

2. மாதுளையின் ரஸத்தையும், அவ்விதமே விளாம்பழத்தின் ரஸத்தையும் சில துளிகள் காதில் விட்டுப் பஞ்சினால் மூடி வைப்பது குத்திக் கெடுத்த காதுகளுக்கு ஹிதமாகும்.

3. காதில் நிரம்பக் காடியை ஊற்றி, அதில் பொடி செய்த கடல் நுரை என்னும் கடைச்சரக்கில் ஒன்றிரண்டு சிட்டிகையிட்டுச் சற்று நேரம் இருந்து, காதை மறுபுறம் திருப்பி மருந்துகளை வெளிக்களைந்தபின் பஞ்சினால் மூடி வைப்பது நல்லது.

கடல்நுரை என்ற சரக்கைப் பற்றிச் சிறிது விளக்கம் தருவது அவசியம். மருந்து விற்கும் கடையில் கடல்நுரை என்று கேட்டால் முன்னங்கி இலை போன்ற ஆனால் சிறிது கனமான, மஞ்சளும் வெளுப்பும் கலந்த நிறத்துடனுள்ள ஒரு சொறசொறப்பான பொருளைக் கொடுப்பர். இதுவல்ல கடல்நுரை. பிடிகருணைக்கிழங்குபோல் முதல் பெரிய காராக்கருணை (சேனை)க் கிழங்கின் அளவில் முண்டும் முரடும் குண்டுங் குழியுமாக உள்ளதும் சொறசொறப்புள்ளதும் மங்களமான வெண்ணிறத்திலுள்ள வேறொரு பொருளுண்டு. இது தான் சரியான கடல் நுரை. சித்தர்கள் தமிழில் எழுதியுள்ள வைத்திய நூல்களில் முப்பு என்னும் பிரதிபந்தகப் பொருளைத் தயாரிக்கும் முறையைத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் இக்கடல் நுரையைப் பற்றி விவரிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இது கடலில் எப்படி உற்பத்தியாகி, கடலின் அடியில் தங்க நேரிடுகிறது என்பதை அச்சந்தர்ப்பத்தில் விளக்கி இக்கடல் நுரையை 'அக்கான்' என்ற பெயரிட்டு அழைத்துள்ளனர். ஏமாந்து போய் முதலில் சொன்ன போலி—மலிவுப் பொருளை ஏற்க வேண்டாம்.

4. மூங்கிலின் (பச்சைதான்) மேற்பட்டையை உரித்தெடுத்துச் சிறு துண்டுகளாய் நறுக்கிப் பிறகு உரலில் இடித்துப் பின் அம்மியிலிட்டு அரைத்தெடுத்த விழுது ஒரு எலுமிச்சங்காயளவு இதைப் பத்து பலம் நல்லெண்ணெய், வெள்ளாட்டின் சிறுநீர் ஒரு படி செம்மறியாட்டின் சிறுநீர் ஒரு படி இவற்றையெல்லாம் சேர்த்துக் குழப்பி அடுப்பிலேற்றிக் காய்ச்சி, கல்கம் மெழுகு பதத்தில் வரும்போது இறக்கி வடிகட்டி எடுத்த தைலத்

இல் சில துளிகளைக் காதில் விட்டுப் பஞ்சினால் மூடி வைக்கவும். ரத்தம் சீழ் முதலிய திரவக்கசிவுகள் நிற்கும். காதினுள்ள விரணம் ஆறும். வீக்கம், வலி, குத்தல் இவையும் மாறும்.

5. இவ்வாறே பெருங்காயம் தும்பைப் பூ இவற்றையும் [மூங்கிற் பட்டைக்குப் பதிலாக] மேற்சொன்ன விதமே சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயையும் உபயோகிக்கலாம். இதனாலும் நல்ல பலன் கிடைக்கும்.

காது நோயுற்றவர் காதிலிருந்து ஏற்படும் கசிவுகளை வற்றச் செய்யவும், பொதுவாகவே அவ்வியாதியைப் போக்கவும் காதில் மருந்துகளை ஒழிப்பதல்லாது தலைக்குத் தடவவும் சில தைலங்களை உபயோகித்தல் அவசியம். இதனால் பெரும் பலனைப் பெறலாம். ஆனால்...

ஆனாலென்ன? ஆனாலும் போனாலும் என்று சீற்றமுற வேண்டாம். தைலங்களைத் தலைக்கு உபயோகித்தல் அவசியம். ஆனால் தலைக்கு ஜலம் விட்டுக் குளிக்கக் கூடாது. மேலும்......''

மேலும் என்ன ஐயா வேண்டிக் கிடக்கு? ஒருகால் வெந்நீரானாலோ..?''

''வெந்நீர் தான் உதவும்-கழுத்து வரையில் குளிக்க. தலையில் ஜலமே தட்டக் கூடாது.''

''தைலத்தை வேறு தேய்க்க வேணுமென்கிறீரே?''

''ஆமாம். தினசரி தலைக்குக் குறிப்பிட்ட தைலத்தை உச்சியிட்டு ஊறுவது. பிறகு அதைத் தலை முழுதும் நிரவித் தடவி முடிசீவிக் கொள்வது. அவ்வளவு தான் தினசரி இப்படிச் சிறிது சிறிதாகத் தடவி வரும் தைலம் நாளடைவில் சேர்ந்து உபயோகிப்பதால் தலை முடி பழம் புளி போலாகி...''

அவ்விதம் நேராமல் இருக்க அவசியமான போதெல்லாம் அதிகப்படி எண்ணெயை ஒரு கந்தைத் துணியினால் துவட்டி எடுத்து விடவும். நீரா...ஆ...ஆத பக்ஷம் 10-15 நாளைக் கொருதரம் அக்குறிப்பிட்ட தைலத்தையே சிறிது தலைக்குத் தேய்த்து உடனே வெந்நீரில் ஸ்நானம் பண்ணி, தலையின் ஈரத்தைத் துவட்டிச் சிராக்கிச் சாம்பிராணிப் புகை கொடுத்து முடியையும் உலரச் செய்யவும். கூடுமான வரையில் இதைத் தவிர்க்க முயல்வதுதான் நல்லது.

பனியில் சென்று தணுப்பு கொள்ளல், 'விர்ர்ர்ர்' என்று அடிக்கும் காற்று கொள்ளல்—வெய்யிலில் சென்று தலை வியர்க்கும்படி செய்தல் கூடாது.

குடிப்பதும் வெந்நீரே ஆக வேண்டும். ''ஐஸ்வாட்டர்'' ''கூல்டிரிங்'' ''ஐஸ்க்ரீம்'' முதலியவற்றை ஏற்றிடல் கூடவே கூடாது. டொமேடோ ஜூஸ்... ஆரஞ்ச் க்வாஷ்... இப்படிப் பட்டவை அறவே கூடாது.

எதைச் சாப்பிட்டாலும் சூடாக உள்ள போதே ஏற்க வேண்டும்.

'என்ன ஐயா பத்தியங்கள் மிக்க கடினமாக இருக்கின்றனவே?'

'இவற்றை ஏற்றுத்தானாக வேணுமென்று நிர்ப்பந்தமாக உங்களிடம் திணிக்கப் பார்க்கும் கட்சியைச் சேர்ந்தவனல்ல நான். நல்லதைச் சொன்னேன். அனுபவத்திலும் சாஸ்திரத்திலும் கண்டதைச் சொன்னேன். ஏற்றால், நல்லது. ஏற்காவிட்டால்....'

'ஏற்காவிட்டால்?'

ஏற்காவிட்டால் காது வைரக் கடுக்கன் வைரக் கம்மல் இவற்றைப் பூணமட்டுந் தான் உதவும். கேட்பதற்கு உதவாது.'

'அடாடா! அப்படியா?'

'ஆமாம்! அதனால் வைத்தியருக்கு லாபம், வைர வியாபாரிக்கு...'

'நிறுத்து ஐயா!... ஏதோ தைலங்களைப் பற்றிச் சொன்னீரே. என்ன தைலங்கள் நல்லவை? அவற்றைச் செய்வது எப்படி?...'

'அதுவா...?'




அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...
அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்



நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள **பாண்ட்ஸ்** வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசான நும் பனிக்கட்டிபோல் மென்மையான நுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த கிரீம் தேய்த்துக்கொண்ட மறு வினாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.



சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)



இந்த வருட

தீபாவளி யை வர்ண ஜாலங்கள் நிறைந்த

பின்னி துணிகள் அணிந்து கொண்டாடுங்கள்

உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பின்னி துணிகள் பொருத்தும், அழகிய பட்டுப் புடவைகள், உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் நூதன வர்ணங்கள் நிறைந்த காட்ஸ்வூல் துணி, உயர்தர ஷர்ட்டிங், கிரேப், ட்ரில், டஸ்ஸோர், ஸூட்டிங், ஆகியவை நிறைந்த பின்னிக்கடைக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மானேஜிங் ஏஜெண்டுகள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

தேன்கூடு

அகிலன்

அத்தியாயம் 7

பிரியாவிடை

இன்பத்தின் மிகுதியால் பாபு கண்களை மூடிக் கொண்டான். உஷா தன்னைப் பார்க்க வந்தது, தனக்கு அருகில் உட்கார்ந்து பேசியது, தான் கொடுத்த கடிதத்தை விகல்பமின்றி வாங்கிக் கொண்டது - எல்லாமே அவனுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

உஷாவின் வண்டி புறப்பட்டுச் சென்ற சத்தத்தைக் கேட்ட பின்னர்தான் அவன் மூடிய கண்களைத் திறந்தான். மனத்திலே உள்ள பெரிய சுமை இறங்கி விட்டதைப் போலப் பெருமூச்செறிந்தான். உஷா வந்து சென்ற காட்சி அவன் கண்களை விட்டு அகலவே இல்லை.

"வரட்டுமா, பாபு?"

அந்தக் குரலில்தான் என்ன கனிவு! என்ன பரிவு!

"வரட்டுமா, பாபு?"

அவள் இன்னும் சிறிது நேரம் இருந்தால் எத்தனை தெம்பாக, ஆறுதலாக இருக்கும்! அதற்குள் விடைபெறுகிறாளே என்று பெரும் துக்கமாக இருந்தது. வராமலே இருந்திருந்தால்கூட இத்தனை துக்கமும் ஏக்கமும் ஏற்பட்டிருக்காது.

"ம்..." என்று அவன் கண்களை மூடியவாறே தலையசைத்தான். அவனுடைய உள்ளத்து மகிழ்ச்சியும் ஏக்கமும் அந்த இமைகளின் துடிதுடிப்பிலே சுழித்துக் கொண்டிருந்தன.

அவள் சொல்லிக் கொண்டாளே தவிர, அந்த இடத்தை விட்டு அகலவில்லை. அவன் முகத்தை விட்டுக் கண்களை எடுக்கவுமில்லை. கண்களை நன்றாக மூடிக் கொண்டிருந்தாலும், அவள்பார்த்துக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரியும். அவள் பார்வை எப்படி இருக்கும் என்பதும் தெரியும். கனிவும் பரிவும் கொண்ட அந்தப் பார்வை எதனோடும் ஒப்பிட்டுக் கூறுவது அவனுக்கு ஏற்காதது. உஷா உயர்ந்த குல மங்கை. மிக மிக உயர்ந்த குணம் படைத்தவள். அந்தக் குண மேம்பாடுகளை யெல்லாம் காட்டுகின்ற சாளரம் அவள் பார்வை. அந்தப் பார்வையில் உருகாதவர் யார் இருக்க முடியும்?

"அப்புறம் வருகிறேன், பாபு!"

"சரி."

"வரட்டுமா?"

"ம்..."

"மறுபடியும் அரை மனசாகச் சொல்கிறாயே! ஏன், உனக்கு என்ன பயம்? உன் உடம்பு நாளையே குணமாகி விடும். என்னவோ பயப்படுகிறாய் போலிருக்கிறது. ஏதாவது உதவி தேவையானால் என்னிடம் தயங்காமல் கேட்கலாம்."

அவளுக்குத் தான் அவ்விடத்தை விட்டுச் செல்ல அரை மனதாக இருந்தது. இது அவன் பேச்சிலிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

"எனக்கு ஒன்றும் பயமில்லை. உதவி தேவையானால் உன்னிடம் கேட்பதற்கு என்ன?"

"அதுதான் சொன்னேன். மேல் கீழ், ஏற்றத் தாழ்வு என்று கணக்குப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டாம். வரட்டுமா? நன்றாக வாயைத் திறந்து பதில் சொல்லு!"

"போய்விட்டு வா, உஷா!"

கண்களைத் திறந்து தனக்கு விடை கொடுக்க முடியாமலிருக்கும் நிலைமையை உணர்ந்து, புன்முறுவலுடன் அவள் அவ்விடத்தை விட்டுச் சென்றாள். அவளுடைய அன்பின் நுட்பத்தை எப்படி வெளிப்படையாகச் சொல்ல முடியும்? அது உணர்ந்து பார்க்க வேண்டிய ஒன்று. சொன்னால் பிறருக்குப் புரியாது; புரியும்படி சொல்ல உணர்ந்து பார்த்தவர்களாலும் முடியாது. அதற்கு மொழியே இல்லை; சொற்களும் இல்லை.

வெகு நேரம் பாபு அந்தக் கடிதத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். இப்பொழுது பார்த்தபோது பிறர் அறியாமல் அந்தக் கடிதத்தை எழுத அவன் பட்டபாடெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது. எழுதியது இருந்தாலும் அதை அவளிடம் கொடுக்காமலே இருந்திருக்கலாமே என்று பட்டது. அதைப் படிக்கும் போது அவள் என்ன எண்ணிக் கொள்வாள்? அவனுடைய மன உணர்ச்சிகளை அவள் சரியான முறையில் எடுத்துக்

கொள்ள வேண்டுமே! அவனுக்கு அதுவே பெரிய கவலையாக இருந்தது. அந்தக் கடிதத்தின் வரிகளுக்கிடையே ஒலிக்குறியின்றி ஒளிந்திருக்கும் பொருள் அவனை லஜ்ஜைப்படுத்தியது. அவள் கல்லூரிப் படிப்புப் படிப்பவள்; அவனோ இப்பொழுதுதான் எட்டாம் வகுப்புத் தேறியிருந்தான். அந்தக் கடிதத்தின் எழுத்துப் பிழையைப் பற்றிக் கூடக் கவலையில்லை; எண்ணப் பிழை இருந்துவிடக் கூடாதே என்பதுதான் அவன் கவலை. இப்பொழுது முடிவில் அது சிறுபிள்ளைத்தனமான காரியமாகத் தோன்றியது. கொடுத்தது கொடுத்தாகி விட்டது. இனிமேல் என்ன செய்ய முடியும்?

ஆனால் ஒன்று மட்டும் அவனுக்கு ஆறுதலைத் தந்தது. எதை நேரிடையாகச் சொல்ல முடியாதோ, எதை அவசியமாக அவளுக்குத் தெரிவிக்க வேண்டுமோ, அந்தப் பகுதிகளை யெல்லாம் தெளிவாகவே சொல்லியிருப்பதாக அவன் கருதினான்.

மறுநாள் காலையில் மனவெழுச்சி காரணமாகவோ, வெகு நேரம் விழித்திருந்தது காரணமாகவோ அவனுக்குத் தலை ஒரே பாரமாகக் கனத்தது. கண்களில் ஒரே எரிச்சல். கைகளும் கால்களும் குடைச்சலாகக் குடைந்து எடுத்தன. சண்முகம் வந்து தொட்டுப் பார்த்துவிட்டுப் பயந்து போனான். உடம்பு நெருப்பாகச் சுட்டுக்கொண்டிருந்தது.

"என்னடா, பாபு! ஜுரம் இருப்பிக்கொண்டு விட்டதே! என்ன காரணம்?" என்றான் சண்முகம்.

"தெரியவில்லை; ராத்திரி சரியான தூக்கமில்லை!"

சண்முகம் கவலையோடு, "எனக்கு அப்பவே தெரியுமே...இதெல்லாம் நல்லதற்கா வருகிறது? தாங்கக் கூடியவர்களுக்கு எல்லாம் சரிதான்...இப்பொழுது இதற்கு என்ன செய்வது?" என்று ஒன்றுக்கொன்று தொடர்பின்றி முணுமுணுத்தான்.

பிறகு கொட்டகைக்கு வெளியே போய், "ஏய், தேவானை! நேத்தே நான் என்ன சொன்னேன்? போய்ப் பாரு, உங்க அருமை அண்ணாத்தையை! டாக்டரைக் கூட்டியாறதா, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுக்கிட்டுப் போறதான்னு இருக்காரு...எல்லாம் நல்லதுக்கா இங்கே வந்து சேருது!" என்றான்.

"உடம்பு காயுதா என்ன, மறுபடியும்....?"


"அது காயுதோ! தேயுதோ! நீயே போய்ப் பாரு!"

தேவானை வந்து பார்த்தபோது பாபு கண்களை மூடிக்கொண்டிருந்தான். பேசவோ, பதில் கூறவோ, அவனுக்குச் சங்கடமாக இருந்தது. சண்முகம் யாரைக் குற்றம் சாட்டிப் பேசுகிறான் என்பது அவனுக்குப் புரியவில்லையா? உஷாவைப் பற்றி அவன் நேரிடையாக எதுவும் தன்னிடம் சொல்லியதில்லையே தவிர, அவனுடைய கருத்தைப் பல முறை பல விதங்களில் அவன் வெளிப்படுத்தி யிருப்பது பாபுவுக்குத் தெரியும். உஷா இதற்கு எப்படிப் பொறுப்பாளியாவாள்? அவளை இதற்குக் காரணமாகக் குற்றம் சாட்டுவது என்ன அநீதி? அவள் வந்து போனதற்கும் ஜுரம் திருப்பிக் கொண்டதற்கும் என்ன சம்பந்தம்?

சண்முகத்தை எதிர்த்தோ, மறுத்தோ பேசப் பாபு விரும்பவில்லை. உண்மையை அவனே உணர்ந்து, தன்னுடைய கருத்தை ஒருநாள் மாற்றிக் கொள்ளாமலா போய்விடப் போகிறான்? தேவானையின் விஷயத்தில் அப்படித்தானே ஆயிற்று?

அவள் விஷயத்தில் அவனுடைய வீம்பும் முரட்டுப் பிடிவாதமும் எவ்வளவோ மாறிவிடவில்லையா? தேவானை இப்பொழுது சண்முகத்தின் வீட்டிலேயே தான் இருந்தாள். அவனுடைய அண்ணிதான் அவளுக்குத் தாயும் தந்தையுமாக விளங்கினாள். வீட்டு வேலைகளில் எல்லாம் அவள் பழகி வந்ததுடன் நிற்கவில்லை; தையல் வகுப்புக்குச் சென்று பயின்றும் வந்தாள். அதுவும் போக மீதி நேரங்களில் சண்முகம் கொடுத்த பாடங்களையும் சின்னச் சின்னக் கணக்குகளையும் அவள் பயில வேண்டியிருந்தது. கணக்கு அவளுக்கு இன்னும் சரியாக வரவில்லை. படிப்பிலும் அவள் சுமாராகத்தான் இருந்தாள். ஆனால் பின்னல் வேலைகளிலும், தையல் வகுப்பிலும் அவள் தேர்ச்சியுடன் விளங்கினாள். வாரத்துக்கு மூன்று நாட்கள் கம்பெனியிலேயே கற்றுத் தரும் தையல் பாடங்களைக் கற்றுக் கொண்டு வந்தாள். இத்தனைக்கும் சண்முகத்தின் அண்ணிமட்டும் நடுவில் இல்லாமல் போனால் தேவானையின் முதுகு பிளந்து போயிருக்கும். ஒரு நாளாவது அவன் கொடுத்து விட்டுப் போன பாடத்தை அவள் சரியாகச் செய்திருக்க வேண்டுமே! பயத்திலேயே பாதி தப்புத் தப்பாகப் போய்க் கொண்டிருந்தது.

"அவளுக்கு இந்த வேலை நல்லா வந்தாப் போதும்; படிப்பும் பாட்டும் நீயே வச்சுக்க!" என்று பரிந்துகொண்டு



வந்து விடுவான் அண்ணி. இதற்கெல்லாம் யார் காரணம்?

பாபு முதன் முதலில் தேவானையைக் கொண்டு விடப்போனபோது முன்னெச்சரிக்கையாகத் தன் விலாசத்தை எழுதிக் கொடுத்து விட்டு வராமல் போயிருந்தால் இவ்வளவுக்கு எங்கே வந்திருக்கப் போகிறது? தேவானை என்னவோ பொறுமைசாலி தான். சண்முகத்தின் விஷயத்தில் அவள் அந்தப் பொறுமையைத்தான் முற்றிலும் கடைப்பிடித்துக் கொண்டிருந்தாள். ஆனால் மாமன் வீட்டிலும் அவள் பொறுமையாக இருக்க வேண்டுமே.

"இதோ பார், தங்கச்சி! பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து பார். எல்லை மீறிப் போனால் எனக்கு ஒரு வரி எழுதிப் போடு. அதுவரையில் எழுதாதே!" என்று சொல்லி, தபால் தலை ஒட்டிய கார்டுகளையும் கொடுத்து விட்டு வந்திருந்தான் பாபு.

மூன்றாவது மாதமே முதல் கார்டு வந்தது. ஆனால் அது சண்முகத்தின் கையில் அகப்பட்டு விட்டது. அதனால் வந்ததே பாபுவுக்குத் தெரியாமல் போய் விட்டது. இரண்டாவதும் அப்படியே. ஆனால் மூன்றாவது கடிதம் வந்ததும் அதை வாங்கிப் பாபுவிடம் கொடுத்து விட்டு, "என்ன செய்யப் போகிறாய், இதற்கு?" என்று கேட்டான் அவன்.

"செய்வது என்ன? போய் அழைத்து வந்துவிட வேண்டியதுதான். ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிட்டால்? மாமன்காரனே மோசக்காரனாக இருந்தால் அப்புறம் போகிற வழி?"

"இன்னும் எத்தனை கார்டு தபால்தலை ஒட்டிக் கொடுத்து விட்டு வந்திருக்கிறாய்?"

"ஏன்? மூன்று கார்டும் வரட்டும்; போகலாம் என்கிறாயா?"

"சொன்னால் நீ கேட்டுவிடப் போகிறாயா, என்ன? போ, போ! இன்றைக்கே போய்விட்டு வா!" என்று இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் போட்டான் சண்முகம்.

உஷா அவனைப் பார்க்க வந்ததும், சண்முகம் அவளிடம் கடுமையாகப் பேசியதும் அப்போதுதான். ஆனால் பாபுவுக்கு நடந்தது எதுவுமே தெரியாது. சொல்வாரும் இல்லை. சண்முகத்துக்கு இது என்னவோ பொருந்தாத நட்பாகப் பட்டது என்பது மட்டும் பாபுவுக்குத் தெரியும். இது பொருந்தாதது என்றால் நட்பு என்பதுதான் என்ன? ஆகவே பாபு மௌனமே சாதித்தான்.

ஜுரம் என்னவோ இறங்கு முகமாகவே யில்லை. காலையில் தராசுத் தட்டை எடுத்துக் கொண்டு போன சண்முகம் சங்கத்துப் பக்கமே திரும்பவில்லை. தேவானைதான் கஞ்சி வைத்துக்

இருமலுக்கு

வீட்டிலேயே

குணம்

அளிப்பது


Alembic

க்ளைகோடின்

டெர்ப்-வசாகா

குழந்தைகளும் இதை
விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

அலெம்பிக் கெமிகல் வர்க்ஸ்
கம்பெனி லிட்., பரோடா-3



கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தான்.

"சண்முகம் வரவில்லையா?"

"இல்லை."

மாலை நாலுமணி இருக்கும். காலடிச் சத்தம் கேட்டுப் பாபு ஆவலோடு கண்ணைத் திறந்து பார்த்தான். சண்முகம் தான் வந்து அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தான். தேளைத் தீண்டியவன் போல் கையை எடுத்துவிட்டு உதறினான். ஜுரம் நெருப்புப் பறந்து கொண்டிருந்தது. கண்களைச் சரியாகத் திறக்க முடியவில்லை. வாயைத் திறந்து வழியாகப் பேசவும் முடியவில்லை. வந்தது போலவே சண்முகம் வேகமாகப் போய்விட்டான். சண்முகம் ஏன் இவ்வளவு பொறுமையில்லாதவனாகப் போய்க் கொண்டிருக்கிறான்?

உஷா ஏன் வரவில்லை? மணி ஐந்துக்கு மேல் ஆகப் போகிறதே! ஒருகால் வர மாட்டாளோ? அந்தக் கடிதத்தில் ஏதாவது அவனுக்குத் தெரியாமல் பிழை இருந்திருக்குமோ? நேற்று இந்த இடத்தை விட்டுப் போகவே மனமில்லாமல் இருந்தவள் இன்று இந்தப் பக்கமே எட்டிக்கூடப் பார்க்க வரவில்லையே!

மீண்டும் காலடியோசை கேட்டது. வாசலில் மோட்டார் கதவின் ஓசை கூடக் கேட்டது. பாபு இலேசாகக் கண்களைத் திறந்துகொண்டு பார்த்தான். என்ன ஏமாற்றம்! வந்தவள் உஷாவல்ல; தேவானைதான்! அவள் ஏன் இப்படிப் பரபரப்போடு ஓடி வருகிறாள்? என்ன சொல்ல வருகிறாள்?

"உஷாவா காரில் வந்திருப்பது?" என்று தேவானையைப் பார்த்துக் கேட்டான் பாபு.

"உஷாவைத் தவிர காரிலே வேறே யாரும் வரமாட்டார்களாக்கும்?" என்று தனக்குத்தானே மெல்லிய குரலில் கூறிக் கொண்டு முன்னால் வந்தான் சண்முகம்.

அவன் பின்னாலேயே இரண்டு பேர்கள் எதையோ பயங்கரமாகத் தூக்கிக் கொண்டு வருகிறார்களே — அது என்ன?

தேவானையின் கண்களில் பீதி படர்ந்திருப்பது நன்றாகத் தெரிந்தது. அந்த இருவரும் அச்சானியம் போல் சுமந்து வந்த 'ஸ்டெரச்ச'ரைக் கண்டு அவள் வாயைப் பொத்திக் கொண்டு திகைத்து நின்றாள்.

பாபுவுக்கும் புரிந்து விட்டது! ஆஸ்பத்திரிக்குப் போகுமுன் உஷாவைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போனால் தேவலை போல் ஒரே ஒரு குறை. ஆனால் அதற்கு நேரமேயில்லை. வண்டியில் ஏற்றியாகி விட்டது. சண்முகமும் தேவானையும் முன்னால் உட்கார்ந்து கொண்டு விட்டார்கள். கதவு சாத்தியாகி விட்டது; வண்டியும் அங்கிருந்து புறப்பட்டுவிட்டது.

அத்தியாயம் 8


சிங்கப்பூர் பயணம்!

கிட்டத்தட்ட இதே நேரத்தில்தான் சிங்கப்பூருக்குப் புறப்படும் விமானமும் மீனம்பாக்கத்தை விட்டுப் போக எழுந்தது. விமானம் புறப்படும் வரையில் தான் கபிலனின் உள்ளத்தில் பெரும் கவலை குடிகொண்டிருந்தது. புறப்பட்ட பிறகு அவனுக்குச் சிங்கப்பூருக்கே போய் விட்டது போல் தோன்றியது.

அவன் மனத்திலிருந்த சுமையெல்லாம் இறங்கி அவனே சிறகு முளைத்து ஆகாயத்தில் பறப்பதுபோல் எண்ணிக் கொண்டான். இனி எது வந்தாலும், என்ன நேர்ந்தாலும் அவனுக்குக் கவலையில்லை. முதலில் அங்கே போவது ஒன்றுதான் அவனுக்குப் பெரிய காரியமாக இருந்தது. போகவே முடியாதோ என்று கூட இடையூறுகள் முளைத்தன. அவ்வளவையும் கடந்து இப்போது அவன் வெற்றிவாகை சூடிக் கொண்டு புறப்பட்டுவிட்டான்!

கண்ணபிரான் போய்ச் சேர்ந்தபிறகு எவ்வளவு கடிதங்கள்தான் எழுதுவது! முதலில் வந்த இரண்டொரு கடிதங்களும் அவனுக்கு அத்தனை உவப்பைத் தரவில்லை. அவை யாரோ, யாருக்கோ சாதாரணமாக, மிகவும் சாதாரணமாக எழுதப் பட்டவைபோல் அமைந்திருந்தன. பிறகு அந்தச் சாதாரணமான கடிதங்களையும் காணோம்! எழுதி எழுதி அவனுக்குக் கைதான் ஒடிந்துபோயிற்று; மனம் ஒடிந்து கூடப் போய் விட்டது. கடைசியாக அவன் தன்னுடைய மாமாவுக்கே எழுதினான். நேரில் பேசவேண்டிய விஷயங்கள் பல இருப்பதாகவும், அவனே புறப்பட்டு வர விரும்புவதாகவும் வற்புறுத்தி எழுதிய பிறகுதான் மாமா நாகலிங்கத்திடமிருந்து அவன் எதிர்பார்த்த வண்ணம் கடிதம் வந்தது.

அது வந்தது முதல் அவன் கால் பூமியில் பாவவேயில்லை. கண்ணபிரான்



கடிதம் எழுத முடியாமல் இருந்ததற்கும் அந்தக் கடிதத்திலேயே சூசகமாக ஒரு குறிப்பும் இருப்பதை அவள் கண்டாள். நாகலிங்கம் அதைக் கடிதத்தின் போக்கில் முக்கியமற்ற பகுதியில்தான் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்த ஒரு வரி அவளுக்கு எத்தனை பெரிய ஆறுதலையும் விளக்கத்தையும் தந்தது என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

அந்த ஒரு வரியில்தான் அவள் உயிரின் துடிப்பே அடங்கியிருந்தது. அந்த ஒரு வரியில்தான் அவளுடைய எதிர்காலமே தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் படித்த பிறகுதான் எவ்வளவு ஆறுதல்! எத்தனை விச்ராந்தி! அப்புறம்தான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது.

"பாவம், ஊரில் இருந்திருந்தால் எனக்குக் கடிதம் எழுதாமல் இருந்திருப்பாரா?" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். ஆனால் உலகின் எந்தக் கோடியிலிருந்தாலும் ஒருவன் கடிதம் எழுத முடியும் என்பது அவளுக்கு மறந்தே போய் விட்டது. வெளியூர் போயிருப்பவர்களுக்கு இதற்கு நேரம் கிடைத்து விடுகிறது என்பது என்ன நிச்சயம்? மேலும் அவள் எழுதியிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்? அந்தக் கடிதங்களை அப்படியானால் கண்ணபிரான் பார்த்திருக்கமாட்டானா? அவன் கைக்குப் போய்ச் சேர்ந்திருக்காதா? அவன் இல்லாதபோது அந்தக் கடிதங்களையெல்லாம் வேறு யாராவது பிரித்துப் பார்த்து விடுவார்களோ? அப்படிப் பார்க்கும்படி அவன் விட்டு விட்டுப் போய் விடுவானா, என்ன? அப்படியே பார்த்தால்தான் என்ன, அவள் வரையில் அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படப் போவதில்லை. அவள் உண்மையைத் தானே எழுதியிருந்தாள்? அவள் அதற்காகக் கவலைப்பட்டால் முடியுமா? ஒருகால் கண்ணபிரானுக்கு இது புதிய சங்கடத்தை உண்டாக்குவதாக இருக்கலாம். அதற்கு அவள்தான் என்ன செய்யமுடியும்? ஒரு பெண்ணின் உள்ளத்தைச் சரிவர உணர முடிந்தவர்கள் இது ஒரு குற்றமாகவே இருந்தாலும் பெரிதாகப் பாராட்டுவார்களா? ஒருநாளும் மாட்டார்கள். அதிலும் அவளை மிக மிக நன்றாக அறிந்த கண்ணபிரான் நிச்சயமாக அவளைக் குற்றமோ, குறையோ சொல்லவே மாட்டான்.

சுசீலா இத்தகைய சிந்தனைகளோடு தான் வெளிநாடு போவதற்கான அனுமதிச் சீட்டுகள் முதலானவற்றைப் பெற்றாள். தாயும் தந்தையும் அவள் தனியாக வெளிநாடு செல்வதற்கு ஆட்சேபம் தெரிவித்தார்கள். அவள் வசித்து வந்த வீட்டைப் பூட்டிவிட்டுப் போவதில் பல சங்கடங்கள் இருந்தன. வெகு எளிதில் அவள் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

இனி என்ன? சிங்கப்பூருக்குப் போய் விட்டால் எல்லாமே பூர்த்தியாகி விட்டதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. அவளுடைய மாமாவிடம் எல்லாவற்றையும் எப்படிச் சொல்வது? அப்படிச் சொன்னால் என்ன நடக்கும்?


'எது நடந்தால் என்ன? எல்லாவற்றையும் கண்ணபிரான் பார்த்துக் கொள்வார்! ஒவ்வொரு கட்டத்திலும் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவரிடம் கேட்டுக் கலந்து கொண்டு நடப்பேன். அவர் மனம் சிறிதும் கோண நான் சகிப்பேனா?

'என்னைக் கண்டால் அவர் முகம் எப்படி மலரும்? அவ்வளவு தூரம் போவானேன்? அவரைக் கண்டதும் நான் எப்படி இருப்பேன்?'

சுசீலாவினால் அதற்குமேல் சிந்திக்கவே முடியவில்லை. அவளுக்கு அதை எண்ணிய போது தலை 'கிர்' ரென்று சுற்றியது. அது விமானத்தின் கிறக்கமா, இன்பத்தின் கிறக்கமா?

சுசீலா வானத்தில் பறந்து கொண்டிருந்தாள்!

(தொடரும்)



இபாவளியை முன்னிட்டு விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன

பட்டு & நூல் ஜவுளிகள்

பின்னி, மேட்டூர்

இதர மில் ஜவுளி தினுசுகள் புதிய ஸ்டாக் வந்திருக்கின்றன

✶

தங்கள் தேவைக்கு எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்

சாரதா ஜவுளிக் கடை

ராஜ வீதி — கோயமுத்தூர்

போன்: 3127

பிராஞ்சு:

கோயமுத்தூர் சாரதா ஜவுளிக் கடை

ஈஸ்வரன் கோயில் வீதி, திருப்பூர்

OSR.



அந்த "கஷ்டமான நாட்களில்"
இருக்கும் வலிக்கு

ஸாரிடான் நிவாரணம் அளிக்கிறது

அந்த 'கஷ்டமான நாட்களில்' நீங்கள் வலியால் அவதிப்பட வேண்டியதில்லை. ஸாரிடான் சாப்பிடுங்கள். அது சாப்பிட்ட சிறிது நேரத்தில் வலியை சமனப்படுத்தி உங்களை மறுபடியும் தெம்புடனும், புத்துணர்ச்சியுடனும் இருக்கச் செய்யும். ஸாரிடான் எல்லாவித வலிகளுக்கும் விரைவில் முழு நிவாரணம் அளிக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு ஸாரிடான் வில்லையின் விலை 12 நயே பைஸே. பெரியவர்களுக்கு ஒரு வில்லை ஒரு பூர்த்தியான டோஸ். சிறுவர்களுக்கு ¼ வில்லையிலிருந்து ½ வில்லை வரை போதுமானது.

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் : வோல்டாஸ் லிமிடெட்

சரியான புள்ளி

தோட்டக்கார விசுவநாதன்



[குமார் வீட்டில் ஆபீஸ் அறை. குமார் மேஜை நாற்காலிகளைத் தூசு தட்டிய படியே இருக்கிறான். அவன் பக்கத்தில் அவன் மனைவி திலகம் நிற்கிறாள்.]

திலகம் : இதுக்கு முந்தி இருந்த வேலைக்காரனுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுத்திருந்தால் இப்போ நீங்க மேஜை நாற்காலிகளைத் துடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்காதில்லையா ?

குமார் : கட்டின வீட்டுக்குப் பணிக்கை சொல்ற மனைவி இல்லாமெ கடமை தெரிந்த மனைவி ஒருத்தியைக் கல்யாணம் கட்டிக்கிட்டிருந்தேனுக்கூட இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

திலகம் : சொல்ல மாட்டீங்க நீங்க. வீட்டிலே ஒண்ணு இருந்தா ஒண்ணு இருக்கிறதில்லே. அப்படி இருந்தும் கடன் உடனே வாங்கி வேளாவேளைக்குச் சாப்பாடு போடறேன் இல்லையா ? அதுதான் இப்படி உங்களைப் பேசச் சொல்றது !

குமார் : நிஜமா இந்த விஷயத்திலே நம்ம பொருத்தம் ரொம்பப் பிரமாதம். கடன் வாங்கறதை நான் ஒரு தொழிலா வைச்சுக்கிட்டிருக்கேன். அதை ஒரு கலையா வளக்கறே நீ ! சரி, காப்பி டீ ஏதாவது....

திலகம் : மூச்சு விடக் கூடாது.

குமார் : மூச்சு விடாமெ இருந்தா காப்பி கிடைக்கிறதா இருந்தா அதுக்கும் தயார் ! ஒரு ரெண்டு கப்பு காப்பியோ, டீயோ அவசியம் தேவை, திலகம் ! அதுலே தான் நம்ம எதிர்காலம் முழுதும் இருக்குது.

திலகம் : என்ன புதிர் போடறீங்க ?

குமார் : நான் ஒரு பெரிய ஆசாமிக்குப் பிரமாதமா கடுதாசி எழுதியிருந்தேன். நான் எழுதினதிலே அப்படியே மயங்கிப் போயி இன்னிக்கு வந்து நேரிலே பேசி வியாபாரத்துக்குப் பணம் போட முன் வரதா எழுதியிருக்கிறான். அவன் எந்த நிமிஷமும் வரலாம். வர்றவனுக்கு ஒரு காப்பி டீகூடத் தராமெ எப்படிப் பணம் வாங்க முடியும் ?


திலகம் : ரெண்டே ரெண்டு கப்பு டீக்குத்தான் பால் இருக்குது. அது சரி ! வர்றது யாரு ?

குமார் : யாருக்குத் தெரியும் ? தபால் பெட்டி நெம்பர் கொடுத்து விளம்பரம் வந்தது. கடுதாசி எழுதினேன். ஆனால் பெரிய புள்ளின்னு மட்டும் தீர்மானமாகச் சொல்லலாம். அதோ வர்றது அந்த ஆசாமியாத்தான் இருக்கணும்.

[கந்தசாமி நல்ல உடையணிந்து தயங்கிய படியே வருகிறான். திலகம் உள்ளே செல்லக் குமார் அதிக வினயத்துடன் உபசரிக்கிறான்.]

குமார் : நமஸ்காரம் ! நமஸ்காரம் ! வாங்க, வாங்க. உட்காருங்க.

கந்தசாமி : இருக்கட்டும். இருக்கட்டும். அடடா ! என்ன எதிர்பாராத நிகழ்ச்சி !



மதுரை வேத தர்ம கைங்கர்ய சபையின் ஆதரவில் வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபையின் சம்மேளனம் செப்டம்பர் 16ந் தேதி முதல் 20ந்தேதி வரை 'இம்மையில் நன்மை தருவார்' சுவாமி கோயிலில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர், திருச்சி மீட்டியர்டு ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ எம். என். பார்த்தசாரதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

எனக்கு இவ்வளவு நல்ல வரவேற்பு இருக்கும்னு நான் எதிர்பார்க்கவே இல்லே.

குமார் : என்கிட்ட நீங்க பழகினதில்லே. அதனாலே உங்களுக்குத் தெரியல்லே. திலகம்! ஜோரா ரெண்டு கப்பு டீ கொண்டா.

கந்தசாமி : ஐயே! அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம், சார்.

குமார் : அப்படிச் சொல்லவே கூடாது. எங்க வீட்டிலே ஒரு தரம் டீ சாப்பிட்டவங்க ளன்று, அப்புறம் ஹோட்டல் டீயைக் கண்ணாலே கூடப் பார்க்க மாட்டாங்க. என்ன நின்னுட்டே இருக்கீங்க? உட்காருங்க!

கந்த : பரவாயில்லே. இருக்கட்டும்.

[திலகம் டீ கொண்டு வந்து வைக்கிறாள்.]

குமார் : டீ சாப்பிடுங்க.

கந்த : என்ன சார் இது?

குமார் : நீங்க அவசியம் சாப்பிட்டுத்தான் ஆகணும்.

(இருவரும் டீ அருந்துகின்றனர்)

குமார் : சரி, இனிமேல் வந்த வேலையைக் கவனிக்கலாமில்லையா?

கந்த : அதுக்குத்தானே காத்திருக்கிறேன். இந்தாங்க.

[ஒரு கடிதத்தைக் குமாரிடம் தருகிறான். குமார் அதைப் படிக்கிறான். அவன் முகம் மாறுகிறது.]

குமார் (மிகுந்த கோபத்துடன்): எழுந்திருடா நாற்காலியை விட்டு!

(கந்தசாமி எழுந்திருக்கிறான்)

திலகம் : என்னுங்க இது. அடே புடேன் விட்டு.

குமார் : வேலைக்காரப் பயலுக்கு 'டேய்' இல்லாமெ 'சார்' போடணுமா? வேலைக்காரன் இல்லேன்னு வேதனைப்பட்டியே. நம்ம ஷண்முகத்திடமிருந்து சிபாரிசுக் கடிதாசியோட இதோ வந்திருக்கிறான்.

திலகம் : வேலைக்காரப் பயலுக்கு வந்த சொகுசைப் பார்த்தீங்களா? புல் சூட்டு. தொட்டு.......

கந்த: நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டுப் போடான்னு ஷண்முகந்தானுங்க சொன்னாரு. இந்த உடை எல்லாம்கூட அவருதுதான்.

திலகம் : இவன்கெட்டகேட்டுக்கு டீவேறே!

குமார் : டேய்! (தன் ஜேபியைத் தடவிப் பார்த்தபடி) சில்லறை ஒரு நாலணா வைச்சிருக்கியா?

கந்த : இருக்குதுங்க.

குமார் : கொண்டா சொல்றேன்.

கந்த : இந்தாங்க. (நாலணாவைத் தருகிறான்) எதுக்குங்க நாலணா?

குமார் : இப்போ டீ சாப்பிட்டியே. சும்மா வருமா?

கந்த : நீங்கதானே கொடுத்தீங்க.

குமார்: நான் யாரோன்னு நெனைச்சுக் கொடுத்தேன். நீ நிசத்தைச் சொல்லாமல் சாப்பிட்டதுக்கு அபராதம் நாலணா.

கந்த : அதாவது அபராதத்தை முன் பணமா வசூல் பண்ணுவீங்க. சம்பளத்தைப் பின்னுடிதான் தருவீங்க!

குமார் : அதிகமாப் பேசினால் அஞ்சு ரூபாய் அபராதம் விழும். மாதம் முப்பது ரூபாய் சம்பளம் தருவேன். என் குறிப்பறிந்து நடக்கணும். தவறு பண்ணு அபராதம் விழும்.

கந்த : சரிதானுங்க.

குமார் : இப்போ என்னைத் தேடிக்கிட்டு ஒருத்தர் வருவாரு. அவரை உட்காரச் சொல்லி, காப்பி டிபன் வாங்கிக் கொடுத்திட்டு என்கிட்டே வந்து சொல்லு.

கந்த : காப்பி டிபனுக்குப் பணம்?

குமார் : உன் கிட்டே இருந்தா வாங்கிக் கிட்டுவா. என் கிட்டே நூறு ரூபாய்த் தாளா இருக்குது. அப்புறம் மாத்தித் தரேன். அதோ யாரோ வர்றாங்கோ. உள்ளே போய் பினாயில் எடுத்துக்கிட்டு வா, போ.

[கந்தசாமி உள்ளே செல்கிறான். வசந்தா உள்ளே வருகிறாள். குமார் எதிர் கொண்டு அழைக்கிறான்.]

[திரை]

குமாரின் வீடு—உட்புறம்

[திலகம் ஏதோ வேலை செய்தபடி இருக்கிறாள். கந்தசாமி வருகிறான்.]

கந்த : பினாயில் கொடுங்க!

திலகம் : அதோ அலமாரியில் இருக்குதே. கண் அவிஞ்சா போச்சு?



ஜாம்–பெக்
புண்ணையாற்றி இதமளிக்கிறது

ஜாம்–பெக் உபயோகிக்கும்பொழுது புண்பட்ட இடங்களில் எரிச்சல் ஏற்படுவதில்லை. ஏனெனில் அதில் மூலிகை மருந்துகளும், ஆன்டிசெப்டிக்குகளும் சேர்ந்துள்ளன. சரும உபாதைகளுக்கும் சொரி பொடுகுகளுக்கும் மற்றும் தசைவலிகளுக்கும் உலகப் புகழ்பெற்ற ஜாம்–பெக் உபயோகியுங்கள். இது மிருகக் கொழுப்பு மற்றும் எண்ணெய்கள் சேர்க்கப்படாதது என்பதற்கு உத்திரவாதம்.

அழகூட்டும் தன்மை வாய்ந்த எண்ணெய்ப் பசையற்ற ஜாம்–பெக் மெடிஸினல் க்ரீம் உபயோகியுங்கள்.

Zam-Buk

ஜாம்–பெக்
மூலிகைக்
களிம்பு
மற்றும்
மெடிஸினல் க்ரீம்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



FZY-61-TAM

ஸி. இ. புல்போர்ட் (இந்) பிரைவேட் லிமிடெட், பம்பாய்


சோல் ஏஜண்டுகள்:

தாதா & கம்பெனி

86, நைனியப்ப நாயக் தெரு, சென்னை - 3

வாஸ்மால்

கருமையை வளர்க்கும்
கூந்தல் தைலம்



- நரை மயிரைக் கருமையாக்கிப் பளபளப்பையும் ஊட்டுகிறது.
- கேசவளர்ச்சியை ஊக்குகிறது.
- மென்மையான நறுமணம் கொண்டது. கூந்தல் வளர்ச்சிக்கு உகந்த தைலம்.



தைலமாகவும் போமேடாகவும் சோரடி செய்ய முடியாதமூடியுடைய பாட்டில்களில் எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

ஹைஜீனிக் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
தபால் பெட்டி எண் 1192, பம்பாய்-1

சென்னை ஏஜண்டுகள்:
ஆர். எல். கவுடர் & கம்பெனி
பந்தர் தெரு - சென்னை

சிலோன் ஏஜண்டுகள்:
கபாடியா லிமிடெட்
104, கெய்சர் தெரு, கொழும்பு - 13

ரேடியோ சிலோன் 45 & 21 மீட்டரில் "வாஸ்மால் சங்கீத பஜார்" என்ற நிகழ்ச்சியை பிரதி செவ்வாய் இரவு 8-30 மணிக்குக் கேளுங்கள்

கந்த : நூறு ரூபாய்த் தாள் இருக்கு துன்னரு. அதைக் கொடுங்க.

இலகம் : நூறு ரூபா தானா?

கந்த : ஆமாம், ஐயா சொன்னரு! 'யாரோ வந்திருக்காங்க. காப்பி, டிபன் வாங்கிட்டு வரணும். நூறு ரூபாய்க் தாளா இருக்குது. உங்ககிட்டே இருந்தா வாங்கிட்டு வா'ன்னரு. எங்கிட்டே பணம் இல்லே. அந்தத் தாளைக் குடுங்க. மாத்திட்டு வரேன்.

இலகம் : உன்னே நம்பி நூறு ரூபாய்த் தாளை எப்படித் தர்றது!

கந்த : அப்போ காப்பி டிபன் இல்லேன்னு சொல்லிடவா? இல்லே, வந்தவங்களேயே கேட்டுச் சில்லறை வாங்கிட்டுப் போகவா?

இலகம் : சரி, எங்கிட்டே ஒரு ரூபா இருக்குது. அதைத் தரேன். அவர்கிட்டேயிருந்து அதைப் பின்னடி எனக்கு வாங்கித் தரணும்.

கந்த : சரிம்மா, வர்றேன். [திரை]

குமாரின் ஆபீஸ் அறை

குமார் : நீங்க வருவீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா நான் எதிர்பார்க்கறது ஒரு பெண்மணியா இருக்கும்னு நான் நினைக்கவே இல்லே.

வசந்தா : நானும் இவ்வளவு சுமுகமான வரவேற்பு இருக்கும்னு எதிர்பார்க்கல்லே.

குமார் : பையன் காப்பி டிபன் வாங்கி வரப் போயிருக்கான். அதைச் சாப்பிட்டு...

வசந்தா : அதெல்லாம் எதுக்கு சார்? வந்த வேலையைக் கவனிப்போம்.

குமார் : அதுவும் சரி. நாம் பேசி முடிக்கிறதுக்குள்ளே பையனும் வந்துடுவான்.

வசந்தா : சரி! முதலில் ஒரு பத்தாயிரம் ரூபாய்க்கு...

குமார் : சே, சே! என்ன நீங்க? ஐம்பதாயிரத்துக்குக் கம்மியா நான் எதிலும் இறங்கிறதில்லே.

வசந்தா : ரொம்ப சந்தோஷம். பத்தாயிரத்துக்கே என்ன சொல்லுவீங்களோன்னு கொஞ்சம் தயங்கினேன்.

குமார் : இதிலே தயக்கத்துக்கு ஒண்ணுமே இல்லே. ஒரு முறை எங்கிட்டே வியாபார சம்பந்தம் வைச்சுக்கிட்டா நான் எப்படிப் பட்டவன் என்று உங்களுக்குப் புரிந்து விடும்.

வசந்தா : அப்போ ஐம்பதாயிரத்துக்கே ஏற்பாடு பண்ணிடலாம் இல்லியா?

குமார் : தாராளமாய்.

வசந்தா : வருஷத்துக்கு ஒரே தரமாகத் தொகையை முன்னடி கட்டிட்டா 'ரேட்' குறைச்சல்.

குமார் : ரேட்டா?

வசந்தா : பிரீமியம் தொகை குறைவாகக் கட்டலாம்!

குமார் : அப்போ நீங்க...!

வசந்தா : ஓர் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்ட்!

குமார் : அட, ஆண்டவனே! அம்மா, எனக்குப் பாலிசி கீலிசி ஒண்ணும் வேண்டாம். நான் எதிர்பார்த்த ஆசாமி நீங்க இல்லே. உங்களை யாரோன்னு எண்ணிக்கிட்டுப் பேசிகிட்டிருந்தேன். போய் வாங்க.

வசந்தா : சார்! ஒரு பத்தாயிரம் ரூபாய்க்காவது....

குமார் : பத்து பைசாவுக்குக்கூடப் பேசப்படாது. போய் வாங்க. [திரை]

குமாரின் வீடு—உட்புறம்

[இலகமும் குமாரும் பேசிக்கொண்டிருக்கக் கந்தசாமி வருகிறன்.]

குமார் : என்னடா, எவ்வளவு நேரம்?

கந்த : காப்பி பலகாரம் வாங்கித் தரச் சொன்னீங்களே?

குமார் : ஆமா அவுங்கதான் போயிட்டாங்களே?

கந்த : ஆனல் நான் போக விடுவேனு? வெளியிலே பலகாரத்தைக் கொடுத்து. காப்பியும் ஊத்திக் கொடுத்திட்டேன்!

இலகம்: எனக்கு நம்பிக்கை இல்லே. அவன் ஜேபியைப் பாருங்க. **(குமார் கந்தசாமியின் ஜேபியைச் சோதனை போடுகிறன்.)**

குமார் : காப்பி பலகாரம் வாங்கி இருந்தயானா ஒரு ரூபா எப்படிடா முழுசாக இருக்கும்? **(அந்த ரூபாயை எடுத்துக் கொள்கிறன்)** உனக்கு மூன்று ரூபாய் அபராதம் போட்டிருக்கேன். **(வெளியே கார் சத்தம் கேட்கிறது)** அதோ கார்சத்தம் அவர்தான் வர்றாப்போல் இருக்குது. போய் கூட்டிட்டுவா.

(கந்தசாமி போகிறன்)

குமார் : இலகம்! இன்னிக்கு எல்லாமே நேர்மாறாக இருக்கிறது.

இலகம் : அதைப் பார்த்துப் பேசும்போது என்ன, ஏதுன்னு புரிஞ்சிக்க வக்கில்லே உங்களுக்கு. **(கந்தசாமி அவசரமாக வருகிறன்)**

கந்த : எஜமான்! அவர் டாக்ஸியிலே வந்திருக்காரு. டாக்ஸிக்கு ஒண்ணரை ரூபாய் ஆச்சு. பணம் கொடுக்கச் சொல்றாரு.

குமார் : குடுக்கறதுதானே?

கந்த : எங்கிட்ட இருந்தாத்தானே?

குமார் : எங்கிட்ட ஒண்ணேகால் ரூபாய் தான் இருக்கு.

கந்த : அதைக் குடுங்க, மிச்சத்தை நான் குடுக்கிறேன்.

(குமார் பணத்தைக் கொடுக்கிறன்.)

குமார்: போய்க் கூட்டிட்டு வர்றதுதானே? ஏன் நிக்கறே?

கந்த : யாரைக் கூட்டிட்டு வரச் சொல்றீங்க? அங்கே யாருமே வரல்லேயே!


குமார் : பின்னே பணம் எதுக்கு வாங்கிட்டே?

கந்த : எனக்குச் சேர வேண்டியதை வாங்கிக்கிட்டேன், மிஸ்டர் குமார்!


குமார் : மிஸ்டர் குமாரா! என்னடா, ஏதாவது கேக்குதா?

கந்த : நீங்க எதிர்பார்த்த பெரும் புள்ளி கந்தசாமி நானேதான். ஆனல். உங்களைப் பத்தி விசாரிக்கறதிலே நீங்க பெரிய மோசக்காரருன்னு தெரிஞ்சுது. அதனலே உங்கள் சினேகிதன் சண்முகம் கிட்டே போய் என் வேலைக்காரப் பையனுக்கு என்று சொல்லிக் கடுதாசி வாங்கிக்கிட்டு நானே வந்தேன். இதுக்கு முந்தி வந்த அம்மா என் காரியதரிசி. இங்கே உங்க நிலைமையும் எத்தும் புரிஞ்சிடுச்சு. என் தாளனவும் எனக்குத் திரும்பி வந்திடுச்சு. நீங்க கொடுத்த டீயும் ஒரு ரூபாயும் மிச்சம். போய்வரேன். எத்தனுக்கும் ஒரு எத்தன் இருப்பான்னு இனியாவது புரிஞ்சுக்குங்க.


[கந்தசாமி போகிறன். குமார் மூர்ச்சையாகி விழுகிறன்.]




சென்னை கனரா இண்டஸ்டிரியல் அண்ட் பாங்கிங் ஸிண்டிகேட்டில் பணியாற்றும் திரு சீனிவாசன் சௌ. ராஜலக்ஷ்மியை மணந்தார்.



வில்லிவாக்கம் கல்கி ஏஜண்ட் ஸ்ரீ வெங்கடேசய்யரின் புதல்வர் திரு சீனிவாசனுக்கும் சௌ. கற்பகவல்லிக்கும் திருமணம் நடந்தது.



இலங்கை திரு ராமச்சந்திரனுக்கும், சௌ. சிவயோக சுந்தரிக்கும் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தது.



அஜந்தா பிச்சர்ஸ் உரிமையாளர் திரு அருணாசலம் செட்டியாரின் மைத்துனர் திரு வெங்கடாசலம் சௌ. கண்ணம்மையை மணந்தார்.



திரு எஸ். எஸ். மகாலிங்கம் செட்டியார் புதல்வி சௌ. கமலாவுக்கும் திரு வி. மகாலிங்கம் பி. ஈ. க்கும் திருமணம் நடந்தது.



திரு ஈ. ஜி. நாகராஜனுக்கும் சௌ. சுப்புலக்ஷ்மிக்கும் கோபிச் செட்டிப் பாளையத்தில் விவாகம் நடைபெற்றது.

கல்கி
மாவட்டச் சிறுகதைப் போட்டி

முதற் பரிசு ரூ. 200 இரண்டாவது பரிசு ரூ. 100

★

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ்நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும் எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

ஐந்தாவது போட்டி

திருச்சி மாவட்டம்

விதிகள்

1. கதைகள் திருச்சி மாவட்டத்தின் சூழ்நிலை எல்லாவகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள், பழக்க வழக்கம், காவிரி நதிதீர வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப்போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் "கல்கி" ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசு பெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துப் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற, கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.


8. திருச்சி மாவட்டப் போட்டிக்கான கதைகள் நவம்பர் 30-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்துசேர வேண்டும்.

9. போட்டி முடிவு டிசம்பர் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், தலைப்புக்களிலும் "கல்கி திருச்சி மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—திருச்சி மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி



வழிவழி வாருக வந்த

வசீகரம்

உங்கள் சருமத்திற்குக்—

கிடைக்கச் செய்யுங்கள்

பரவசமூட்டும் புதிய ஓ.கே. சந்தன சோப்பை நீங்கள் பரீட்சித்துப் பார்த்தீர்களா? அதன் நறுமணமும், நவீனமும் உங்கள் ஸ்நானத்திற்கு ஒரு மாயாஜாலத்தன்மையை ஊட்டுகின்றன. அதோடு ஆக்டெமர், லனோலின் மற்றும் அதிகப்படியான கிளிஸரின் ஆகியவற்றின் பாதுகாப்புச் சக்தியையும் சேர்த்துக் கணக்கிடுங்கள்—மென்மையான, ஆரோக்கியமான சருமம் பெறுவது எப்படி என்ற கேள்விக்குச் சரியான விடை கிடைக்கும்.

- ஆக்டெமர் சருமத்திற்கு ஆரோக்கியம் அளிக்கிறது.
- லனோலின் உங்கள் சருமத்தின் மிருதுத்தன்மையைப் பாதுகாக்கிறது.
- அதிகப்படியான கிளிஸரின் சருமத்தை மென்மையாக்குகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக
சந்தனத்தின்
இனிமை மிகு சுகந்தம்.

ஓ.கே

OK

சந்தன
சோப்

இந்திய டாய்லட் சோப்புகளில் சிறந்தது

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்.1.

இனாம்

ஓ. கே. அறிமுகப் பரிசளிப்பு
(3 மாதங்களுக்கு மட்டும்)
3 கட்டி ஓ. கே. சந்தனசோப் வாங்குங்கள். கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப்பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

EP


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைசை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


பிரகாசிக்க
உங்கள் பித்தளை, செம்பு
சாமான்களை தினசரி
பிராஸோ வால் துலக்குங்கள்
BRASSO

வாழ்வு எங்கே?

எஸ்.டி.ஸ்ரீநிவாசன்



சமதரையில் ஓடிக் கொண்டிருந்த மோட்டார் மலை ரஸ்தாவில் ஏற ஆரம்பித்தது. ராஜன் 'கியரை' மாற்றிப் போட்டான். வண்டி ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு, கருநாகம் படுத்திருப்பது போல் வளைந்து வளைந்து செல்லும் தார் ரோட்டில் ஓடியது.

''அப்பா! அப்பா! வாழை எவ்வளவு செழுமையாக இருக்கு இங்கே...'' ரஸ்தாவின் இருபுறங்களிலும் மண்டிக் கிடந்த வாழைப் புதர்களைக் காட்டினான் கண்ணன் தன் கைகளால்.

''அதோ, பாருப்பா! ரோடு எவ்வளவு மேலே போறது... நமக்கு முன்னே போகிற மோட்டார், லாரி, பஸ் எல்லாம் ரொம்பச் சின்னதாக விளையாட்டுப் பொம்மை மாதிரித் தெரியறது....'' இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டே சொன்னாள் கோமதி.

''அதோ ரயில் பாருப்பா! மரவெட்டை ஊர்ந்து போகிறமாதிரிக் கீழே இருந்து மேலே ஏர்றது...'' கோபு சொன்னான்.

''மலை சரிவாக இருக்கே. அது விழுந்துடாது?...'' என்று கோமதி கேட்டாள்.

''அது ஒண்ணும் விழுந்திடாது. அதுக்கு மூணு தண்டவாளம்; மத்தியிலே பல் சக்கரம் மாதிரி இருக்குமாம். அது ரயிலை விழாமல் பிடித்துக் கொள்ளுமாம். எங்கள் 'டீச்சர்' சொல்லியிருக்கா..'' — விளக்கினான் கண்ணன்.

''நாம் வரும்போது ரயிலிலே வருவோமா, அப்பா!...'' திரும்பக் கோமதி பேசினாள்.

தம் குழந்தைகளின் இத்தனை பேச்சுக்களுக்கு இடையே கிருஷ்ணமூர்த்தியின் மனம், தங்கள் டிரைவர் ராஜன் — இதுவரையில் சென்னை அதன் சுற்றுப்புறத்தை விட்டுக் கிளம்பாத அவன் — அந்த மலை ரஸ்தாவில் காரை ஒழுங்காக ஓட்டித் தங்களைப் பத்திரமாக உதகமண்டலத்துக்குக் கொண்டு சேர்ப்பானா என்ற சந்தேகத்திலேயே உழன்று கொண்டிருந்தது.

''ஏம்பா, ராஜன்!...''

கிருஷ்ணமூர்த்தியின் குரல் கேட்டு, வண்டியின் வேகத்தைச் சற்றுக் குறைத்துக்கொண்டு பின்னால் திரும்பினான் ராஜன்.

''கொஞ்சம் ஜாக்கிரதையாகவே போப்பா! 'ஹில் ரோடிலே' உனக்கு இதுதானே முதல் தடவை...?'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

''மலை ரஸ்தா எனக்கு ஒன்றும் புதிசு இல்லே, சார்! கோடைக்கானல் ரோட் ஸ்டேஷனிலிருந்து கோடைக்கானல் வரை ரெண்டு வருஷம் பஸ் ஓட்டியிருக்கேன்...ஏன், இந்த ரோடேகூட எனக்குத் தண்ணீர்பட்ட பாடுதான்... என் கண் ரெண்டையும் கட்டி என் கையிலே வண்டியைக் கொடுத்தால் கூட மேட்டுப்பாளையத்தில் இருந்து நேரே ஒன்றரை மணி நேரத்திலே 'சேரிங் கிராஸிலே' கொண்டு போய் வண்டியை நிறுத்துவேன்...''

ரஸ்தாவின் இருமருங்கிலும் காணப்பட்ட வாழை மரங்கள் கண்களுக்கு மறைந்து, நீண்டு, உயர்ந்து நெருக்கமாக வளர்ந்

துள்ள பாக்கு மரங்கள் மோட்டார் செல்லும் வேகத்தில் பின்னுக்கு ஓடிக் கொண்டிருந்தன.

ரஸ்தா அதிகமாக வளைந்து வளைந்து மேலே ஏற ஆரம்பித்தது. ஒவ்வோர் இடத்தில்-ரஸ்தாவைத் தொடர்ந்து வரும் ரயில்பாதை-ரஸ்தாவுக்கு மேலேயும், வேறு சில இடங்களில் அது ரஸ்தாவுக்குக் கீழேயும் ரஸ்தாவைக் கடந்து சென்றது. கொஞ்சம் கொஞ்சமாகச் சமவெளியின் உஷ்ணம் குறைந்து சில்லென்று மலைக்காற்று வீசியது.

ரஸ்தாவின் இரு மருங்கிலும் பெரிய பெரிய மரங்கள்; மரங்களோடு பின்னிப் பிணைந்திருந்த கொடிகள், கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீல வானத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் மலைச்சிகரங்கள், சிகரங்களின் மேல் தவழ்ந்து செல்லும் மேகக் கூட்டம்; மலை உச்சியில் பட்டு எதிரொளி காட்டும் சூரியனின் வெண் கிரணங்கள்; செங்குத்தான மலைகளில் இருந்து தடதடவென்று கொட்டும் அருவிகள் - மலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டே சென்றனர் குழந்தைகளும் கிருஷ்ணமூர்த்தியும்.

"முதலிலே குன்னூரிலே 'மவுண்ட் ப்ளெஸண்டு'க்கு விடு. அங்கே ஒருத்தரைப் பார்த்துக் கொண்டு அப்புறம் 'ஊட்டி'க்குப் போவோம். 'ஊட்டி'யிலே 'வுட் ஹவுஸ்' ரோடிலே 'விக்டரி'ன்னு நம்ம சிநேகிதர் பங்களா இருக்கு. அங்கே போய்ப் பார்ப்போம். அவர்களும் 'சீஸனு'க்குவந்திருந்தால், சில மணி நேரம் அங்கு தங்கி அப்புறம் ஏதாவது ஒரு 'லாட்ஜிலே' இடம் பார்த்துண்டு போய்விடலாம். எந்த லாட்ஜிலேயும் இப்போ ஒரே கூட்டமாகத்தான் இருக்கும்..."

"வுட் ஹவுஸ் ரோட்!"—ராஜன் ஒரு தரம் தன் மனத்துக்குள்ளேயே அந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டான்.

அதைத் தொடர்ந்து எழுந்தன எத்தனையோ இன்ப நினைவுகள்!

* *

1942-ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜப்பான் இறங்கிச் சில மாதங்கள் தான் ஆகி யிருந்தன. அதற்குள் அது இந்தோ-சீனா, மலேயா எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக் கொண்டு, பர்மாவிலும் தன் சேனைகளைப் புகும்படி செய்துவிட்டது. ரங்கூன் விரோதிகளின் குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

அப்போது ராஜன் பன்னிரண்டு வயதுச் சிறுவன். காரைக்குடியில் இருந்து ரங்கூனுக்குச் சென்று 'பெட்டிக்கடை' வைத்துப் பணம் சம்பாதித்த ஒருவரிடம், ராஜனின் தந்தை குமாஸ்தாவாக இருந்தார். யுத்தம் ஆரம்பிக்கும்போது ராஜனும் அவனுடைய தாய் தந்தையரும் ரங்கூனில் இருந்தனர். யுத்தம் ஆரம்பித்தவுடனேயே ராஜனின் தந்தை தம் மகனையும் மனைவியையும் கப்பலேற்றி இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். ராஜனின் மாமா, உதகமண்டலத்தில், ஒரு செட்டியாரின் பங்களாவைப் பார்த்துக்கொண்டு, 'சீஸ'னுக்கு உதகமண்டலத்துக்கு வரும் செட்டியார் குடும்பத்தினருக்கும் அவருடைய நண்பர்களுக்கும் வேண்டிய சௌகரியங்களைச் செய்து வந்தார். அவருக்கு ஒரே மகள் லட்சுமி.

ரங்கூனிலிருந்து புறப்பட்ட ராஜனும் அவன் தாயும், சென்னைக்கு வந்த சமயம், உதகமண்டலத்தில் இருந்த ராஜனின் மாமா-ஆத்ரேயன்-வேறு ஒரு வேலையாகச் சென்னைக்கு வந்திருந்தார். தம் சகோதரியையும் மருமகனையும் அவர் தம்முடன் உதகமண்டலத்துக்கு அழைத்துச் சென்றார்.

'வுட் ஹவுஸ்' ரோட்டில் இருந்தது 'பியூடி' — ஆத்ரேயனின் எஜமானர் பங்களா, குன்றின் சரிவில் கட்டப்பட்டிருந்த அந்தப் பங்களா ஒரு பரந்த தோட்டத்தின் இடையில் அமைந்திருந்தது. சுற்றிலும் ஓங்கி, உயர்ந்து வளர்ந்திருந்த யூகலிப்டஸ், இதர மலைப் பிரதேச மரங்கள்; அழகான புல்தரை, குரோட்டன்ஸ் செடிகள், பங்களாவை ஒட்டி குற்போல் ஓர் 'அவுட் ஹவுஸ்'. அதுதான் ஆத்ரேயனின் நிரந்தர வீடு. ஆனால் 'சீஸன்' அல்லாத சமயத்தில் —பங்களாச் சொந்தக்காரர்கள் உதகமண்டலத்துக்கு வராத சமயங்களில் — ஆத்ரேயன் குடும்பத்தார் பங்களாவிலேயே வந்து வசிப்பார்கள்.

உதகமண்டலத்தை அடைந்த ராஜனுக்கு எல்லாம் ஒரே பிரமிப்பாக இருந்தது. மலைகளின் வனப்பு, தன் மாமா வசித்து வந்த வீடு, அமைந்திருந்த சூழ்நிலை — எல்லாம் அவன் மனத்துக்கு மிக ரம்மியமாக இருந்தன.

அப்போது லட்சுமி ஏழு வயதுச் சிறுமி.

ராஜன் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்த சில மணி நேரத்துக்குள்ளாகவே அவள் அவனுடன் ஒட்டிக்கொண்டு விட்டாள்.

சண்டையின் வேகம் அதிகமாகியது. ரங்கூனுக்கும் சென்னைக்கும் கப்பல் போக்குவரத்து நின்று விட்டது. ராஜனின் தகப்பனார் கால் நடையாகக் கிளம்பி, காடுமலை, சமுத்திரம் இவைகளைத் தாண்டிக் கல்கத்தாவின் வழியாகச் சென்னைக்கு வந்து, அங்கிருந்து நீலகிரிக்கு வந்து சேர்ந்தார். நீண்ட தூரக் கால் நடைப் பயணத்தாலும், இடையே அவர் அனுபவித்த துன்பங்களினாலும் இந்தியா திரும்பிய அவர் நெடுநாள் உயிர் வாழவில்லை.

அவர் கண் மூடிய ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் ராஜனின் தாயும் அவரைப் பின்பற்றிச் சென்று விட்டாள்.

அநாதையாக விடப்பட்ட ராஜனைத் தம் கண்ணின் கருமணிபோல் கவனித்து வந்தார் ஆத்ரேயன். எப்படியாவது அவனை வளர்த்துப் பெரியவனாக்கித் தன் சக்திக்கு இயன்ற அளவு படிக்க வைத்து, லட்சுமியையும் அவனுக்கே கொடுத்துத் தாம் வேலைசெய்யும் செட்டியார் புதிதாக ஏற்படுத்தி இருந்த ஒரு ஸ்தாபனத்தில் அவனைச் சேர்த்துவிட வேண்டும் என்பது அவருடைய லட்சியம். ஆத்ரேயனின் மனைவியும் ராஜனை மிக அன்போடு நடத்தி வந்தாள்.

வயது ஏற ஏற லட்சுமி—ராஜன் இருவரிடையேயும் ஏற்பட்டிருந்த அன்பு கனிந்தது. ராஜன் முனிஸிபல் ஹைஸ்கூலிலும், லட்சுமி ஆரம்பப் பாடசாலையிலும் படித்து வந்தனர்.

ஆனால் ராஜன் ஆறாம் படிவம் படிக்கும் போது, அவன் நிலையில் சிறிது மாறுதல் கண்டது. படிப்பில் அவனுக்குச் சிரத்தை குறைந்தது; சில துஷ்டப் பிள்ளைகளின் சிநேகமும் அவனுக்கு ஏற்பட்டது.

விஷயமறிந்த ஆத்ரேயன் அவனைக் கண்டித்தார். சில சமயங்களில் முனுமுனுத்தான். அவன் நிலை கண்டு லட்சுமியும் கலங்கினாள். அவனுடைய கெட்ட பழக்கங்களை அவளும் ஜாடையாகக் கண்டித்தாள்.

ஆனால் கண்டனங்கள் அவனைச் சீர்திருத்தவில்லை. அதற்குப் பதில் அவை அவன் முரட்டுத்தனத்தை அதிகமாக்கின. அந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் அவன் தேறவில்லை. ஆத்ரேயன் மிகுந்த கோபமடைந்தார். ராஜனைக் கண்டபடி திட்டினார். அவனுடைய கெட்ட சகவாசம்தான் அவனைக் கெடுத்து விட்டதென்று அவர் அடித்துக் கொண்டார்.

லட்சுமியும் மிக வருத்தப்பட்டாள்.


சில தினங்களில்—தம்முடைய லட்சியத்தின் முதல் கட்டம் நிறைவேறாத வருத்தத்தையும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு—ஆத்ரேயன் ராஜனைத் தம் நண்பன் ஒருவனின் உதவியைக் கொண்டு ஒரு விற்பனை நிலையத்தில் பணியாளனாக அமர்த்தினார்.

ராஜனுக்கு அந்த வேலை அடியோடு பிடிக்கவில்லை. அடிக்கடி அவன் வேலைக்குப் போவதில்லை. அதற்குப் பதில் அவன் புத்தி மோட்டார் ஓட்டுவதில் சென்றது. ஒரு மோட்டார் 'மெகானிக்' அவனுக்குச் சிநேகமானான். தன் மாமாவுக்குத் தெரியாமல் அவனிடம் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொண்டான்.

ஒரு நாள் தம் வீட்டிலிருந்து 'சேர்கிங் கிராஸ்' வழியாக ஆத்ரேயன் ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருந்தார். திடுமென்று, எதிர்த் திசையில் இருந்து, கார் ஒன்று அந்த வளைவில் தாறுமாறாக ஓடி, ரஸ்தா ஓரத்தில் உள்ள நடை பாதையில் ஏறி நின்றது. வண்டியின் உள்ளே கவனித்த அவருடைய கண்கள் நெருப்பாகச் சிவந்தன.

ராஜன் அதில் உட்கார்ந்திருந்தான். ஆத்ரேயன் தமக்கு வந்த ஆத்திரத்தில் நடுரோடு என்றும் பாராமல், இருபது வயதுக் காளை என்பதையும் கவனியாமல் ராஜனைக் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்து, "கௌரவமாக வாழ ஓர் உத்தியோகம் வாங்கிக்கொடுத்தால் அந்த இடத்துக்கு ஒழுங்காகப் போகாமல், மோட்டார் ஓட்டுகிறாயா, மோட்டார்? இந்த ஆபத்தான காரியமெல்லாம் நமக்கு எதற்கடா?" என்று இரைந்துவிட்டு வேகமாக நடந்து சென்று விட்டார்.


அன்று பகல் சாப்பாட்டுக்கு ராஜன் வீட்டுக்கு வந்தான். ஆனால் ஆத்ரேயன் மிகுந்த கோபத்தோடு, "இனி இந்த வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைக்காதே! தொலை" என்று அவனிடம் சொல்லிவிட்டுத் தம் மனைவியையும் மகளையும் பார்த்து, "இனிமேல் இந்தக் கூறு கெட்ட கழுதைக்கு ஒரு பருக்கைச் சாதம் போடக் கூடாது. அவன் எங்கேயாவது



அசுத்தங்கள்




அதை நினைக்கும்போதே பயமேற்படுகிறது! ஏனென்றால் ஈக்கள் அசுத்தங்கள், மலம் முதலான அழுக்குகளைப் புசித்து வளர்ந்து உங்கள் ஆகாரங்களில் வந்து உட்காருகின்றன. அந்த ஆகாரங்களை நீங்கள் உண்ணும்போது, வாந்திபேதி, ரத்தபேதி, சீதபேதி, டைபாய்ட், முடக்குவாதம் முதலிய ரோகங்களை உண்டுபண்ணக் கூடிய கிருமிகள் உங்கள் உடலிற் சென்று கொடிய நோய்க்கு நீங்கள் ஆளாகுகிறீர்கள்—மரணம்கூட உண்டாகலாம். வியாதிகளைக் கொண்டுவந்து உங்கள் வீட்டில் துக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னால் இவ்வித பூச்சிகளைக் கொன்றுவிடுங்கள்.



ஈக்கள்

உணவு





இப்பூச்சிகளை டுகோன் பெய்ட்டினால் கொல்லுங்கள்!

ஈக்களையும், கரப்பான் பூச்சிகளையும், மற்றுமுள்ள ஜந்துக்களையும் கொல்லுகின்ற ஒரு பிரத்தியேகச் சேர்மானப் பொருள் டுகோன் பெய்ட்டில் இருக்கிறது...டுகோன் பெய்ட் மிகச் சிக்கனமானது—பூச்சிகள் கூடுமிடங்களில் கொஞ்சம் டுகோன் பெய்ட்டை உபயோகித்தாலே போதுமானது. டுகோன் பெய்ட் அபாயமற்றது.

டுகோன்
பெய்ட்

BAYER

TB-3

எளிதில் உபயோகிக்கக்கூடியது	தூவுவது சுலபம்	பயனளிக்கிறது
 ஈரமான ஒரு துண்டு கடுதாசியில் டுகோன் பெய்ட்டைத் தூவுங்கள்.	 அக்கடுதாசியை பூச்சிகள் கூடுமிடங்களில் வையுங்கள்.	 பூச்சிகள் டுகோன் பெய்ட்டைச் சாப்பிட்டு, சில நிமிடங்களில் இறந்துபோய் விடுகின்றன.

டுகோன் பெய்ட் பரிசீலனை செய்யப்பட்ட ஒரு பேயர் தயாரிப்பு—
சிக்கா பிரைவேட் லிமிடெட்டுக்காக தயாரிக்கப்பட்டது.
விநியோகஸ்தர்கள்: ஜப்ரீ மேனர்ஸ் அண்டு கம். பிரைவேட் லிட்., பம்பாய்

போகட்டும். எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும்'' என்று உத்தரவிட்டுவிட்டுத் தம் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டார்.

வேறு வழியின்றி அவன் தலையைக் குனிந்து கொண்டு வெளியே நடந்தான்.

அன்று இருட்டிய பிறகு ராஜன் வீட்டுக்கு வந்தான். தன் மாமா மாலையிலேயே குன்னூருக்கு ஏதோ காரியமாகப் போய் மறு நாள் காலையில்தான் வரப் போகும் விஷயம் அவனுக்கு முன்னமேயே தெரியும்.

அன்று பகலெல்லாம் பட்டினி கிடந்ததால் அவன் 'களை'யில்லாமல் காணப்பட்டான். லட்சுமி அவனைக் கண்டதும் கண்கலங்கி விட்டாள். அவனுக்குச் சாப்பாடு போட்டாள்.

மறு நாள் பொழுது விடிந்ததும் மாமா வருவதற்குள் போய்விட வேண்டும் என்று அவன் வெளியே கிளம்பினான்.

லட்சுமி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்.

''என் அப்பாவுக்காக இல்லாமற் போனாலும் போகட்டும். எனக்காகவாவது இனி இதையெல்லாம் விட்டு விட்டுப் பழைய வேலைக்கே போங்கள்'' என்று கெஞ்சினாள்.

''லட்சுமி! இன்று பகலுடன் என் பிள்ளைத்தனமெல்லாம் போய்விட்டது. மோட்டார் ஓட்டுவதிலும், அதன் 'மெக்கானிஸ'த்தைத் தெரிந்து கொள்வதிலும்தான் என் மனம் செல்லுகிறது. அதில் நான் சாமர்த்தியசாலியாவேன் என்ற திடநம்பிக்கை எனக்கு இருக்கிறது. நான் வருகிறேன். இனி என் வாழ்வே உனக்குத்தான். ஒன்றுதான் நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் திரும்பி வரும் வரை எனக்காகக் காத்...'' உணர்ச்சிப் பெருக்கால் அவன் வார்த்தைகள் தடைப்பட்டன. அவள் தலையை ஆட்டினாள். அதில்தான் அவனுக்கு எவ்வளவு இன்பம்!

அவன் புறப்பட்டு விட்டான்.

மதுரைக்குச் சென்றான். 'டிரைவிங்' கற்றுக் கொண்டான். 'கோடைக்கானல் டிரான்ஸ்போர்ட்' கம்பெனியில் வேலை கிடைத்தது.

மூன்று வருஷங்கள் கழித்து அவன் கையில் ஆயிரம் ரூபாய் ரொக்கத்துடன் உதகமண்டலத்துக்குத் திரும்பி வந்தான்.

மாலை ஆறு மணி. விளக்குகள் எல்லாம் போட்டாகி விட்டன.


'சேர்ரிங் கிராஸி'ல் பஸ்ஸிலிருந்து இறங்கிய அவனுக்குத் தூரத்தில் 'வுட் ஹவுஸ் ரோட்' சமீபமாக 'காஸ் லைட்'டுகளுடன் திருமண ஊர்வலம் ஒன்று போவது தெரிந்தது.

பாதையில் சென்ற ஒருவரை விசாரித்தான். லட்சுமிக்கு அன்று காலைதான் கல்யாணமாயிது. மாலையில் ஊர்வலம்.

அவன் தலை சுழன்றது. எந்த ஒரே லட்சியத்துக்காக அவன் இவ்வளவு நாட்கள் பாடுபட்டானோ, அது சிதைந்து விட்டது. இனி அவனுக்கு அங்கு என்ன வேலை?

அன்று இரவே அவன் குன்னூருக்குத் திரும்பி விட்டான். மறு நாள் மதுரைக்குப் புறப்பட்டு விட்டான்.

அதுமுதல் வாழ்வில் பற்றற்றுச் சுவையற்று, சாரமற்று இயந்திரம் போல் அவன் நாட்களைக் கடத்திக்கொண்டு வந்தான்.



''இன்று விடியற்காலையில் சொர்க்கத்தில் இருப்பது போல் கனவு கண்டேன்!''
''அப்புறம்?''
''அப்புறம் என்ன? நீ வந்து எழுப்பவும் தான் உண்மை தெரிந்தது!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பிறகு பஸ் டிரைவர் வேலையையும் விட்டு விட்டுக் கிருஷ்ணமூர்த்தியிடம் காரோட்டும் வேலையில் அமர்ந்தான்.

* * *

குன்னூரில் சிறிது நேரம் தங்கி விட்டு அவர்கள் உதகமண்டலத்தை வந்தடைந்தார்கள்.

ஊட்டிக்குள் நுழையும் போதே கிருஷ்ணமூர்த்தி தம் திட்டத்தை மாற்றிக் கொண்டு 'வுட் ஹவுஸ் ரோட்'டுக்குப் போகாமல் நேராகக் காரை 'இந்தியா லாட்ஜு'க்கு ஓட்டச் சொன்னார்.

எல்லாரும் இறங்கிக் காப்பி பலகாரம் சாப்பிட்டானதும், கிருஷ்ணமூர்த்தி தம் குழந்தைகளை மட்டும் காரில் உதகமண்டலத்தை ஒரு சுற்றுச் சுற்றிக் காட்டி வரும்படி ராஜனிடம் சொன்னார். அவன் காருடன் புறப்பட்டான்.

ஆதி நாளில் அவன் ஓடி ஆடிப் பழகின இடங்கள்; அவனுக்குப் பழைய நாட்களின் கவனம் வந்தது.

அவர்கள் லாட்ஜுக்குத் திரும்பும்போது மணி இரண்டு.

கிருஷ்ணமூர்த்தியின் அறையில் இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தனர்.

ராஜனைப் பார்த்ததும் கிருஷ்ணமூர்த்தி, ''இவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள். ஒரு முக்கிய காரியமாக ஊட்டிக்கு வந்திருக்கிறார்கள். இன்றே இவர்கள் சென்னைக்குத் திரும்ப வேண்டும். 'புளூமௌண்டன்' போய் விட்டது. உடனே நம் காரை எடுத்துக்

கொண்டு இவர்களை மேட்டுப்பாளையத்தில் விட்டு விட்டு வா. அங்கு நீலகிரி எக்ஸ்பிரஸை இவர்கள் பிடிக்க வேண்டும்'' என்றார்.

இளைஞர் இருவரும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டனர்.

இளைஞர்களை ஏற்றிக் கொண்டு வண்டி மேட்டுப்பாளையம் நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

''போன காரியம் என்ன ஆச்சு?'' என்று இருவரில் ஒருவன் கேட்டான்.

''அந்தப் பெண் ஒன்றுக்கும் ஈடு கொடுக்க மாட்டேங்கிறது. எங்க அப்பாவும் அம்மாவும் மூவாயிரம் இல்லையென்றால் குடித்தனம் பண்ணவராதே'' என்கிறார்கள். எங்க அண்ணாவும் அவர்களோடு சேர்ந்துகொண்டு ஆடுகிறான். கல்யாணமாகி நாலு வருஷமாச்சு. இன்னும் அந்தப் பெண் ஒரு நாள்கூட என் அண்ணாவோடு வந்து இருக்கலை. எங்க அப்பா அம்மா, அண்ணா பண்ணறது சுத்தமாக எனக்குப் பிடிக்கலை. போதாக் குறைக்கு அண்ணாவுக்கு வேறு இடத்திலே கல்யாணம் செய்ய அம்மா பெண்ணை நிச்சயம் செய்திருக்கிறாள். அண்ணா சரி என்கிறான். நானாக இருந்தால் அப்பா அம்மா என்ன வேணும்னாலும் சொல்லட்டும் என்று பேசாமல் அவளை அழைத்துக் கொண்டு வந்து விடுவேன். பெண் பெயருக்கேற்றபடி லட்சுமி மாதிரியே இருக்கிறாள். பாவம், அவள் அப்பா ஒரு செட்டியாரிடத்திலே குமாஸ்தாவாக இருந்தாராம். நாலு வருஷங்களாகத் தாம் பட்ட மனக் கஷ்டத்தாலேயே அவர் உயிரை விட்டு விட்டார். பழைய விசுவாசம் காரணமாகச் செட்டியார் 'வுட் ஹவுஸ் ரோட்டிலே' இன்னும் அவளுக்குக் குடியிருக்க இனமாக வீடு விட்டு வைச்சிருக்கார். 'ட்ரெயினிங்' படிச்சிட்டு அந்தப் பெண் ஏதோ ஒரு பள்ளிக்கூடத்திலே வாத்தியார் உத்தியோகம் செய்கிறதாம். 'நீ ஒரு நோட்டீஸ் விட்டாயானால் இந்தக் கல்யாணம் நின்று போயிடும்' என்று நான் எத்தனை தரம் சொன்னாலும் அந்தப் பெண், 'என்னைத் தான் அழைச்சு வைச்சுக்கிட்டு வாழலை. இனிமேல் கல்யாணம் செய்துக்கற பெண்ணோடாவது என் கணவர் சுகமாக வாழட்டும்' என்று சொல்றது. நான் பேசாமல் வந்து விட்டேன்'' என்றான்.

ராஜனின் இதயம் அப்படியே நின்று விடும் போல் இருந்தது!

லட்சுமி வாழாவெட்டியா? அவன் தலை வேகமாகச் சுழன்றது.

*   *   *

அன்று ஞாயிற்றுக் கிழமை.

கிருஷ்ணமூர்த்தி ஊட்டிக்கு வந்து நாலைந்து நாட்களாகி விட்டன.

பகல் இரண்டு மணி இருக்கும். கிருஷ்ணமூர்த்தியின் நண்பர் ஒருவர் ஓடி வந்து, ''சார்! உங்க கார் 'தொட்டா பெட்டா' சிகரம் போகிற வழியிலே கவிழ்ந்துடுத்தாம். காருக்கு ஒரு சேதமும் இல்லையாம். உங்க டிரைவர் காருக்கு அடியிலே அகப்பட்டுண்டு நசுங்கிப் போய்விட்டானும்......'' என்றார் இரைக்க இரைக்க.

''அட, பாவமே! நேற்று ராத்திரித்தானே அவன் என்னிடத்திலே இரண்டாயிரம் ரூபாய்க்குத் தான் எடுத்துக் கொண்டிருக்கும் பாலிஸியையும், இரண்டாயிரம் ரூபாய் ரொக்கத்தையும் கொடுத்து, 'டிரைவர் வேலை நித்திய கண்டம்தானே சார்! எனக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் இதை இன்னாரிடம் கொடுத்து விடுங்கள்' என்று சொல்லி இங்கேதான் 'வுட் ஹவுஸ் ரோடில்' யாரிடத்திலோ அதைக் கொடுக்கச் சொன்னான்! பாவம்! அறியாதவன்! அதுக்குள்ளேயுமா அவனுக்கு இந்தக் கதி!'' என்று அங்கலாய்த்தார் கிருஷ்ணமூர்த்தி.

*   *   *

'' 'ஆயிரம் தரம் உன்னோடு முட்டிக் கொண்டு உன் வாழ்வை நீயே குட்டிச்சுவராக்கிக் கொண்டு விட்டாய்'' என்று உன் மச்சினன் வந்து அன்றைக்கு மன்றாடினானே, அவன் சொன்னபடி ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கக் கூடாது? உன் கணவனுக்கு இன்று தான், இதோ இந்தக் கோயமுத்தூரிலேயே கல்யாணமாம். 'லைனி'லே இருக்கிற சாரதா இப்பத்தான் கோயமுத்தூரிலே விருந்து பஸ்ஸிலே வருகிறாள். கணவனும் மனைவியுமாக, மாலையோடு சுவாமி தரிசனம் செய்யப் போறதுக்குப் போய்க் கொண்டிருக்காளாம். சாரதாதான் கண்ணால் பார்த்தாளாம்.''— லட்சுமியின் தாயார் கண்ணீர் வடித்தாள்.

''என் வாழ்வுதான் பாழாய்ப் போச்சு. அவரும் அவளுமாவது சுகமாக இருக்கட்டும்'' என்று வார்த்தைகள் வெளி வந்தனவே தவிர, லட்சுமியின் கண்களில் மட்டும் கண்ணீர் குளம் போல் நின்றது.

''தபால்!''

லட்சுமி ஓடினாள்.

தபால்காரன் அவளிடம் ஒரு கவரைக் கொடுத்தான்.

அவள் பரபரப்புடன் பிரித்தாள். ராஜனின் கையெழுத்து.

''லட்சுமிக்கு ஆசீர்வாதம்,

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைப்பதற்குள் என் உயிர் உடலை விட்டுப் பிரிந்திருக்கும். இரண்டாயிரம் ரூபாய்க்கு உன் பெயரில் எழுதி வைக்கப்பட்டது-இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியும், இரண்டாயிரம் ரூபாய் ரொக்கமும், 'இந்திரா லாட்ஜ்'ல் தங்கியிருக்கும் என் எஜமானர் கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுத்திருக்கிறேன். அவர் அதை உன்னிடம் சேர்ப்பிப்பார். என்னால் உனக்கு வாழ்வளிக்க முடியவில்லை. என் பணமாவது உனக்கு வாழ்வளித்தால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். உன் நிலைமை முழுதும் எனக்குத் தெரியும்.

உனக்கும் உன் கணவருக்கும் எனது ஆசிகள்.

—ராஜன்''

''அத்தான்!'' — கிரீச்சிட்டுக் கொண்டு கீழே விழுந்தாள் லட்சுமி.

அதே சமயத்தில் கையில் ஒரு கவருடன் கிருஷ்ணமூர்த்தி அந்த 'அவுட் ஹவுஸ்'க்குள் நுழைந்து கொண்டிருந்தார்!



दीवाली की शुभकामनाएँ
Greetings for Diwali
தீபாவளி வாழ்த்துக்கள்
SHALIMAR PAINT
ஷாலிமார்
1902-ம் வருடத்திலிருந்து
இந்தியாவின் வீடுகளுக்கும், இன்டஸ்டிரி
களுக்கும் ஏற்ற பெயின்டை தயாரிக்கிறார்கள்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO. PRIVATE LTD.
CALCUTTA • BOMBAY • MADRAS • NEW DELHI • KANPUR



தீபாவளி விற்பனை!

கொள்ளேகாலம் - ஆரணி - காஞ்சிபுரம்

- பட்டுச் சேலைகள்
- சோலி பீஸ்கள்
- பாவாடை ரகங்கள்

முற்றிலும் புதியவை

25 - 10 - 59 ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

ஆரணி ஸில்க் ஹவுஸ்

(பட்டுச்சேலை உற்பத்தி மற்றும் விற்பனையாளர்கள்)

5, ஸன்னதி தெரு — மயிலாப்பூர் — மதராஸ் 4.

வட இந்தியாவில் எங்கள் சேலை ரகங்கள் அனைத்தும் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும் புது டில்லி: தி சௌத் இந்தியன் கௌப் கோவாப்பரேடிவ் சப்ளை சொஸைடி லிமிடெட் 9, ஜந்தர் மந்தர் ரோடு, ● கல்கத்தா: சுதர்சன் & கோ., 1/4, பிரின்ஸ் குலாம் முகம்மது ரோடு, காலிகாட் போஸ்ட் ● ஜாம்ஷெட்பூர்: மீனாக்ஷி பீடம், 110, பாரத்வாரி ஈஸ்ட்




வேப்பம் சக்தி இணையற்றது

2,000 வருட காலமாக இதன் கிருமிநாசன சக்தி நிரூபிக்கப்பட்டு இருக்கிறது.

உங்கள் ஈறுகளை ஆரோக்கியமாக வைக்கவும் பற்களைப் பலப்படுத்தவும்

நீம் டூத் பேஸ்ட்

வேப்பம் குச்சியின் அற்புத கிருமி நாசன சக்தியும், பல் சுகாதாரத்திற்கான நவீன பொருள்கள் அடங்கிய ஒரே பற்பசை.



தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.
தென் இந்திய ஆபீஸ்: 3/149, பிராட்வே, மதராஸ்-1

உலகப் பெரும் போர்களில் உதயப் போரென முழக்கம் கொட்டிய பாரதப் போர் நோக்கிய கண்களுக்கெல்லாம் ஐயத்தின் பொருளதிகாரத்தை உணர்த்திக் கொண்டிருந்தது.

கௌரவ சேனைகள் ஒருபுறம் கௌரவக் குரலெழுப்பி, ஆணவத்தின் பெருமையை எதிரொலிக்கச் செய்தன. பாண்டவ சேனைகள் மறுபுறம் படை முறையின் அமைதியுடன் வீரக் குரல் எழுப்பி வெற்றித் தேவியை வணங்கின. வாகைமாலை யார் கழுத்தை அலங்கரிக்குமோ என்ற வாட்டம் மட்டும் இரு தரப்பிலும் இருக்கத்தான் செய்தது.

வில்லின் வீரக் காவியமாக விளங்கிய அர்ச்சுனன் என்ன காரணம் பற்றியோ வேதனையின் சோகக் காவியம் போல் காட்சி தந்தான். பாண்டவர் படைக்கே உயிர்நிலை போல் விளங்கிய அவனுடைய வருத்தம் அனைவருக்கும் வியப்பை உண்டுபண்ணியது. போர் மூளும் வரையில் பெரிதும் ஆரவாரம் காட்டிய அவன், களத்துக்கு வந்ததும் கவலைப் படுவானேன்? என்ன நடந்துவிட்டது? யார் எதைச் சொல்லி யிருப்பார்கள்? சொல்லத் தான் யார் இருக்கிறார்கள்? என்ன இருக்கிறது? ஒருவேளை போர் தொடங்கும் முன்னம் தருமர் பகைவர்களுடைய படைநோக்கிக் கரம்கூப்பிச் சென்று பிதாமகர் பீஷ்மரையும், ஆச்சாரியரான துரோணரையும் வணங்கி வாழ்த்துரை கேட்டது தவறாக இருக்குமோ? பெரியவர்களை வணங்கிப் பண்பட்ட பாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனன், இந்தக் காரணம் பற்றிக் கவலைப்பட அவசியமே இல்லையே! பின்.....?

கண்ணனுடைய சிந்தனைச் சுழல் கரு முகில்போல் மேலே கிளம்பி, முடிவெனும் குளிர் காற்றால் அருள் மாரி பொழிந்தது! அரும்பு நகை ஒன்று அவனுடைய தெய்விக இதழ்க்கடையில் மின்னி மறைந்தது. அடுத்து தேர்ப் புரவிகளின் கடிவாளங்களை இழுத்துப் பிடித்துக்கொண்டு குழைந்திடக்கும் மெல்லிடி போல் சிரித்து மெதுவாகத் திரும்பி நோக்கினான். ஆகா! அந்த நோக்கலில்தான் எத்தனை மெய்ப்பாடுகள்! எத்தனை மெய்ம் மறைகள்!

''தனஞ்சயா! போர் முரசம் கொட்டப் போகிறது. ஏன் புது முகத்துடன் தோற்ற மளிக்கிறாய்?''


கண்ணன் ஒன்றும் அறியாதவன் போல் காட்டிக்கொண்டான்.

''இல்லை. பழமையிலும் மிகப் பழமை யான முகம் தெரிந்து என்னைப் படாதபாடு படுத்துகிறது, கண்ணா!''

அர்ச்சுனன் அதைத்துக் கொள்ளாமல் மறு மொழி தந்தான்.

''போர்முகத்துக்குப் புதுத் திலகமிடுகிறாய், அர்ச்சுனா! உன் பழமை வாடை இந்த இடத்துக்குத் தேவை இல்லாதது. இங்கு வீசப்போவதெல்லாம் பிண வாடையும், ரத்தவாடையும்தான்! ஆகவே, மனத்தில் வீர மணம் வீச வேண்டும்! அதுவே விவேகமானதும்கூட!''

''விவேகத்தைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. என்னுடைய அம்பு என்னையே தாக்குவதற்கு நான் ஒருப்பட மாட்டேன்!''



''உன்னை ஏன் தாக்கப்போகிறது, பல்குனா?''

''மதுசூதனராகிய தங்களுக்கு இது புரியவில்லையா? அதோ, பாருங்கள்! அருகே நிற்பவர்கள் அனைவருமே என்னவர்கள்! என்னவர்களை நானே - ஏன்? நம்மவர்களை நாமே தாக்கி, அவர்களும் நம்மைத் தாக்கி அழிந்தொழிந்து போவது முறைகேடான செய்தியல்லவா? வருங்காலம் கலிகாலம் என்று தாங்கள் தானே கூறினீர்கள்? கவனம் செய்து பாருங்கள்! இப்படி ஒரு பெரும் போர் நிகழ்ந்ததை எண்ணி எவ்வளவுக்குத் தாழ்வாகப் பேசுவார்கள் - மதிப்பிடுவார்கள், மக்கள்! ஆகவே...''

''ஆகவே...?''

''என்னைப் பொறுத்தவரை நான் போரில் கலந்துகொள்ளாமல் இருப்பது நலமென்று நினைக்கிறேன்!''

பல்குனனாகிய அர்ச்சுனன் இவ்வாறு கூறி முடித்ததும், கண்ணன் 'ஓகோகோ' வென்று சிரித்தான்! அந்தச் சிரிப்பு அலைத்தின் சிரிப்பாக இருந்தது; ஊழியின் சிரிப்பாக இருந்தது. அர்ச்சுனன் அறிய மாட்டான். அவன் மாயை சூழ்ந்த மனிதன்!

''நான் தோன்றியதன் பயனுக்குரிய காலம் வந்துவிட்டது, அர்ச்சுனா! நீ கிருஷ்ணனின் தோற்றத்தை அறிவாய். கீதையின் உதயத்தை அறிய மாட்டாய். ஏனென்றால் தோற்றத்தின் காரணத் துணைவன் நீ என்பது உனக்கே தெரியாதே!''

''என்ன சொல்கிறீர்கள் மைத்துனரே?''

''செவிகளில் குழப்பம் இல்லையே?''

''.......''

''அர்ச்சுனா! எப்போது உலகில் தருமம் அழிந்து அதருமம் தலை தூக்குகிறதோ, அப்போது நான் அவதரிக்கிறேன்.''

''என்னை மேலும் குழப்ப நினைப்பதானால் சொல்லி விடுங்கள். நான் இவ்விடத்தை விட்டே போய்விடுகிறேன். கண்ணா சுற்றம் தாங்காமல் உற்ற பகையென அம்பை உருவினான் என்ற இழிசொல் இந்த அர்ச்சுனனை அலங்கரிக்கக் கூடாது என்பதுதான் என் வேண்டுகோள்!''

''போர்க்களத்தில் புலம்பல்!''

''இல்லை, ஞான கீதம்!''

''அதுவுமில்லை, உதய கீதை! பல்குனா, உன் காதுகளை மட்டும் குழப்பாமல் சில கணங்கள் இரவல் கொடுப்பாயேயானால் உலகத்தையே ஒரு தொடியில் உன் முன் கொண்டு வந்து நிறுத்தி விடுவேன். பாசம் வேறு படைக்களம் வேறு. எடு காண்டீபத்தை!''

''தயவுசெய்து ரதத்தை மாளிகை நோக்கி ஓட்டுங்கள். மனிதன் மனித தருமத்தை உணர்ந்தாலே போதும். அது உறவினர்களைப் பகைக்கச் சொல்லவில்லை! ஆசானை எதிர்க்கச் சொல்லவில்லை! நண்பர்களுக்குத் துரோகம் விளைவிக்கச் சொல்லவில்லை!''

''இம் மூன்றுக்கும் அப்பாற்பட்ட மனிதன் என்று நீ கூறிய அந்த உறவற்ற-ஆசானற்ற-நட்பற்ற மனிதனை மனிதனே கொல்வது மட்டும் தருமமா தனஞ்சயா?''

''....''

''ஏன் உன் வாய் அடைத்துவிட்டது? எங்கே இதற்கான மறுமொழி? இல்லையே! வீணில் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே! மனித ஆத்மாவைக் கொல்பவனென்றும், கொல்லப்படுபவனென்றும் எவன் நினைக்கிறானோ, அவன் முட்டாளுக்குத் துணை போனவன்! ஆத்மாவுக்குப் பிறப்புக் கிடையாது; அதுபோன்றே இறப்பும் கிடையாது. அது நித்தியமானது; அநாதியானது. இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளாமல் உன் போக்கில் பேசிக் கொண்டே போகிறாய் - பேரவதிக்குப் பிறகு ஏற்பட்ட இப் போர்க்களத்துக்குக் களங்கம் வேறு உண்டுபண்ண நினைக்கிறாய். எடு வில்லவனே உன் தேவதத்தத்தை! முழங்கட்டும் அதன் வெற்றி நாதம்...!''

''இவர்கள் அனைவரையும் கொன்று குவிப்பதாலேயே நாம் மட்டும் நிம்மதியாக இருக்க முடியுமா?''

''நிம்மதி மனிதனைப் பார்த்து வருவித்துக் கொள்ள வேண்டியது! அதன் வருகையே ஞானியின் தோற்றம் அர்ச்சுனா! நானும், நீயும், இங்குள்ள அனைவருமே முன்பும் இருந்தோம்! இப்போதும் இருக்கிறோம்; இனியும் இருப்போம்! ஆன்மா அழிவற்றது; தூய்மையானது. அதற்கு உறவுமில்லை; பகையுமில்லை! பார்த்தா! ஆத்ம ஞானிகளுக்கு ஞான யோகமும், கரும யோகமும்—''

''போதும், மைத்துனரே, போதும்' இப்போது உங்கள் கருத்து ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. சொல்ல வேண்டியவைகளை—''

'சொல்லத்தானே தொடங்கினேன். கீதையை உனக்கு உபதேசிக்கிறேன். அது உன் வெற்றி வில்லைத் தானாகவே எடுக்கத் தூண்டும். ஞானிகள்—'

''வேண்டாம், வேண்டாம், வேண்டாம்! இப்போது தாங்கள் சொல்லும் எதையும் என் காதுகள் அசை போடும் அளவுக்கு இல்லை. வேண்டுமானால் ஆத்மா என்றீர்களே, அந்த ஆத்மாவை—அதாவது தங்கள் ஆத்மாவை என்னுள் புகச் செய்துவிடுங்க !''

''என்ன இது? பச்சைக் குழந்தை போல் பேசுகிறாயே, பார்த்தனே!''




"அதனால்தான் நான் தாங்களாக மாற வேண்டும் என்கிறேன். இப்போது நான் அர்ச்சுனனாக இருப்பதால்தான் தங்கள் கீதத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை; ரசிக்கவும் முடியவில்லை. நானே கிருஷ்ணனாக மாறிவிட்டால்? அப்போது என்னுள் தானாகவே கீதை உருவெடுத்துவிடும். நானும் தெளிந்து என் சுற்றத்தாரையும், ஆசான்களையும், நண்பர்களையும் கழிவிரக்கமின்றிக் கொன்று குவிக்க முடியும்!"

"முடிகிற காரியமாகப் பேசு, அர்ச்சுனா!"

"நான் சொல்வது முடிகிற காரியமல்லவென்றால், கீதையைப் பொறுமையோடு கேட்பதும் முடிகிற காரியமல்ல; அப்படிக் கேட்டாலும் அதை உட்கொண்டு புரிந்து போர் தொடுப்பதும் முடிகிற காரியமல்ல!"

பாசத்தின் கயிற்றால் பம்பரம்போல் சுழன்று மயக்கம் கண்ட அர்ச்சுனன் தேரை விட்டு இறங்கிப் பக்கத்தில் இருந்த குதிரை மேல் பாய்ந்து அமர்ந்துகொண்டு பாசறையை விட்டு அகன்றான். அவன் செல்லும் திசையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த கண்ணன் இலேசாகத் தலையை அசைத்துக்கொண்டே மென்னகை புரிந்தான். அடுத்துப் போரைத் தொடங்கி வைத்தான். பரமாத்மனாகிய கண்ணன் பாண்டவர்பாலிருக்கும்போது யாருக்கு என்ன கவலை?

கீதை உதயமாக வேண்டும். வருங்கால மக்கள் வாழ்க்கைத்தரம் அதனால் செம்மையுற வேண்டும். அதற்குக் காரணப் பொருளாக அர்ச்சுனன் ஆனான். ஆனான் என்று சொல்வதைக் காட்டிலும் கண்ணனால் ஆக்கப் பட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.



உச்சி மாடத்தில் நின்றுகொண்டு சுபத்திரை குருக்ஷேத்திரத் திசை நோக்கிக் கவ மலர்ந்த பதுமை போல் காணப்பட்டாள். கணவன் அர்ச்சுனனையும், அருமை மகன் அபிமன்யுவையும் கண்மலரக் களித்த இதயத்துடன் களம் நோக்கி வழியனுப்பிவைத்த வீரப் பெண்ணரசியாயிற்றே! அவர்கள் வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்ற மன வழிபாட்டுடன் அவ்வப்போது செய்தி கொண்டு வரும் தூதுவனை நோக்கிய வண்ணம் இருந்தாள். அவளுடைய அண்ணன் கண்ணன் தன் பக்கம் இருக்கும்வரை வெற்றி பற்றிய கவலை இல்லையானாலும், கணவனையோ, மகனையோ இழந்துவிட்டோம் என்ற கவலை அணுகக் கூடாதல்லவா? அதற்காக வேண்டி இரு நிலைக் கண்ணீர் அவளுடைய முகமலரில் உருளத்தான் செய்தது.

"சுபத்திரா!"

குரல் வந்த திசை நோக்கி நொடிப் பொழுதில் திரும்பிப் பார்த்தாள். அர்ச்சுனன் போர்க் கோலம் கலையாமல் அவளெதிரே நின்று கொண்டிருந்தான்.

சுபத்திரை தன் வியப்பைக் கணத்துக்கு ஆயிரம் மடங்காகப் பெருக்கிப் பெருக்கி முடிவு காணா வியப்பில், "தாங்களா?" என்றாள். ஒரே சொல்! வெடிப்பில் கேட்கும் ஒரே ஓசை!

"ஏன் சுபத்திரா நீ ஏன் பயங்கரமாகக் காணப்படுகிறாய்?"

"......"

"சுபத்திரா! உன்னைக் கண்டாவது மனக் கலக்கத்தை ஆற்றிக் கொள்ளலாம் என்று வந்தால், நீயும் மாறுபட்ட தோரணையில் காணப் படுகிறாய்! கண்ணன் உன் அண்ணன்தானே?"

"........"

சுபத்திரை அமைதியாக, வடித்த சிலை போல், ஆனால், துடித்து நின்ற கோலத்துடன் காணப்பட்டாள். அவளுடைய கண்கள் கணத்துக்குக் கணம் நிறம் மாறிக்கொண்டிருந்தன. ஒரே சொல்லை உதிர்த்த அவளுடைய செம்பவள வாய், மறு சொல்லையோ, சொற்களையோ உதிர்க்க முடியாத நிலைமை கண்டது. அளவோடு நீண்டிருந்த அமைப்பான மூக்கின் நுனியில் வேர்வை துளிர்த்து நின்றது.

அர்ச்சுனனுக்கு ஒரு கணம் அதிர்ச்சி ஏற்பட்டது. அவன் மேலும் அங்கு நிற்காமல் வெளியேறஎண்ணி ஓரடி பின்னே வைத்தான். அப்போது.....

"நில்லுங்கள்!"

"........"

"எங்கு வந்தீர்கள்? எங்கு போகிறீர்கள்?"

"......."

"இப்போது எதற்காகப் போர்க் களத்தை விட்டுப் புறப்பட்டு வந்தீர்கள்? சங்கநாதம் ஒலித்துப் போர் தொடங்கி விட்டதாம்! தாங்கள் சுபத்திரையைத் தேடிச் சுகம் காண வந்தீர்களோ?"

"சுபத்திரா!"

"ஏன் இந்தக் கோபம்? என்ன நடந்தது சொல்லுங்கள்!"

"ஒன்றும் நடக்கவில்லை. நான் போரில் கலந்துகொள்ளவில்லை. அவ்வளவுதான்."



"சார்! இவன் லைசன்ஸ் இல்லாமே வெடி மருந்து விற்றுக் கொண்டிருந்தான் சார்! புடிச்சுக் கொணாந்துட்டேன்!"

"ஏன்? எதற்காக?"

"பகைவர்கள் அனைவருமே நம் பாசத்துக்குரியவர்கள். ஆசான்கள், அண்ணன் தம்பிகள், மாமன் மைத்துனர்கள், அன்பர்கள் நண்பர்கள் ஆகிய அனைவரையும் கொன்று குவித்து அவர்களுடைய சடலங்கள் மீதுதான் வெற்றிக் கொடியை நாட்ட வேண்டுமென்றால், அந்தக் கொடியை நான் பார்க்க விரும்பவில்லை!"

"பேசுவதற்கும் ஒரு பொருத்தம் வேண்டும். தாங்கள் பேசுவது பொருத்தமாகவே தெரியவில்லை! கௌரவர்கள் நமக்குச் செய்த கொடுமைகளை எண்ணிப் பார்க்காமல் பேசுகிறீர்கள்! தமக்கை பாஞ்சாலிக்கு அவர்கள் செய்த அவமானத்தைச் சிந்திக்காமல் பேசுகிறீர்கள்! அவர்களால் நாம் பட்டபாடு அநேகம்! அவர்களுக்குக் கழிவிரக்கம் ஒரு கேடா?"

"அடுத்தவன் அறிவிலி என்பதற்காக, நாமும் அறிவை இழக்க வேண்டுமா?"

"நான் பேசுவது போர்க்கள உபதேசம்!"

அர்ச்சுனன் சிரித்தான்.

"உன் அண்ணன் கண்ணனும் இப்படித்தான் போர்க்களத்தில் ஞானோபதேசம் செய்யத் தொடங்கி விட்டான்! அதை—"

"தாங்கள் அலட்சியப்படுத்திவிட்டு வந்திருக்கிறீர்கள், அப்படித்தானே? பிரபோ! அண்ணனை அறிந்தும் அவர் சொல்லை மதிக்காமல், அவருடைய அறிவுரைகளைக் கேளாமல் வந்துவிட்டீர்கள் என்றால், தங்களிடம் இந்த சுபத்திரை பேசுவதற்கே தானாதவள்— தகுதியற்றவள். தங்கள் பொருட்டு அண்ணாதாலும் இட்டங்களை அறிந்தும் அறியாதவராகிவிட்டீர்கள். பாண்டவ சேனாதிபதியாகப் பலர் பலரை நிறுத்தியும், தாங்கள் தேர்ந்தெடுத்த திஷ்டத்யும்னரையே நாமும் விரும்புவதாகப் பலர் முன்னிலையில் சொன்னீரென்றால் அதன் உட்பொருளைத் தாங்கள் உணரவில்லை! நல்லது. தாங்கள் அணிந்திருக்கும் வட்டுடையைக் கழற்றி வைத்து விடுங்கள்! வில்லாயுதத்தையும் எறிந்து விடுங்கள்! வட்டுடை பணிந்து வில்லேந்தி நான் செல்கிறேன் குருக்ஷேத்திரம் நோக்கி! கணவருக்கு மாசுண்டாகக் கற்புடைய மனையாள் பொறுக்க மாட்டாள்!"

அர்ச்சுனன் நிலைமயங்கினான். என்ன சொல்வதென்றே அவனுக்குப் புரியவில்லை. தன்னுடைய கட்சியை மனையாள் ஆதரிப்பாள் என்ற கருத்துடன்தான் மாளிகையை நோக்கி வந்தான். ஆனால் சுபத்திரை?...

கண்ணபிரான் தங்கையாயிற்றே!

அர்ச்சுனனுடைய குழப்பம் மேலும் மேலும் குழம்பியது. அந்தக் கிறக்கத்தில் அவ்விடத்தை விட்டு வெறுப்புணர்வுடன் அகன்றான். இத்தனையும் ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த கார்மேக வண்ணன் — கண்ணபிரான் வெளிப்பட்டான். அவனுடைய இதழ்க்கடையில் நகை மென்மையாக அரும்பியது!

உறுதியுடன் இலக்கியம் போல் திகழ்ந்த அந்த ஆலமரம் பார்த்த கண்களுக்கு மயக்கத்தை உண்டுபண்ணியது. அவ்வளவுக்கு மிகப் பெரிய ஆலமரம் அது.

உண்டு கொழுத்த மலைப் பாம்பைப்போல் வளைந்து நெளிந்திருந்த அதன் வேர்க்காலில் அர்ச்சுனன் மனமயக்கம் கண்டு அமர்ந்திருந்தான். அச்சமயம் "ஐயா!" என்ற குரல் கேட்டது.

சற்றே வலுத்த குரலில் அழைப்பு வரவே, அர்ச்சுனன் திரும்பிப் பார்த்தான். அங்கே மிக இளமை வாய்ந்த வேட்டுவன் ஒருவனும், அவனுடைய அழகே உருவான மனையாளும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய தெய்வீக முகங்களிலே மருட்சி துன்ப நடம் புரிந்து கொண்டிருந்தது!

"யார் நீங்கள்?"—சொற்களின் குழப்பம் அர்ச்சுனனைக் காட்டிக் கொடுத்தது.

"நாங்கள், பக்கத்துக் காட்டிலே வாழும் வேட்டுவர்கள். இவள் என் மனைவி. என் பெயர் சூட்சமன்; இவள் பெயர் நானுகப் பார்த்து வைத்தது சூட்சுமி!"

"அது சரி! எங்கு வந்தீர்கள்? என்னை அழைத்ததன் காரணம்?"

"தங்களைக் கண்டால் ஏதோ அரச குமாரரைப் போல் காணப்படுகிறீர்கள். தயவு செய்து, அர்ச்சுனர் என்னும் மாவீரரைத் தங்களுக்குத் தெரியுமானால், அவர் இருப்பிடத்தைக் கூற முடியுமா?"

"ஏன்? எதற்காக?"

"அதை அவரிடம்தான் கூற வேண்டும். குடும்பம் பற்றிய செய்தி அது."

"அப்படியா! நான்தான் அர்ச்சுனன்."

"பரமாத்மா அறிய......"

"பரமாத்மா அறிய......"

அர்ச்சுனன் குரலில் வெறுப்பு எதிரொலித்தது!

வேடன் வில்லைக் கழற்றி அர்ச்சுனன் காலில் படைத்து நெட்டுடலாய் விழுந்து வணக்கம்

உச்ச நிலைக்கு விருத்தியடைந்துள்ள உன்னத விற்பனை.



லோமா உங்கள் கேசத்தை கருமை யுடன் விளங்கச் செய்வதுடன் அதை எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது. அதனுல்தான் பெரியோரும், சிறியோரும், ஆடவரும், பெண்டிரும், எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும், மற்றும் வெளிநாடுகளிலும் லோமாவையே விரும்பி வாங்குகிறுர்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரினில் புகழ்பெற்றது.



பூரண ஏஜென்டுகள் :
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்—1
ஏஜென்டுகள் :
ஸி. நரோத்தம் அன்டு கோ. பம்பாய்—2

TAM

சென்னை ஏஜண்டுகள் : ஜே. பாலபாஸ் & கம்பெனி 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் : செர்குல் கதீர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



"பாட்டி, பாட்டி! ஒரு வெங்காய வெடி வாங்கிக் கொடு, பாட்டி!"
"போடா, அசடு! அமாவாசையும் அதுவுமாக வெங்காயத்தை வாங்குவாங்களோ?"

தெரிவித்தான். அவனுடைய கண்களில் நீர்த் திவலைகள் அரும்பின. அவை இன்பத்தின் அறிகுறியோ? துன்பத்தின் அறிகுறியோ?

"பிரபோ! தங்களைக் கண்டதில் மிகப் பெரும் புண்ணியத்தைக் கண்ட உணர்வு பெறுகிறேன்!"

"செய்தியைத் தெரிவிக்கலாம்!"

"தெரிவிக்கத்தானே வந்திருக்கிறேன், ஸ்வாமி! ஏறத்தாழ இருநூற்றுவர் அடங்கிய என் குலத்தவர்கள் அனைவருக்குமே நான்-இல்லை, நாங்கள் பகைவர்களாகி விட்டோம்! காரணம், என்னுடன் பிறக்காமல் சொந்தம் கொண்டாட வரும் என் பங்காளிகள் ஐவர்! என் பெற்றோர்கள் இறக்கும் தருவாயில் பெருஞ் சொத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டார்கள். அதைப் பறிக்க வேண்டி என் பங்காளிகள் மற்றவர்களைத் தம் கையில் போட்டுக் கொண்டு என்னைக் கொலை செய்ய முயன்று வருகிறார்கள். அத்துடன், அழகே உருவான என் மனைவியையும் கொள்ளையடிக்க முயலுவதாகத் தெரிகிறது. அதற்காக......"

வேடன் தயங்கினான்.

"அதற்காக?"

"தங்களிடம் உள்ள வில்வித்தையை நான் பெற வேண்டும். பெற்று எதிரிகளைத் தொலைத்து விடுக்க வேண்டும். அதை முடியுமா, பிரபோ?"

அர்ச்சுனன் அப்பொழுதும் மெல்லச் சிரித்தான். அற்புதத்தின் கால் பங்கு குறைந்தது.

"வில் வித்தை பயிலுவதென்பது அவ்வளவு எளிதான காரியமன்று. எதற்கும் இன்னும் ஒரு திங்கள் கழித்து என்னை வந்து பார். சீடனாக ஏற்றுப் பயிற்றுவிக்கிறேன்!"

வேடன் 'கோ'வென்று கதறினான்!

"சுவாமி! ஒரு திங்கள் கழித்து நான் வந்து, அதற்குமேல் வித்தை பயிலுவதற்குள், பகைவர்கள் என்னைச் சூறையாடி விடுவார்கள்!"

"வேண்டுமானால் நானே நேரில் வந்து அவர்களை அழித்துக் கட்டி விடுகிறேன்!"

"வேண்டாம், பிரபோ! வேண்டாம். நாங்கள் எங்களுக்குள் பகைவர்களாயிருந்தாலும், வெளியார் தாக்குதலைப் பொறுக்க மாட்டோம்! வெட்டி மடிவது எங்களுக்குள்ளாகவே இருக்க வேண்டும். தங்களை அழைத்துச் சென்று தாக்கினால், வருங்காலச் சந்ததிகள் எங்களை வசைமாரி பொழிவார்கள்! ஆகவே—"

"ஆகவே?"

"தங்களுடைய வில் வித்தையை எனக்குத் தானம் செய்ய வேண்டுகிறேன். அதாவது, நான் தாங்களாக மாற வேண்டும்!"

அர்ச்சுனன் விழித்தான்.

"ஆம், பிரபோ இந்தப் பெண் நெஞ்சத் துக்காகவாவது இரங்கி, தானம் செய்யுங்கள்!"

சூட்காரி விம்மினாள்!

"இது என்ன சங்கடம்! என் வித்தையை நான் எப்படித் தானம் செய்ய முடியும்? வேட்டுவனே! நீ தான் எப்படி நானாக மாற முடியும்?"

சூட்காரி சிரித்தான். ஐயுறத் தக்க நிலையில் சிரித்தான். அண்ட சராசரம் நடுங்கும் அளவுக்குச் சிரித்தான்.

"அர்ச்சுனா! இதேபோல்தான் கண்ணனாக நீ எப்படி மாற முடியும்?"

அர்ச்சுனன் விழித்துக் கொண்டான்! தன்னை மறந்த நிலையில் வேடன் காலில் விழப் போனான். அப்போது "சுவாமி! பொறுங்கள்!" என்றான் வேடன், பெண் குரலில். அர்ச்சுனன் அசந்தான்.

வேடன் உருவம் மாறியது. சுபத்திரை காட்சி தந்தாள்.

பின்னும் சூட்காரி சிரித்தான்.

"அர்ச்சுனா! இப்போதாவது புரிந்து கொண்டாயா, மனித சித்தாந்தத்தை! இப்போதாவது என் நாவுக்கு உன் செவிகளைத் தானமாகத் தருவாயா?"

சூட்காரி கை உருவம் கொள்ள, அர்ச்சுனன் அதிர்ந்தான். அண்ட சராசரத்துக்குத் தோற்றமளித்த அந்த உருவம், அர்ச்சுனன் ஆழ்மனம் கனிந்து வருவது போல் மெல்ல மெல்லக் கனிந்து நிலையடைந்தது. கண்ணன் கம்பீரமாகக் காட்சி தந்தான். சுபத்திரை ஆனந்தக் கண்ணீருடன் தொலைவிலிருந்த தேரில் ஏறிக்கொண்டு இருப்பிடம் நோக்கிச் செல்லுகிறாள்.

இரவு உதயமானது!

இறுக்கம் அஸ்தமித்தது!

குருக்ஷேத்திரம் கண் அழைத்தது!

தேவதத்தம்—அர்ச்சுனனுடைய சங்கம் போர் முழக்கமிட்டது! அதைத் தொடர்ந்து பாஞ்சசன்னியம்—கண்ணனுடைய சங்கு—வெற்றிக்கு வேண்டும் வீரநாதம் எழுப்பியது!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras 10
Managing Editor T. Sadasivam





வெட்டவெளிச்சமான உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை.

ரின்ஸோ-வெண்மை யென்றால் உண்மையான வெண்மை! சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, நூலிழைகளில் மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டாம். வெள்ளைத் துணிகள் வெள்ளைவெளேரென்றும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமாகவும் ஆகிவிடும். புடவைகள் முதல் கைக்குட்டை வரை, குடும்பத்தின் சகல துணிகளுக்கும் உகந்தது ரின்ஸோ!

R.21-50 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

